ஓகஸ்ட் 19, 2001 ரூபா 14.00 அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

## துறைமுகம் பற்றி அரசு அச்சம்

## இருதலை மு. காங். எதிர்த்திசைகளில்

## மட்டக்களப்பில் யுத்தமேகம்!

## டெல்லி என்றால் 'ஜெ'க்கு ஜன்னி



# யாழ்ப்பாணத்தில் தொடரும் விமானக்குண்டுக் கொடுமை!



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

சுடர் ஒளி நாளிதழ் விரைவில் வெளிவருகிறது

# கிழக்கில் படையினரின் தரை வழி விநியோகத்துக்கு புலிகள் சவால்!

## கருணா உட்பட முக்கிய தலைவர்கள் இன்னும் மட்டக்களப்பில்

'அக்கினிச் சுவாலை' படை நடவடிக்கையின் பின்னர் யுத்த முனைகளில் நிலவிய நீண்ட அமைதியின் பின்னணியில் படையினர் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் ஊடுருவித் தாக்குதல் நடத்தி வந்தனர். இதனால் புலிகளும் சில முக்கிய உறுப்பினர்களை இழந்தனர்.

ஆனால், கட்டுநாயக்கவரை ஊடுருவி புலிகள் அண்மையில் நடத்திய தாக்குதல், படைத்தரப்புக்கு 'ஊடுருவித் தாக்குதல்' என்றால் என்ன? என்ற தாற்பரியத்தை உணர்த்தியிருக்கிறது.

இந்தத் தாக்குதலுக்கான திட்டத்தை உருவாக்கியவர் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஒருசமயம் பேசுகையில் ''இலங்கை இராணுவத் தளபதியாகப் பதவி வகிக்கக்கூடிய தகுதி பிரபாகரனுக்கு மட்டுமே உள்ளது'' என்றார்.

பிரேமதாசவின் கருத்து, கட்டுநாயக்கத் தாக்குதல் ஆகிய இந்த இரண்டையும் தொடர்பு படுத்திப் பார்த்து ஆளும் தரப்பு உட்படப் பலரும் வாயடைத்துப் போயுள்ளனர்.

கிழக்கில் போர், வடக்கில் போர் என அங்கலாய்த்துக் கொண்டு ஆயுதக் கொள்வனவுகள் உட்பட பல போர் ஆயத்தங்களை மேற்கொண்டது அரசு.

### மட்டக்களப்பில் மண் மீட்புப் போர்

ஆனால் இந்த மாதிரிக் காலடியில் 'கரண்ட்' அடிக்கும் என அரசோ, படைத்தரப்போ எதிர்பார்க்கவில்லை.

ஆனால், புலிகளின் அடுத்த வெப்பத் தளமாக (Hot bed) தற்போது மீண்டும் மட்டக்களப்பு மாறியுள்ளமைக் கான சமிக்ஞைகள் தென்படுகின்றன.

தென்பகுதிச் சம்பவங்களுடன் தமக்குத் தொடர்பே இல்லை என்ற மாதிரியாய் ஒரு பாரிய யுத்தத்துக்கான ஆயத்த நடவடிக்கைகளில் புலிகள் ஒன்றியுள்ளனர்.

மட்டக்களப்பில் ஆலய உற்சவங்கள் நடைபெற்று வருவதனால் வெளி நடவடிக்கைகள் சற்றுக் குறைந்துள்ளன.

'மட்டுநகர் மண் மீட்புப் போர்' என்ற நடவடிக்கைக்குத் தீவிர ஆயத்தங்களில் புலிகள் இறங்கியுள்ளனர் என அவர்களுக்கு மிக நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த யுத்த ஆயத்தங்கள் படைமுகாம்களில் அபாய அலாரங்களாக ஒலிக்கின்றன.

''அவ்வாறான ஒரு யுத்தம் வெடித்தால் அதை எதிர் கொள்ளத் தயாராகவே இருக்கிறோம்' என்கிறார் அப்பகுதிப் படை அதிகாரி ஒருவர்.

வெறும் வாய்வீச்சுக்களாய் வெளிப்படும் இந்த இறுமாப்புகள் களமுனையில் செல்லுபடியாகுமா என்பது தான் கேள்வி.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை அங்கு ஒரு படைநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் புவியியல் ரீதியாகவும், ஆளணி ரீதியாகவும் புலிகளுக்கே சாதகமான நிலைமை அதிகம்.

மட்டக்களப்பில் எழுபது சதவீத நிலப் பரப்பு புலிகள் வசம் உள்ளது. காத்தான்குடி, ஒட்டமாவடி, ஏறாவூர் மற்றும் மட்டுநகர் புறப் பிரதேசங்களில் அரச கட்டடங்கள் மற்றும் முக்கிய நிறுவனங்களைத் தம்வசம் வைத்துக் கொண்டு ''மட்டக்களப்புக்கு நாம் தான் ராஜா; இங்கு சிவில் நிர்வாகம் தான் நடைபெறுகிறது'' என்று வெளியே கொட்டமடித்துக் கொள்கின்றனர் படையினர்.

மட்டக்களப்புப் பாதுகாப்பு நடவடிக்கையில் விசேட அதிரடிப் படையினர் (Special Task Force), 23–3, 23–4 பிரிகேட் படையணிகள் மற்றும் பொலிஸார் ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.


இந்தப் படை அணிகளால் எந்த ஒரு படை நடவடிக்கையை ஆரம்பிக்கவோ, பாரிய படை நடவடிக்கை ஒன்றை எதிர்கொள்ளவோ முடியாது.

ஏனெனில் இந்த அணிகளின் சில உப பகுதிகள், கட்டுநாயக்க தாக்குதலை அடுத்து நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மீளப்பெறப்பட்டுள்ளன.

பாரிய படை நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் களமுனைப் படை யணிகளான (Teeth Forces) 53, 54,55 டிவிஷன்கள், விசேட படையணிகள் (Special Forces), அதிவேக அதிரடிப் படையினர் (Rapid Deploymet Forces) ஆகியவையும் வடபகுதிப் போர் முனைகளில் குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் மணலாறு தள்ளாடி பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த அணிகள் மட்டக்களப்பில் மருந்துக்கும் இல்லை. புலிகள் அங்கு திடீர் படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டால் களமுனைப் படையணி களை கிழக்குக்கு நகர்த்துவது என்பது கடினமான காரியம்.

படையணிகளை நகர்த்தி தாக்குதலை முறியடிக்கும் முயற்சியை மேற்கொள்ளும் முன்னர் புலிகள் மட்டக்களப்பை மீட்டுவிடுவர். இந்தப் பயம் படையினர் மத்தியிலும் இருக்கத்தான் செய்கிறது.



ஏனெனில், புலனாய்வுத் தகவல்கள் மூலம் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் செய்திகள் படைத்தரப்பு மத்தியில் பேரிடியாக விழுந்துள்ளன.

ஆறு வருடங்களின் பின்னர் மட்டக்களப்புக்குச் சென்றுள்ள 'கிழக்கின் தளபதி' கருணா மற்றும் தாத்தா, சிவம், நாகேஷ் ஆகிய புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இன்னும் வன்னி திரும்பவில்லை.

தெற்கில் இடம்பெற்ற சம்பவங்களால் தமது நடவடிக்கைகளில் எந்த ஓய்வையும் அவர்கள் காட்டவில்லை.

வன்னிக்கும் மட்டக்களப்புக்குமான ஆயுத நகர்த்தல்கள், தகவல் பரிமாற்றங்கள் என்பன தொடர்ந்தும் நடைபெறு கின்றன. படுவான்கரை, வாகரை, கஞ்சிகுடிச்சாறு உட்பட தரவைக்காடு மற்றும் மட்டக்களப்பு காட்டுப் பகுதிகளில் புலிகளின் விசேட அணிகள் தீவிர பயிற்சிகளில் ஈடுபடுகின் றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

'ஓயாத அலைகள்', 'செய் அல்லது செத்து மடி','வன்னித் தாக்குதல்கள்' ஆகியவற்றில் ஈடுபட்டு பல வெற்றிகளை ஈட்டிய ஜெயந்தன் விசேட அதிரடிப் படையணியும் இன்னும் மட்டக்களப்பிலேயே தங்கியுள்ளது.

### உளவு நடவடிக்கைகளில் புலிகள்

ஆலய உற்சவ காலப் பகுதி ஆதலால் தற்போது உளவு நடவடிக்கைகளிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் மட்டும் புலிகளின் அணிகள் நகரில் தீவிரமாகியுள்ளன.

ஒரு படை நடவடிக்கையை மேற்கொண்டு மட்டக்களப்பைத் தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் சுமார் மூன்று லட்சம் மக்களைப் புலிகள் மீட்டுக் கொள்வர். மேற்கொண்டு தமது இராணுவ நகர்வுகளுக்கு ஆள்பலத்தைப் பெற்றுக் கொள்ளவும் புலிகளுக்கு இது வழியமைக்கும்.

பெருமளவு ஆயுதங்களையும் புலிகள் மட்டக்களப்புக்கு நகர்த்தியுள்ளனர். நவீனரக ஆயுதங்களின் தொகுதிகளும் அங்கு போய் சேர்ந்து விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. ஒரு பாரிய படை நடவடிக்கை ஆரம்பிக்கவும், அவ்வாறான ஒரு படை நடவடிக்கையை சுலபமாக எதிர்கொள்ளவும் தேவையான ஆயுத தளவாடங்கள் மட்டக்களப்பில் நிலைகொண்டுள்ள புலிகளின் தாக்குதல் அணிகளைச் சென்றடைந்து விட்டன.

புதிதாகக் கொள்முதல் செய்த விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் மட்டக்களப்பைச் சென்றடைந்துள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வகையில் படை நடவடிக்கை ஒன்று இடம்பெற்றால் அங்கு படையினருக்கான வான் வழி விநியோகங்களுக்கும், வான் தாக்குதல்களுக்கும் புலிகள் சவாலாக உள்ளனர்.

கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் ஆதிக்கம், என்றும் அதிகம் என்றே படைத்தரப்புக் கருதுகிறது.

1995 ஆம் ஆண்டு திருகோண மலைத் துறைமுகம் படைத்தளம் மீதான தாக்குதலில் ரணசுறு, சூறயா ஆகிய தாக்குதல் படகுகள் அழிக்கப்பட்டன. கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி திருகோணமலை மாபிள் பீச் பகுதி வரை ஊடுருவிய புலிகள் ஹெலிக்கொப்டர் ஒன்றையும் சுட்டு வீழ்த்தினர்.

இவ்வாறான கிழக்கின் மீதான புலிகளின் தாக்குதல்களைப் படையினர் அவ்வளவு இலகுவாக மறந்திருக்க மாட்டார்கள்.

கிழக்குக் கரையோரப் பாதுகாப்புக்கென இந்தியாவிடமி ருந்து கொள்முதல் செய்யப்பட்ட சுகன்யா ரக கரையோர ரோந்துக் கப்பல் (Off Shore Patrol Vessel) எஸ்.எல்.என். எஸ் சயுர எனப் பெயரிடப்பட்டுக் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி இலங்கைக் கடற்படையுடன் இணைக்கப்பட்டது. இதை 'வெள்ளை யானை' (White Elephant) என்றனர் சர்வதேச இராணுவ ஆய்வாளர்கள்.

ஆனால் இந்தக் கப்பலை கிழக்குக் கடற்கரைக்குக் கொண்டு சென்றாலும் இந்தக் கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்க ஒரு ரோந்துப் படகு அணி தேவைப்பட்டது.

அவ்வளவு தூரம் கிழக்குக் கடற் பிரதேசத்தில் கடற் புலிகளின் அச்சுறுத்தல் மிகுந்து காணப் பட்டது.

### விநியோக நடவடிக்கைகளுக்கு ஆப்பு

அந்த வகையில் மட்டக்களப்பு படையினருக்கான கடல் வழி விநியோகம் மற்றும் கடல் வழியிலான உதவித் தாக்குதல்கள் என்பவை சாத்தியமற்றவையே. ஆதலால் கடல் வழியான புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கப் போய் இழப்புக்களுடன் பின்வாங்கப் படைத்தரப்பு முயலாது என்றொரு ஊகம்.

மட்டக்களப்பின் சகல பகுதிகளும் புலிகளின் ஷெல் வீச்சுக்கு உட்பட்ட பிரதேசங்கள்.

மட்டக்களப்புக்கான படையினரின் பிரதான விநியோக வீதிகளாக (Main Supply Route) மட்டு–கொழும்பு, மட்டு– கல்முனை, செங்கலடி – பதுளை நெடுஞ்சாலைகள் இருந்தன.

இவற்றில் செங்கலடி – பதுளை நெடுஞ்சாலை கடந்த ஆறுவருடங்களாகப் புலிகளின் கட்டுபாட்டில் உள்ளது. மீதியுள்ள இரண்டு பிரதான விநியோக வீதிகளும் புலிகளின் ஷெல் வீச்சுப் பகுதிக்குள் உள்ளன.

இந்த வகையில் படையினரின் தரைவழி விநியோக நடவடிக்கைகளுக்குப் புலிகள் சவாலாகவே உள்ளனர்.

பார்க்கப் போனால் மட்டக்களப்பில் ஒரு தாக்குதல் மூண்டால், படையினருக்கான மூன்று வழியிலான விநியோக நடவடிக்கைகளுக்கும் புலிகள் ஆப்பு வைக்க ஆயத்தமாயுள்ளனர்.

அக்கினிச் சுவாலை, கட்டுநாயக்க வரிசையில் அடுத்து மட்டக்களப்பு மான்மியம் அரசைக் குறிவைத்திருக்கிறது.

''சமகால அரசியல் நடவடிக்கைகள் மட்டு மல்லாது எந்த நிலையிலும் ஆளும் அரசுடன் ஒத்துப் போகக் கூடாது. சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறோம் என்ற போர்வையில் நாடாளுமன்றம் சென்று இனவாதிகளின் கருத்துக்களுக்குத் துணைபோய் அரசியல் பித்தலாட்டம் பண்ணக்கூடாது'' என்று மட்டக்களப்பு மாவட்ட ஆளும் கட்சி சார்பு எம்.பிக்களை தமது தளத்துக்கு அழைத்துச் சென்று புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவை இவ்வாறிருக்க,

படையினர் தாம் மட்டக்களப்பில் ஒரு படை நடவடிக்கையை ஆரம்பிக்க உள்ளதாக துண்டுப் பிரசுரம் மூலம் பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி சோதனைச் சாவடிகளில் வைத்து விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில்—

அத்தியாவசியப் பொருள்களைச் சற்று அதிகமாக வாங்கிச் சேகரித்துக் கொள்ளுமாறும், செங்கலடி– பதுளை வீதியை அண்மித்துள்ள மக்களை புலிகளின் முகாம்களிலிருந்து விலகி இருக்குமாறும் படையினர் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது ஒரு பிரசார ஸ்டைலாக இருக்குமா? என்பது பொறுத்திருந்து விடை காண வேண்டிய கேள்வி!

—எறியன்

# தமிழ்க் குழுக்கள் மோதலால் வவுனியாவில் ஏற்பட்ட பதற்றம்

சில ஆண்டுகளுக்கு முன்னர், வவுனியாவில், இரு ஆயுதக் குழுக்கள் தமக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் மற்றும் வரிப்பிரச்சினைகள் காரண மாக மோதிக் கொண்டன.

அந்த மோதலில் அப்பாவி இளைஞர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. பலர் காயத்துக்குள்ளானார்கள்.

இப்படியான இயக்க மோதல்கள் மீண்டும் இம்மாதம் 3ஆம் 4ஆம் திகதிகளில் இடம்பெற்றன.

ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் வரதர் அணியும் ரெலோவுமே அவ்வாறு மோதிக் கொண்டன.

இம்மோதல்கள் காரணமாக இருகுழுக்களையும் சேர்ந்த நால்வர் காயமடைந்து, வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இம்மோதல்கள் குறித்து இரு குழுக்களும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி வருகின்றன. இதில் யார் உண்மையான குற்றவாளி என்பது தெரியவில்லை.

வவுனியா குருமண்காட்டுச் சந்தியில் இருந்து வவுனியா மன்னார் வீதியில், 50 மீற்றர் தொலைவில் 'குகன் தாஸ்' பஸ்தரிப்பு உள்ளது. இந்த பஸ்தரிப்பில் ரெலோ இயக்க உறுப்பினர்கள் போதையில், அப்பாதையால் போய் வரும் பெண்களை கேலி செய்வது வழக்கம் என்றும்—

அதே போல் வரதர் அணி உறுப்பினர்கள் அப்பாதையால் போய் வரும் போதும் இவர்கள் இவ்வாறே மிக மோசமாகக் கிண்டல் செய்து வந்துள்ளனர் என்றும்—

இதன் காரணமாக இடம்பெற்ற முரண்பாடுகள் வலுத்ததனாலேயே மேற்படி மோதல் இடம்பெற்றது என்றும்— வரதர் அணியினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களது குற்றச்சாட்டுக்களை ரெலோ மறுக்கின்றது.

இந்த பஸ்தரிப்பிலிருந்து 100 மீற்றர் தொலைவில் வரதர் அணியின் முகாம் உள்ளது.

வரதர் அணியின் முகாமுக்குப் பின்புறமாக 100 மீற்றர் தொலைவிலேயே ரெலோவின் முகாமும் அமைந்துள்ளது.

ரெலோ முகாமின் பின்புறமாக இருந்த காவலரண்மீது வரதர் அணியினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக ரெலோ தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

தமது முகாமைத் தாக்க வந்தவர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவே, தற்காப்புக்காகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக 211 படையணியில் நடைபெற்ற விசாரணையின் போது வரதர் அணியின் மாவட்ட பொறுப்பாளர் சிவம் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற அன்று மாலை வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் இரு குழுக்களையும் அழைத்து விசாரணை நடத்தினார்.

இதனையடுத்து இரு குழுக்களையும் சமாதானம் செய்து வைக்குமாறும், இம்மோதல் தொடர்பாகப் புலன் விசாரணை செய்யுமாறும் அவர் பணித்தார்.

வவுனியா வைரவர் புளியங்குளத்தில் அமைந்துள்ள ரெலோவின் முகாமில், ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டம் ஒன்று நடப்பதாக இருந்தது. காலை 10 மணிக்கு நடக்க இருந்த இக்கூட்டத்திற்கு ரெலோ, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ் மற்றும் ஈ.பி.ஆர். எல்.எவ் இன் சுரேஷ் அணி ஆகியவை கலந்து கொள்ள இருந்தன.

சர்வஜன வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்பது தொடர்பான கலந்துரையாடலை நிகழ்த்துவதற்காகவே மேற்படி கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கருத்துடன் உடன்படாத வரதர் அணியினர், அரசுக்கு ஆதரவு அளிக்கும் நோக்குடனேயே இக் கூட்டத்தைக் குழப்புவதற்காக, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக ரெலோ குற்றஞ் சாட்டுகிறது.

இச்சம்பவம் நடைபெற்ற மறுநாள், இராணுவத்தினரால், ரெலோவினதும், வரதர் அணியினதும் முகாம்கள் சுற்றிவளைக்கப்பட்டன.

சட்டவிரோதமாக ஆயுதங்கள் உள்ளனவா என்பதைக் கண்டுபிடிக்க இராணுவம் தேடுதல் நடத்தியது.

ஆனால், எந்த ஆயுதத்தையும் இராணுவம் கைப்பற்றவில்லை. சாபக்கேடாய்ப் போன எமது நாட்டுக்கு எப்போதுதான் விடிவு வருமோ?

— வன்னியன்

# எதிர்த் திசைகளில் இழுக்கும் இருதலை முஸ்லிம் காங்கிரஸ்!

## ஏட்டிக்குப் போட்டியாகப் பேராளர் மாநாடுகள்


ரவூப் ஹக்கீம்

தியாகத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட கட்சி! முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்காக உயிர்த்தியாகங்களால் உருவான கட்சி! முஸ்லிம் சமூகத்தின் தானைத் தளபதி மர்ஹூம் அஷ்ரப் உருவாக்கிய கட்சி !.

அதுதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

அக்கட்சியின் 17ஆவது பேராளர் மாநாடு கடந்த 11ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றது .

சம்மாந்துறையில் ஒன்று, அக்கரைப்பற்றில் மற்றொன்று. இப்படி ஏட்டிக்குப் போட்டியாக இரு பேராளர் மாநாடுகள் அன்று நடைபெற்றன.

இது என்ன கேலிக்கூத்து என மூக்கில், விரலை வைக்க வேண்டாம்.

முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் நடத்திய முஸ்லிம் காங்கிரஸின் 17ஆவது வருடாந்த பேராளர் மாநாடுகள்தான் ஒரே தினத்தில் இரண்டு இடங்களில் நடந்தேறியுள்ளன.

ரவூப் ஹக்கீம் கூட்டிய முஸ்லிம் காங்கிரஸ் மாநாடு முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாவுல்லா தலைமையில் சம்மாந்துறை நகர மண்டபத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் பேராளர்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் , இறுதியில் நடைபெற்ற அரசியல் அதிஉயர் பீடக் கூட்டத் தீர்மானம்படி முஸ்லிம் காங்கிரஸ் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ரவூப் ஹக்கீமினதும் ஏனைய உயர்பீட நிர்வாகிகளினதும் தெரிவுகள் அங்கீகரிக்கப்பட்டன.

பல தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. நகர மண்டபம் நிறைந்து வழியுமளவு பேராளர்கள் கலந்து கொண்டனர்.

மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ரவூப் ஹக்கீம் மாநாட்டில் உணர்ச்சி மேலிட்டவராக பெரும் நம்பிக்கை கொண்டவராக உரையாற்றினார்.

முஸ்லிம் காங்கிரஸ் மீது இனவாத சேறு பூசி அதனை ஓர் இனவாதக் கட்சியாக இனம் காட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி அரசும், இனவாதக் கும்பல்களும் முயல்கின்றன. இந்த முயற்சி பலிக்காது. முஸ்லிம் காங்கிரஸ் பேராளர்களும் எமது பக்கமே அணி திரண்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

மர்ஹூம் அஷ்ரப் விட்டுச் சென்ற பணியைத் தொடர மக்கள் ஆணை தந்து விட்டனர் என்று அவர் அடித்துக் கூறினார்.

இப்பேராளர் மாநாட்டுக்கு முதல் நாளான வெள்ளிக்கிழமை காத்தான்குடிக்குத் தானும் தனது அணி சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்ற போது பள்ளிவாசலுக்குள்ளே செல்லவிடாமல் தடுத்த சிலரது அட்டகாசத்தையும் அவர் மாநாட்டில் பிரஸ்தாபித்தார்.

இச்சம்பவம் தமது முஸ்லிம் காங்கிரஸுக்கு காத்தான்குடியில் மேலும் ஆதரவைப் பெருக்கியிருப்பதாகவும், இச்சம்பவத்தைக் கண்டு காத்தான்குடி மக்கள் கண்ணீர் விட்டழுததாகவும் நெஞ்சங்கள் நெகிழும் வகையில் அவர் மாநாட்டில் கூறினார்.

கல்முனை நகர மண்டபத்தில் அதே தினம் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்ட எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு கடைசி நேரத்தில் இடம்மாற்ற ப்பட்டு அக்கரைப்பற்று கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

முதல் நாள் காத்தான்குடியில் நிகழ்ந்த சம்பவங்களுக்கு 'பதிலடி' கிடைக்கலாமென்று கருதியே கல்முனை நகர மண்டபத்திலிருந்து இப்பேராளர் மாநாடு அக்கரைப்பற்றுக்கு நகரக் காரணமெனப் பேசிக்கொள்ளப்பட்டது.


ஹிஸ்புல்லா

அக்கரைப்பற்று கலாசார மண்டபமும் பேராளர்களால் நிரம்பியிருந்தது.

எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தலைமையில் நடைபெற்ற இப்பேராளர் மாநாட்டில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் பிரதம அதிதியாகவும் புதிதாக இணைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சேகு இஸதீன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான யூ.எல்.எம்.ஹனிபா (மருதூர்க்கனி), யூ.எல்.எம்.முகைதீன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.உதுமாலெவ்வை, எம்.ஐ.எம்.முகைதீன், உட்படப் பலர் மாநாட்டில் சிறப்பு அதிதிகளாகக்கலந்துகொண்டனர்.

''பட்டம் பதவிகளுக்கு நாம் ஆசைப்பட்டவர்களல்ல. மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் கனவுகளை நனவாக்கும் வண்ணம் அவர் காட்டிய பாதையில் நெறி பிறழாது செல்பவர்கள்'' என மாநாட்டில் அடித்துக்கூறினார் தலைவர் ஹிஸ்புல்லா.

ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒருபோதும் கூட்டுச்சேரப் போவதில்லை என்று மர்ஹூம் அஷ்ரப் உயிருடன் இருக்கும்வரை சூளுரைத்துவந்தாரெனவும்,

அவரது இந்த இலட்சிய நோக்கை ரவூப் ஹக்கீம் இப்பொழுது காற்றில் பறக்கவிட்டுவிட்டதாகவும் ஹிஸ்புல்லா குற்றஞ்சாட்டினார்.

முஸ்லிம் இளைஞர்களை ரவூப் ஹக்கீம் ஆயுத கலாசாரத்துக்குள் கொண்டுசெல்வதாகவும் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் ரவூப் ஹக்கீம் ஆரம்பகால பேராளர்களை அவர்களது தியாகங்களை மதித்து கட்சியில் இடம்கொடுத்து அஷ்ரப்பின் பாதையில் கட்சியை வழிநடத்த முன்வருவாரானால் தனது தலைமைத்துவத்தை விட்டுக்கொடுத்து தமது அணியினரையும் இணைத்துச் செயல்படத் தயாராகவிருப்பதாகவும் ஹிஸ்புல்லா கூறினார்.

மாநாட்டில் உரையாற்றிய அனைத்து மாவட்ட பேராளர் பிரதிநிதிகளும் தலைவர் ஹிஸ்புல்லாவின் தலைமையை அங்கீகரிப்பதாகப் பிரகடனம் செய்தனர்.

இரு அணிகள் அவலம் தொடர்கதைதானா? விட்டுக்கொடுப்புக்களுடன் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அணியாக மாறுமா?

இரு அணியினரும் இணைந்து மர்ஹூம் அஷ்ரப்பின் ஆத்மாவுக்கு நிம்மதி கொடுப்பார்களா? கேட்கிறார்கள் பேராளர்கள்.

—அனார்க்கலி.

## பேராளர் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

''அக்டோபர் 18ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ள சர்வஜன வாக்கெடுப்பை உடனடியாக இரத்துச் செய்யவேண்டும். ஒத்தி வைக்கப் பட்டுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரை உடனடியாகக் கூட்டவேண்டும்''

இவ்வாறு ஜனாதிபதியைக் கோரும் தீர்மானம் சம்மாந்துறை நகர மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 17ஆவது பேராளர் மாநாட்டில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:—

* 1977 முதல் 1994 வரை அதிகாரத்துக்கு வர முடியாத நிலையிலிருந்த சுதந்திரக்கட்சியை ஆட்சிபீடமேற்றிய பெருமை முஸ்லிம் காங்கிரஸையே சேரும். அத்தகைய கட்சியின் தலைவரை அமைச்சரவையிலிருந்து நீக்கியதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

* வடக்கு—கிழக்கு யுத்தத்துக்கு எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு காணப்பட வேண்டும்.

* கடந்த 10 ஆம் திகதி காத்தான்குடி பள்ளிவாசல் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தை மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

* கட்சியின் சட்ட ரீதியிலான தலைவர் ரவூப் ஹக்கீம் என மாநாடு பிரகடனம் செய்கிறது.

* ரவூப் ஹக்கீமுடன் ஜனாதிபதி செய்து கொண்ட கனவான் ஒப்பந்தங்கள் உடனடியாக நடை முறைப்படுத்தப்பட வேண்டும். கல்முனை கரையோர மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

* இஸ்ரேல் தூதரகத்தை திறப்பதற்கு அனுமதி அளித்த இலங்கை அரசின் இரட்டை வேடக் கொள்கைக்கு கண்டனம் தெரிவிப்பது.

* மாவனல்லைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

* ரவூப் ஹக்கீமின் ஆற்றல் , ஆளுமை கண்டு இம்மாநாடு, பெருமிதம் அடைகிறது.

## நிரந்தர அரசியல் தீர்வு குறித்து ஜனாதிபதியிடம் கூட்டணி வற்புறுத்து!

புதிய அரசமைப்பு ஒன்றை முன்வைக்க முன்னர் நோர்வே அரசின் அனுசரணையுடன் விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களை ஆரம்பிக்க ஜனாதிபதி ஆவன செய்ய வேண்டும்.

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் மேற்படித் தூதுக்குழு கட்சியின் செயலர் இரா. சம்பந்தன் தலைமையில் கடந்த 8ஆம் திகதி ஜனாதிபதியை அலரி மாளிகையில் சந்தித்தது.

தூதுக்குழுவில் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராசா, பொன். செல்வராஜா, சிவமகாராசா, யாழ் நகர மேயர் ந.ரவிராஜ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி தான் கொண்டுவரவுள்ள புதிய அரசமைப்புக்கான சர்வஜனவாக்கெடுப்பு நடத்த வேண்டி ஏற்பட்ட சந்தர்ப்ப சூழ் நிலைகளை விளக்கிக் கூறினார்.

தூதுக்குழு நோர்வே அரசின் அனுசரணையுடன் ஏற்கனவே இடம் பெற்ற சமாதான முயற்சிகள் முன்னேற்றம் அற்றுக் கிடப்பதைச் சுட்டிக் காட்டியது.

அத்துடன் கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய பிரதி ஒன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

## சுடர் ஒளி வார மலரின் விலை

எமது அருமை வாசக நேயர்களான உங்களின் அபிமான பத்திரிகை சுடர் ஒளியின் விற்பனை விலை ரூபா 14/—ஆகும்.

ஆயினும் இதுவரை சுடர் ஒளியை அதன் அறிமுக விலையான ரூபா 12/—க்கே பெற்று வந்தீர்கள்.

சுடர் ஒளி அறிமுகமாகி ஒரு வருடமாகிறது. ஆகவே இனிமேல் சுடர் ஒளிக்கு அதன் உண்மையான விலையைக் கொடுக்க வாசக நேயர்கள் தயங்க மாட்டார்கள் என்பது எமது திடமான நம்பிக்கை.

அடுத்த 26.08.2001 இதழில் இருந்தே சுடர் ஒளிக்குச் செலுத்த வேண்டிய விலை அதன் உரிய விலையான ரூபா 14/— என்பதை நேயர்களுக்கு பணிவன்புடன் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி



GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER
Euromind Active Antenna.
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha,
(Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax :075-370018


Eurostar
Sole Distributers in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha,
(Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax :075-370018

என்டெனா பொருத்துதல்


Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

அவசர திருத்தங்கள்


Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

# சுடர் ஒளி

19 ஓகஸ்ட், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com


## சிந்திக்க வேண்டிய விஷயம் இதுதான்!

நிலைமை இப்படி ஆகும் என்று முன் கூட்டியே தெரிந்திருந்தால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க திடுதிப்பென்று தூக்கி எறிந்திருக்க மாட்டார்.

அவரை விலக்கியதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் ஏழு பேரின் ஆதரவை அரசாங்கம் இழந்தது. அந்த இழப்பால் நாடாளுமன்றத்தில் அரசுக்கு இருந்த அற்ப சொற்ப பெரும்பான்மைப் பலம் போய்விட்டது.

அரசாங்கம் ஆட்டம் கண்டது. அரசின் மீது எதிரணி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரவே அரசின் பாடு திண்டாட்டம் ஆகிவிட்டது.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைத்தார். புதிய அரசமைப்பு தேவையா என்று மக்கள் கருத்து அறிய இம்மாதம் 21 ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு நடக்கும் என்றும் ஜனாதிபதி அறிவித்தார்.

மூச்சு விடுவதற்கு இந்த நடவடிக்கைகள் மூலம் அவகாசம் கிடைக்கும் என்று ஜனாதிபதி எதிர்பார்த்தார். அது நடக்கவில்லை. எதிர்மாறான விளைவே ஏற்பட்டது.

எதிரணியினர் செய்த பிரசாரம் மக்களை அரசுக்கு எதிராகப் பொங்கி எழுந்து வீதிப் போராட்டம் நடத்த வைத்தது.

சர்வஜன வாக்கெடுப்பு எதிர்வரும் அக்டோபருக்குப் பின்போடப்பட்டு விட்டது. நாடாளுமன்றத்தை முன்னர் பிரகடனப்படுத்தியபடி செப்டம்பர் ஏழில் அல்லாமல் அதற்கு முன்னரே கூட்டுவது பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது.

அதே வேளை மூன்று உயிர்காப்பு முயற்சிகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒன்று — ரவூப் ஹக்கீமை மீண்டும் அமைச்சராக்கி அவரினதும் மற்றும் அவருடைய அணியில் உள்ள 6 பேரினதும் ஆதரவைப் பெறுவது.

இரண்டு — ஐ.தே.க தலைமையிலான எதிரணியினருடன் சேர்ந்து தேசிய நல்லிணக்க அரசாங்கம் அமைப்பது.

மூன்று — ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவைப் பெற்று அதன் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு சேவை மதிப்பீட்டுக்கால அரசு ஒன்றை அதாவது தகுதிகாண் அரசை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அமைப்பது.

மீண்டும் அரசாங்கத்தை ஆதரித்து, அதற்குப் பிரதி உபகாரமாக அமைச்சர் பதவி பெறுவது தனது சுயமரியாதைக்கும் முஸ்லிம் காங்கிரஸின் நற் பெயருக்கும் இழுக்கு என்று ரவூப் ஹக்கீம் கருதுகிறார்.

அரசாங்கம் ஐ.தே.கவின் மூன்று குழுக்களோடு பேசியும் எந்த இணக்கத்துக்கும் வரமுடியவில்லை. ஐ.தே.கவினரிடம் நிலையான கொள்கை இல்லை என்று குற்றம் சாட்டுகிறார் ஜனாதிபதி.

ஜே.வி.பி ஜனாதிபதியோடு பேச்சுவார்த்தை நடத்திய போது அரசுக்கு ஏழு கோரிக்கைகளை விடுத்தது.

புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. சர்வஜன வாக்கெடுப்பை முற்றாகக் கைவிட வேண்டும். நாடாளுமன்றத்தை உடனே கூட்ட வேண்டும். நீதி, தேர்தல், பொலிஸ், பொதுச்சேவை, ஊடகத்துறை ஆணைக்குழுக்களை நியமிக்க வேண்டும்.

இவை தவிர வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்க வேண்டும். அரசாங்க நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும். அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 ஆகக் குறைக்க வேண்டும். காபந்து அரசாங்கத்தின் பொறுப்பில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும்.

ஜே.வி.பியின் இந்தக் கோரிக்கைகளில் சிலவற்றை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார். ஏனையவை பற்றி அரசாங்க ஆதரவுக் கட்சிகளுடன் கலந்தாலோசனை நடத்தவுள்ளார்.

இந்த முயற்சிகள் எல்லாம் அவசியம்தானா?

யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சு, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு — முக்கியமாக இந்த வாக்குறுதியை அளித்துத்தான் சந்திரிகா குமாரதுங்கா தேர்தல்களில் வெற்றி பெற்று ஜனாதிபதியானார். ஏழாண்டுகள் பதவி வகித்து விட்டார். இந்த வாக்குறுதிகளையோ அல்லது அவருடைய ஏனைய வாக்குறுதிகளையோ அவர் இதுவரை நிறைவேற்றவில்லை.

அரசியல் நிலையற்றுக் குழம்பிப் போய் இருக்கிறது. இதை ஜனாதிபதியே ஒப்புக் கொள்கிறார்.

"இந்த மோசமான நிலையிலிருந்து நாட்டை மீட்டுஎடுத்துக்கட்டி எழுப்புவதற்கு நாம் எல்லோரும் கலந்து பேசி இணக்கப்பாட்டுக்கு வந்து நடைமுறைப்படுத்தக் கூடிய முடிவுகளை எடுக்க வேண்டும். அது நடக்குமானால் 30 நாட்களுக்குள் நான் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகத் தயார்" என்று ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத ஒருவர் காலம் கடந்த பின்னரும் அவற்றை நிறைவேற்றுவதற்கு நிபந்தனை விதித்துக் கொண்டிருப்பது சரியா?

அல்லது—

தாம் செய்ய முடியாதிருக்கும் ஒன்றை செய்யக் கூடிய ஒருவர் செய்து முடிப்பதற்கு வழி விட்டுத்தாம் விலகிக் கொள்வது சரியா?

சிந்திக்க வேண்டிய விஷயம் இதுதான்.

# இன்றைய இக்கட்டான நிலைமை

## தெற்கு: அரசியல் குழப்பம்

## வடக்கு: விமானக் குண்டு வீச்சு

## கிழக்கு: தாக்குதல் அறிவிப்பு

தென்னிலங்கையில் அரசியல் குழம்பிப் போய் இருக்கிறது.

அரசாங்கம் ஆட்டம் கண்டு தட்டுத் தடுமாறி நிற்கிறது. நிச்சயமற்ற நிலையில் கிடந்து திணறுகிறது.

இவ்வளவுக்கும் மத்தியில் வடக்கில் யுத்த விமானங்கள் குண்டு மாரி பொழிந்து தள்ளுகின்றன.

கிழக்கில் பெரிய தாக்குதல் நடக்கப்போகிறது என்று படைத்தரப் பினரால் முன்னறிவித்தல் விடுக்கப் பட்டிருக்கிறது.

பொதுமக்கள் தப்பிப் பிழைக்க விரும்பினால் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்று துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இவை எல்லாம் ஒன்றுக்கொன்று முரணாக இல்லையா?

ஆட்சியில் நின்று பிடிக்க முடியாத அளவுக்கு அரசியல் பிரச்சினைகளில் மூழ்கிப்போயிருக்கும் அரசு வடக்கிலோ, கிழக்கிலோ பெரிய தாக்குதலை நடத்தக் கூடிய நிலையிலா இருக்கிறது? தாக்குதலை நடத்துவதற்கு வேண்டிய மனநிலையாவது அரசுக்கு இப்போது இருக்க முடியுமா?

நீரில் மூழ்கிப் போகிறவன் ஏதாவது ஒரு துரும்பாவது கைக்கு எட்டுமா, அதைப்பற்றிக் கொண்டு தலையை மேலே தூக்க முடியுமா என்று பார்ப்பான்.

அந்த மனிதனைப் போலத்தான் அரசும் இன்று ஐ.தே.கவைப் பிடிக்கலாமா, ஜே.வி.பியைப் பிடிக்கலாமா அல்லது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் காலைப் பிடிக்கலாமா என்று பார்க்கிறது.

ரவூப் ஹக்கீம் ஏதேதோ சொல்லி நழுவிக் கொண்டே இருக்கிறார்.

ஐ.தே.க வுடனும் ஜே.வி.பி யுடனும் ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தைகள் பலன் அளிக்கவில்லை. ஜனாதிபதி படியிறங்கி சர்வஜன வாக்கெடுப்பைப் பின் போட்டு விட்டார்.

நாடாளுமன்றத்தையும் குறித்த தினத்துக்கு முன்னரே கூட்டுவதற்கு ஆலோசித்து வருகிறார்.

வேறு வழியில்லாவிட்டால் அக்டோபர் மாதம் பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுவது பற்றியும் ஜனாதிபதி ஆலோசித்து வருகிறார்.

இந்நிலையில் வடக்கு—கிழக்கில் அரச படைகள் பெரும் தாக்குதல் நடத்தினால் அது ஓர் அதிசயமாகவே இருக்கும்.

ஆயின் வடக்கில் விமானக் குண்டு வீச்சும் கிழக்கில் தாக்குதல் முன்னெச்சரிக்கையும் ஏன்?

வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் தாக்குதல் நடத்துவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி சிறிது காலமாகப் பலமாக அடிபடுகிறது. படையினரின் உளவுப்பிரிவும் அதை ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறது.

அரசாங்கம் அரசியல் சிக்கலில் மாட்டுப்பட்டுத்தவிக்கும் இவ்வேளையில் புலிகள் இதுதான் தருணம் என்று தாக்குதலை ஆரம்பித்து விடலாம் என்று அரசு அஞ்சுகிறது. தவிரவும் கட்டுநாயக்க விமானப்படைத்தளம், சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீதான தமது தாக்குதலால் விமானப்படை தனது வான் சமர் வலுவை வெகுவாக இழந்து விட்டது என்று புலிகள் நினைக்கக்கூடாது என்பதும் அரசின் விருப்பம்.

ஆகவேதான் வடக்கில் விமானங்கள் குண்டு மாரி பொழிந்து தள்ள அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

விமானக் குண்டு வீச்சுகளால் புலிகள் தங்களுடைய தாக்குதல் நடவடிக்கையைச் சற்றுத் தள்ளிப் போடக்கூடும் என்று அரசு நினைக்கிறது. வடக்கில் புலிப் போராளிகள் பெரும் எண்ணிக் கையில் இருந்தால் படையினருக்கு அதனால் எப்பொழுதும் ஆபத்துத்தான்.

மட்டக்களப்பில் படையினர் தாக்குதலைத் தொடங்கப் போகிறார்கள் என்றால் வடபகுதியில் உள்ள புலிப் போராளிகளில் கணிசமான எண்ணிக்கையினர் கிழக்கிற்கு அனுப்பப்படுவார்கள்.

அதனால் புலிகளின் உத்தேச வட பகுதித் தாக்குதல் மேலும் தாமதமாகலாம்.

இதை மனதில் கொண்டுதான் மட்டக்களப்பில் யுத்த பீதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதற்குத் துண்டுப்பிரசுரங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பது ஒரு கருத்து.

பாதுகாப்புப் படையினர் தங்கள் சோதனைச் சாவடிகளில் வைத்துத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகிறார்கள்.

துண்டுப்பிரசுரவாசகங்கள் வருமாறு:—

பாதுகாப்புப் படையினர் எல்.ரி.ரி.ஈ. முகாம்களை நோக்கி மாபெரும் தாக்குதல்

காண்டீபம்

நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். அதனால் கீழ்காணும் அறிவுறுத்தல்களின் படி நடந்துகொள்ளுமாறு பொது மக்களாகிய உங்களிடம் வேண்டிக் கொள்கிறோம்.

1. குறைந்தது எல்.ரி.ரி.ஈ. முகாமைவிட்டு நான்கு கிலோ மீற்றர் தூரம் விலகி இருங்கள்.
2. எல்.ரி.ரி.ஈ. முகாம்களுக்கு போக்குவரத்துச் செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
3. இரண்டு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைச் சேகரித்து வைத்துக்கொள்ளுங்கள்.
4. எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாத உறுப்பினர் களை உங்கள் பகுதியிலிருந்து விலகி யிருக்கும்படி வேண்டிக் கொள்ளவும்.
5. பதுளை வீதியின் அருகேயுள்ள மக்கள் அப்பிரதேசத்தை விட்டு விலகி இருக்கவும்.

நவீன விமானங்களையும் அதிநவீன ஆயுதங்களையும் உபயோகித்து நாம் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாத இயக்கத்தின் நிலைகளை நோக்கி தாக்குதல் நடத்த ஏற்பாடு செய்துள்ளோம்.

எமது படையினரிடம் சரணடைந்தவர்களும் பொதுமக்களும் எங்களுக்கு வழங்கிய தகவல்கள் மூலம் எல்.ரி.ரி.ஈ. முகாம்கள் அமைந்திருக்கும் நிலைகளை அறிந்துவைத்திருக்கிறோம். அந்த நிலைகள் மீது விமானத்தாக்குதல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். இவற்றைக் கவனத்தில் கொள்ளுமாறு உங்களிடம் வேண்டிக் கொள்கிறோம்.

பொதுமக்களாகிய உங்களை எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகவே இப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இவற்றுக்கு நீங்கள் தரும் ஒத்துழைப்பை நாம் பெரிதும் மதிக்கிறோம். வளமான எதிர்காலத்தை பெற்றுக்கொள்வதற்கு பாதுகாப்புப் படையினரோடு இணையுங்கள்.

— இணைப்புத் தலைமையகம்.

இப்படித் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

படையினர் தாம் புலிகளின் நிலைகளைக் குறிவைத்தே தாக்குதல் நடத்துவதாகக் கூறுகிறார்கள். ஆனால் அந்தத் தாக்குதல்களால் பெரும்பாலும் பாதிக்கப்படுபவர்கள் புலிகள் அல்லர்; பொதுமக்கள்தான்.

வடக்கில் பல நாட்களாக நடந்த விமானக்குண்டுத் தாக்குதலின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்பு, பொருட்சேதம் ஆகியவை பற்றிய சரியான விவரங்கள் இன்னும் வெளியிடப்பட வில்லை.

ஆயினும் பல வீடுகள், கடைகள் ஆகியவை சேதமடைந் துள்ளதைக் காண முடிகிறது.

படையினரின் உத்தேச மட்டக்களப்புத் தாக்குதல் பற்றி வேறு விதமான கருத்துகளும் தெரிவிக்கப்படுகின்றன.

இப்போதுள்ள அரசியல் நெருக்கடிக்கு அரசியினால் தீர்வுகாண முடியாது போகுமானால் முன்னர் கூறியபடி எதிர்வரும் அக்டோபரில் தேர்தல் நடத்துவது பற்றி அறிவிக்கப்படலாம்.

யுத்தத்தில் அரச படைகள் குறிப் பிடத்தக்க வெற்றி ஈட்டுமாயின் தேர்தலில் அரசு வெற்றி பெறுவதற்கு அது உதவும்.

அது செய்வோம், இது செய்வோம் என்ற வாக்குறுதிகள் புளித்துப் போய்விட்டன. போர் வெற்றியைப் பெரிதாகக் கூறிப் பிரசாரம் செய்வது நல்ல பலனைத்தரும் என்று அரசு நம்புகிறது.

யாழ்ப்பாணத்தில் தாக்குதல் நடத்திப் புலிகளைத் தோற்கடிப்பது இலகுவான காரியம் அல்ல.

மட்டக்களப்பில் முயன்று பார்க்கலாம் என்ற கருத்து மேல் மட்டத்தில் நிலவு கிறது. எனவேதான் மட்டக்களப்பில் யுத்த சன்னதம் என்று சில அரசியல் ஆய்வாளர் கள் கூறுகிறார்கள்.

இதை மறுப்பவர்களும் இருக்கிறார் கள்.

வெற்றியை இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்தக் கிளம்புபவர்கள் முன் கூட்டி பகிரங்கமாக அறிவித்து விட்டா அதைச் செய்வார்கள். அப்படி அறிவித்தால் எதிரி உஷாராகி விடுவாரே என்கிறார்கள்.

மொத்தத்தில் அரசியலைப்போல இந்தத் தாக்குதல் விஷயமும் ஒரே குழப்பந்தான்.

# புதிய எயிட்ஸ் நோயாளிகள் வடக்கில் உருவாகுவது எப்படி?

தேரடிக்கு பெரியவர்கள் இருவரும் வந்தபோது, அங்கு அமர்ந்திருந்த டானியலும் லோகனும் சின்னாச்சியும் ஏதோ சொல்லிச் சிரித்தபடி இருந்தனர்.

''சந்தோஷமாக இருக்கிற நேரத்திலை கவலைதாற மாதிரியான செய்தியோடை வந்திருக்கிறன்'' என்றபடியே மாஸ்டருடன் அமர்ந்தார் விநாசியர்.

''என்ன அப்படி தலைபோகிற கவலை'' கேட்டான் டானியல்.

''பண்பாடு, கலாசாரம் என்று பெருமையாகப் புளுகியடித்த எங்களுக்கு மத்தியிலை 'எயிட்ஸ்' நோய் பரவத்தொடங்கிவிட்டது. இதன் அபாயத்தை ஒருத்தரும் உணர்ந்த மாதிரித் தெரியவில்லை. அதுதான் மிகப்பெரிய சோகம்'' கவலையின் காரணத்தை விளக்கினார் விநாசியர்.

''நாங்களும் கேள்விப்பட்டனாங்கள். யாழ்ப்பாணத்திலை இளம் பெண் ஒருத்திக்கு 'எயிட்ஸ்' இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்காம். இவவோட சேர்த்து இதுவரை வடக்கு கிழக்கிலை 60 பேர் 'எயிட்ஸ்' நோயாளிகளாக இனம் காணப்பட்டிருக்கினமாம். இலங்கையில் 'எயிட்ஸ்' நோயாளிகளின் எண்ணிக்கையில் இது கணிசமான சதவீதம் என்று சொல்லுகினம்'' என்றான் டானியல்.

''வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வந்து போற இடங்களிலை 'எயிட்ஸ்' அதிகம் இருந்தால் ஆச்சரியமில்லை. ஆனால் எங்கடை ஆள்களுக்குள்ளையும் 'எயிட்ஸ்' இருப்பதுதான் வேதனையையும் கேவலத்தையும் சேர்த்துத்தருகுது'' விசனித்தார் மாஸ்டர்.

அதுவரை வியாபாரத்தில் கவனமாக இருந்த சின்னாச்சி அரட்டையில் கவனத்தைத் திருப்பினாள்.

''வெளிநாட்டுக்காரரைவிட வெளிநாடுகளுக்குப் போட்டு வந்த எங்கடை ஆட்களாலைதானாமே 'எயிட்ஸ்' எங்களுக்குள்ளை பரவுதாம்'' என்றாள் சின்னாச்சி.

'எங்கடை சமூகத்திலை இன்னமும் பாலியல் விஷயங்கள் மிகப் பெரிய பாவ காரியங்கள் என்றும் ஆணும் பெண்ணும் பேசிச் சிரித்தாலே தீட்டுப்பட்டு விடுவதுபோலவும் பழம் பெருச்சாளிகள் கூப்பாடு போடுவதால்தான் தவறான வழிகளுக்கு இளைய தலைமுறை உந்தித் தள்ளப்படுகுது'' வாதிட்டான் டானியல்.

''அப்ப அதுக்காக நீங்கள் விரும்பின மாதிரி நடவுங்கோ என்று விடவேணுமோ'' கேட்டார் மாஸ்டர்.

''இல்லை மாஸ்டர், அப்படிச் சொல்லவில்லை. கால மாறுதல்களைப் புரிந்துகொண்டு அதுக்கேற்ற மாதிரி பெரியவர்கள் நடந்தால் இளைய தலைமுறைகளவாக தவறாக எதுவும் செய்யும் அவசியம் இருக்காது''

''தம்பி என்ன சொல்ல வாறீர்?''

''இன்று காதல் லீலைகளும் ஆபாசக் காட்சிகளும் நிறைந்த சினிமாப் படங்களை வீட்டு ஹோலில் பிள்ளைகள் பார்த்து ரசிக்க அனுமதிக்கும் பெற்றோர், பாலியல் தொடர்பான விழிப்புணர்ச்சியையோ, காதல் பற்றிய தெளிவையோ தமது பிள்ளைகளுடன் பேசுவதை செய்யக்கூடாத காரியமாகவே கருதுகிறார்கள். இதனால் சினிமாக் காட்சிகளை மனதில் திரையிட இளைய தலைமுறை வேலி தாண்டிய வெள்ளாடுகளாக மாறுகின்றன.

''எங்கடை அம்மா அப்பா அப்பிடி ஒன்றும் சொல்லாமலேயே நாங்கள் ஒழுங்காகத்தானே வளர்ந்தனாங்கள் என்று இன்றைய பெரியவர்கள் கேட்கலாம். ஆனால் அவர்கள் இளையவர்களாக இருந்தபோது மனதைச் சலனப்படுத்தும் விதத்தில் உடை முதல் சினிமா வரை எது வுமே இருந்ததில்லை. ஆகவே பழங்கதைகளைப் பேசாமல் மாறும் உலகத்துக்கு ஏற்றாற்போல், குழந்தை வளர்ப்பில் கவனம் செலுத்த வேண்டும்!''

தனது நீண்ட உரையை முடித்து விட்டு மூச்சு வாங்கினான் டானியல்.

''ஆண் —பெண் நட்பை இருதுருவங்களாக எங்கட



## தேரடி அரட்டை

சமுதாயம் பிரித்து வைத்திருக்கும் வரை 'எயிட்ஸ்' போன்ற நோய்கள் சமுதாயத்தை அழிக்க இலகுவாகவே இருக்கும்.

''வெள்ளவத்தை கடற்கரையிலை காதல்ஜோடிகளை வாய்பிளந்து நின்று பார்ப்பவர்கள் யார் என்று யோசித்துப் பாருங்கோ''

''வேறயார், எங்கடை ஆட்கள்தான். ஆக ஒரு ஆணும் பெண்ணும் காதலிப்பதையே புதிதாக வேடிக்கை பார்க்கும் மனநிலையில் இருப்பவர்கள் வெளிநாடுகளுக்குப் போனால், காய்ஞ்சமாடு கம்பிலை விழுந்த கதைதானே. பிறகு எய்ட்ஸ் பரவாமல் என்ன நடக்கும்'' என்றான் டானியல்.

''நக்கிற நாய்க்கு செக்கென்ன? சிவலிங்கமென்ன என்று சுத்திப் போட்டு எயிட்ஸ்லோட நாடு திரும்புவினம். அஜீத் மாதிரி இருக்கிறார், அப்பாஸ் மாதிரி இருக்கிறார் என்று எங்கடை பிள்ளைகளும் நம்பி மயங்க... பிறகென்ன பெரியாஸ்பத்திரியிலை எயிட்ஸ் என்றவுடன் பிறகுதான் எவ்வளவு பெரிய தவறு செய்திட்டம் என்று துடிப்பினம்'' என்றாள் சின்னாச்சி.

''என்ன மாஸ்டர் யோசனை'' என்ற விநாசியரின் குரல் மாஸ்டரை நனவுலகத்துக்கு இழுத்து வந்தது.

''சரியோ, தவறோ, எங்கடை சமுதாயத்துக்குள்ளேயும் எயிட்ஸ் நோய் பரவிப்போட்டுது. இனியும் நாங்கள் பழங்கதை, கலாசாரம் என்று இதைப் பற்றிக் கதைக்காமல் இருந்தால், ஒட்டு மொத்த சமுதாயமும் எய்ட்ஸ் பிடிக்குள் சிக்கிச் சீரழிய வேண்டிய நிலை வரும்'' எச்சரித்தார் மாஸ்டர்.

''அதெப்படி மாஸ்டர் எயிட்ஸ் எல்லோருக்கும் வரும். எய்ட்ஸ் கிருமி உள்ள ஒருவருடன் பாலியல் உறவு வைத்தால்தானே எய்ட்ஸ் கிருமி மற்றவருக்கும் பரவும். ஆனால் அவ்வளவு மோசமாக தவறான வழியில் செல்பவர்கள் எங்கடை சமுதாயத்தில் அதிகரிக்கவில்லையே?'' கேட்டான் லோகன்.

''இதுதான் தம்பி தவறு, கூச்சம் பாவம் என்று சொல்லி 'எயிட்ஸ்' பற்றி விளங்காமப் பேசத் தயங்கினால் இப்படித் தவறான எண்ணங்களால் எயிட்ஸ் மேலும் பரவுவதை தடுக்க முடியாமல் போய்விடும்''

''என்ன மாஸ்டர் பயமுறுத்துகிறார்''

''இல்லைத் தம்பி, எச்சரிக்கை செய்கிறேன். எயிட்ஸ் கிருமி உடலுறவால் மட்டுமல்ல, இரத்தப் பரிமாற்றம் நடக்கும் சமயங்களில் எயிட்ஸ் கிருமி பரவ வாய்ப்புண்டு.

''எயிட்ஸ் கிருமி உள்ள ஒருவருக்கு சலூனில் ஷேவ் எடுக்கும் போது, சிறிதாக வெட்டுப்பட்டு அவரது இரத்தம் பிளேட்டில் பட்டிருந்தால், அதே பிளேட்டைக் கொண்டு மற்றொருவருக்கு ஷேவ் எடுத்தால் அவருக்கும் அந்தக் கிருமிதொற்றி விடும். இவ்வளவு ஏன்? எயிட்ஸ் நோயாளிக்கு ஊசி மருந்து ஏற்றிவிட்டு, அதே ஊசியை முறையாகச் சுத்தப்படுத்தாமல் மற்றவருக்கு குத்தினால் கிருமி பரவும். இதே போல் எயிட்ஸ் கிருமி இருப்பவரின் இரத்த த்தை மற்றவருக்கு ஏற்றினாலும் பரவும்'' விளக்கினார் மாஸ்டர்.

''மருந்துப் பொருள்கள் கிடைப்பதே பெரும் பாடாக உள்ள எங்கடை பகுதிகளில் ஒவ்வொருத்தருக்கும் புது ஊசி பாவிக்கிறது கஷ்டம் தான். ஆனபடியால் மருத்துவமனைகளில் இருக்கிறவை ஊசியை நல்லா சுத்தப்படுத்தியும், சலூன்காரர் ஒவ்வொரு சவரத்துக்கும் புது பிளேட்டை உபயோகப்படுத்தியும் பொறுப்புடன் நடக்க வேணும்'' என்றார் விநாசியர்.

''இதற்குள் இன்னொரு விஷயமும் இருக்கு'' என்ற சின்னாச்சியை மற்றவர்கள் என்ன? என்பது போல் பார்த்தார்கள்.

''எயிட்ஸ் நோய் கொடியதுதான். ஆனால் எய்ட்ஸ் நோயாளிகள் பரிதாபத்துக்குரியவர்கள். எயிட்ஸ் நோயாளியுடன் சாதாரணமாகப் பழகுவதால் ஒரு போதும் எயிட்ஸ் வரப்போவதில்லை. இதை உணர்ந்து எயிட்ஸ் நோயாளிகளை சமுதாயம் ஆதரவாக நடத்தினால் தான், எயிட்ஸ் நோயாளிகள் தம்மை இனம் காட்டவும், அதன் மூலம் அவரிடமிருந்து மற்றவர்களுக்கு எயிட்ஸ் கிருமி பரவாமலிருக்கச் செய்யவும் வழி பிறக்கும்'' என்று கூறிய படியே கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி.

—ஏகலைவன்

# தேரோடும் வீதியெங்கும் வாரோடும் 'பீல்ட் பைக் குறூப்'

## படையினரின் பாணியில் நல்லூரில் இளைஞர்கள் அட்டகாசம்!

இராணுவ மோட்டார் சைக்கிள் பிரிவு (பீல்ட் பைக் குறூப்) குடா நாட்டில் புலி வேட்டை நடத்துகிறதோ என்னவோ பொது மக்களைக் கிலி கொள்ள வைத்து விடுகிறது.

'பீல்ட் பைக் குறூப்'பின் சாகஸங்கள் குறித்துப் பொது மக்கள் மத்தியில் தற்போது பரவலாகப் பல்வேறு கதைகள் பேசப்பட்டு வருகிறது.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அல்லது சந்தேகத்துக்குரியவர்களின் நடமாட்டம் உள்ள பகுதிகளுக்கு விரைந்து சென்று சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்துவதற்காக விசேட பயிற்சி பெற்ற படையினரைக் கொண்டு அமைக்கப்பட்டதே இந்த மோட்டார் சைக்கிள் படையணி.

அச்செழுவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் இந்தப் படைப்பிரிவினர் 'யமஹா' ரக இராணுவ மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துகின்றனர்.

பொழுது விடியும் நேரங்களில் கிராமப் புறங்களில் இந்த மோட்டார் சைக்கிள்கள், படையினரின் வருகையை உணர்த்தும். மோட்டார் சைக்கிள் இரைச்சல்கள் பொது மக்களை கிலிகொள்ள வைத்து விடும்.

அண்மையில் நாவாந்துறைப் பகுதியில் அதிகாலை வேளை திடீரென வந்த மோட்டார் சைக்கிள் குழுவினர் பொது மக்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களால் மூவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

ஆறுபேர் கொண்ட 'பீல்ட் பைக்' படையணியினர் அப்பகுதியில் குறிப்பிட்ட சில வீடுகளுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்களையும், இளைஞர்களையும் தாக்கியுள்ளனர். எதற்காகத் தாக்குகிறார்கள் என்பது தெரியாமல் பீதியடைந்த அவர்கள் உரத்துக் குரல் எழுப்பவே அயலவர்கள் அங்கு திரண்டனர்.

பொது மக்கள் திரண்டு வருவதைக் கண்ட 'பீல்ட் பைக்' குறூப்பினர் 'நைஸாக' அங்கிருந்து நழுவிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இந்தத் தாக்குதல் எதற்காக நடத்தப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனால் அண்மையில் அப்பகுதியில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை அடுத்து இரு அணிகளுக்கு இடையே மூண்ட கோஷ்டி மோதலின் பின்னணியிலேயே இச் சம்பவம் இடம்பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது.

அணி பிரிந்து மோதலில் ஈடுபட்ட கோஷ்டியினரில் ஒரு சாரார் மறுபிரிவினர் தொடர்பாகப் படைத்தரப்புக்கு வழங்கிய தவறான தகவலின் அடிப்படையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக நாவாந்துறை வாசிகள் கூறுகின்றனர்.

தனிப்பட்ட கோப தாபங்களுக்காக மொட்டைக் கடிதங்கள், மிரட்டல் கடிதங்கள் எழுதுதல், படையினருக்குப் பொய்யான தகவல்களை வழங்கித் தங்கள் எதிரிகளைச் சிக்கலில் மாட்டிப் பழிவாங்குதல் என்று சமூகவிரோதச் செயல்கள் அதிகரித்து வருகின்றன.

உதைபந்தாட்டப் போட்டியை அடுத்து ஏற்பட்ட கோஷ்டி மோதலும், அதன் எதிரொலியாக 'பீல்ட் பைக்' படையினரால் பொது மக்கள் தாக்கப்பட்டிருப்பதும் இந்த வகையான சமூக விரோதச் செயலின் விளைவு என்றே கூறப்படுகிறது. ஆயினும் பொதுமக்களிடையிலான பிணக்கில் தலையிடவும், அவர்கள் மீது தாக்குதல் நடத்தவும் படையினருக்கு அதிகாரம் வழங்கியது யார் என்பது கேள்விக்குரியது.

குடாநாட்டில் குருநகர், நாவாந்துறைப் பிரதேசம் விளையாட்டு அணிகளும், ரசிகர்களும் நிறைந்த பகுதி.

இரண்டு முக்கிய விளையாட்டு அணிகளுக்கு இடையே உதைபந்தாட்டத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற கோஷ்டி மோதல் குடாநாட்டின் விளையாட்டுத்துறை ஆர்வலர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.



## வடபுலத்தில்

* * *

'பீல்ட் பைக்' அணியினரின் அட்டகாசங்கள் குறித்த மற்றொரு தகவல் இது. ஆனால் இது படையினரின் 'பீல்ட் பைக்' அணி அல்ல; 'பீல்ட் பைக் குறூப்' பாணியிலான இளைஞர் கோஷ்டிகளின் சாகஸங்கள் பற்றிய தகவல்.

குடாநாட்டின் பெரும் கலாசாரத் திருவிழாவான நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் தற்போது நடைபெற்று வருகிறது.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் மட்டுமன்றி ஆலயச் சூழலில் திருவிழாக்காலத்தை ஒட்டி இடம்பெறும் வர்த்தக நடவடிக்கைகள், பொழுது போக்கு நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் பங்குபற்றுவதற்காகவும் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் அங்கு தினமும் திரளுகின்றனர். ஆலயச் சூழலில் போக்குவரத்து ஒழுங்குகளைப் பேணுவதற்காக ஆலயப் பகுதிக்குள் பிரவேசிக்கும் ஐந்து பிரதான வீதிகளில் வீதித்தடைகள் போடப்பட்டு ஆலய பூசை உற்சவம் இடம்பெறும் நேரங்களில் அந்த வீதிகள் வாகனப் போக்குவரத்துக்காக மூடப்படுகின்றன.

அண்மைய நாள்களில் சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் அணி அணியாக வரும் இளைஞர் கோஷ்டிகள் இந்த வீதித்தடைகளை பலாத்காரமாக மீறி உட்பிரவேசிக்க முயற்சித்த பல சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

இரவுநேர ஊரடங்குச் சட்டம் தற்போது இரவு 10 மணி முதல் அமுல் செய்யப்படுவதால் ஆலயத்தில் மாலைத் திருவிழா முடிந்த பின்னரும் கூட ஆலயச் சூழலில் பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடியிருக்கக் காணப்படுகின்றனர்.

அச்சமயம் பல மோட்டார் சைக்கிள்களில் 'பீல்ட் பைக்' அணியினரின் பாணியில் இரைச்சல் எழுப்பியவாறு வரும் இளைஞர் கோஷ்டிகள் ஆலயச் சூழலில் மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் புரியும் சாகஸங்கள் பெரும் அட்டகாசமாக மாறியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

பல மோட்டார் சைக்கிள்களில் ஒன்றாகச் சேர்ந்து வரும் இவர்கள் வீதித் தடை திறக்கப்படும் வரை வெளியே காத்துநின்று விட்டு தடை நீக்கப்பட்டதும் அட்டகாசமாய் ஆலயப் பகுதிக்குள் பிரவேசிக்கின்றனர்.

பக்தர் கூட்டத்தின் மத்தியில் மோட்டார் சைக்கிள்களை வேகமாகச் செலுத்திச் செல்வதும் ஆள்களோடு ஆள்களாக முட்டிமோதிச் சாகஸம் புரிவதும் இந்த 'பீல்ட் பைக்' அணியினரின் அட்டகாசங்கள்.

இவர்களின் நடவடிக்கைகளால் பக்தர்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

தட்டிக் கேட்க ஆளில்லை என்ற நினைப்பில் வீதி ஒழுங்குகளை மீறி அட்டகாசம் புரியும் இளைஞர்களின் செயல்களால் ஆலயச் சூழலில் விபத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

—வலிகாமத்தான்

# விமான நிலையம் மட்டுமல்ல துறைமுகமும் வாட்டுகிறது அரசை!

## இலங்கை மீது குத்தப்பட்ட யுத்தப் பிராந்திய முத்திரை

"நாம் எல்லைகளுக்குச் செல்லாவிட்டால் எல்லைகள் நம்மை நோக்கி வந்து விடும்'' இப்படி ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா அன்று ஒரு தடவை கூறினார்.

வடக்கு கிழக்குப் போர் தொடர்பாகவே அவர் இதனைக் கூறினார்.

வடக்கு கிழக்குப் போரின் எல்லையாக அன்று வன்னிப் பகுதியே கருதப்பட்டது. இன்று அப்போரின் எல்லை எது?

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம், சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீதான புலிகளின் தாக்குதல்களுக்கு முன் வரை அந்த எல்லை என்னவோ வட பகுதியிலேயே இருந்தது. ஆனால் புலிகள் மேற்கொண்ட அந்த அதிரடித் தாக்குதல்கள் அந்த எல்லைகளைத் தூக்கி எறிந்து விட்டன.

இன்று முழு நாட்டின் மீதுமே யுத்தப் பிராந்தியம் என்ற முத்திரை வெளி நாடுகளில் குத்தப்பட்டுள்ளது.

இந்த முத்திரையை லண்டன் காப்புறுதி மத்திய நிலையமே குத்தியுள்ளது. இலங்கை போர் ஆபத்து மிக்க பிராந்தியம் என்ற தனது இத் தீர்மானத்தை அந்த நிலையம் கடந்த 7ஆம் திகதி அறிவித்துள்ளது.

போரில் ஈடுபட்டுள்ள சியராலியோன், மெசடோனியா, செச்னியா ஆகிய நாடுகளுக்குச் சமமாக இலங்கையையும் அந்நிலையம் இப்பொழுது கணிக்கத் தொடங்கி விட்டது. இதனையே அத்தீர்மானம் குறிக்கின்றது. இத்தீர்மானத்தின் விளைவு என்ன?

கட்டுநாயக்கா தாக்குதலை அடுத்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வரும் சகல விமானங்களினதும் காப்புறுதிக்கு மேலதிக கட்டணம் அறவிடப்படுகிறது. இந்த கட்டண அதிகரிப்பு விமானக் கட்டணங்களைப் பெருமளவு அதிகரித்து விட்டது.

இப்பொழுது இலங்கைக்கு வரும் கப்பல்களுக்கும் காப்புறுதி மேலதிக கட்டணம் விதிக்கும் நிலையை லண்டன் காப்புறுதி நிலையத்தின் தீர்மானம் ஏற்படுத்தியுள்ளது. கப்பல்களுக்கு மட்டுமன்றி கப்பல் சரக்குகளுக்கும் இதனால் மேலதிக காப்புறுதிக் கட்டணம் விதிக்கப்படவிருக்கிறது.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிக்கும் நிலைக்கே இலங்கை உள்ளாக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு வரும் கப்பல்களுக்காக 1500 முதல் 5000 டொலர் வரையான மேலதிக கட்டணத்தை இலங்கையிலுள்ள காப்புறுதி நிறுவனங்கள் சர்வதேச காப்புறுதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டும்.

இதனைவிட கப்பல் சரக்குகளுக்கும் மேலதிக காப்புறுதிக் கட்டணம் செலுத்த நேரிடும். இந்த கட்டண அதிகரிப்புகள் எல்லாம் சங்கிலித் தொடர் போல ஒவ்வொரு துறையையும் பாதிக்கும்.

கட்டுநாயக்கா தாக்குதலை அடுத்து விழித்துக் கொண்ட அரசு கட்டுநாயக்கா விமான நிலைய பாதுகாப்பை உறுதிப் படுத்த அவசர, அவசரமாக காரியத்தில் இறங்கியது. பாது



காப்பில் இருந்த ஓட்டை, உடைசல்களை எல்லாம் அடைக்கத் தொடங்கியது.

விமான நிலையப் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்த அதேவேளை கொழும்புத் துறைமுகப் பாதுகாப்பிலும் அரசின் கவனம் திரும்பியுள்ளது.

துறைமுகப் பாதுகாப்பின் முழுப் பொறுப்பும் கடற்படைத் தளபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக துறைமுகம் ஆறு வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வேறு பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் துறைமுகத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் பாதுகாப்பின் லட்சணத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்து விட்டது.

கொழும்பு நகரத்துக்கு வந்திருந்த பிரேத வாகனம் ஒன்று வழிதவறி துறைமுக வாயில் ஒன்றுக்குள் நுழைந்து விட்டது. வாயிலில் சோதனை எதுவும் மேற்கொள்ளப்படாததால் வாகனம் நேரே துறைமுகத்துக்குள் நுழைந்து விட்டது. பின்னரே இது கண்டுபிடிக்கப்பட்டது.

வாகன சாரதியும் உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வாகனத்தைச் சோதனையிடாததற்காக குறிப்பிட்ட வாயிலில் கடமையில் இருந்த ஐந்து பாதுகாப்பு ஊழியர்கள் வேலையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

கப்பல்கள் மீது விதிக்கப்பட்டுள்ள மேலதிக கட்டணங்கள் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தை மிக மோசமாகப் பாதிக்கும்.

இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்களை ஆபத்தான நிலைக்கு உள்ளாக்கும். இறக்குமதிப் பொருட்களின் விலைகளை மேலும் உயர்த்தும். இவ்வாறு வர்த்தக சமூகத்தினர் அரசுக்கு அபாய அறிவித்தல் விடுத்துள்ளனர்.

விமான நிலையத்தாக்குதலை அடுத்து உல்லாசப் பயணத் துறையில் பெருமளவு பாதிப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. துறைமுகத்தாலும் பாதிப்புகள் ஏற்படத் தொடங்கி விட்டால் நாடு பெரும் நெருக்கடிக்கு உள்ளாக நேரிடும். இந்த நெருக்கடியைத் தடுக்க அரசு உடனடியாக செயலில் இறங்க வேண்டும் என்று வர்த்தகப் பிரமுகர்கள் கோரியுள்ளனர்.

அரசும் நெருக்கடிகளை உணர்ந்து செயலில் இறங்கியுள்ளது. விமான நிலைய, துறைமுகப் பாதுகாப்பை உறுதிப் படுத்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் லண்டன் காப்புறுதி நிலைய தீர்மானம் சரியானதல்ல என்று துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரொனி டிமெல் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

குழுவொன்றுக்குத் தலைமை வகித்து அவர் லண்டனுக்குச் செல்லவும் திட்டமிட்டுள்ளார். இலங்கை யுத்தப் பிராந்தியம் என்ற வெளிநாட்டுக் கணிப்பீட்டை அரசு எவ்வாறு மாற்றப் போகிறது.

விமானப் படைத்தள, விமான நிலையத் தாக்குதல்கள் அரசாங்கத்தின் முதுகில் சுமத்தியுள்ள சுமைகள் மலையளவானதாகும். இந்தச் சுமைகளை இறக்கி வைக்கவே பல ஆண்டுகள் செல்லும். இந்த நிலையில் துறைமுகம் சுமத்தப்போகும் சுமைகளும் முதுகில் ஏறிக் கொண்டால் கேட்கவே வேண்டாம்.

— எட்வேட்

---

## கவிதைப் பந்தல்

### முன்னிரவு மின்வெட்டால் — வந்த பாட்டு!

வங்கமெலாம் மேற்பறந்து
பொங்கிவரும் ஆவி
செங்களத்து ஈரமெலாம்
தாங்கிவந்து — இங்கு
சிந்தி நடைக்கூத்தாடிச்
சுந்தரமாய் சுற்றி
தந்தி வழிப்பாயும் முந்தி!
(வேறு)

ஈழவள நாட்டருகில்
ஏறிவரும் மேகம்
தோளழகு போலெழுந்த
மாமலையில் மோதி
வேலொழுகு கண்ணாகக்
கன்னியவள் கன்னம்
மேலொழுகி ஓடிவரும்
ஆறு பல நூறு!

பார்த்தவுடன் பனியுதிர்த்து
தண்ணிலவில் மோதி
சேர்த்துவைத்த ஈரமெலாம்
கொட்டிவிடும் மே(ா)கம்!
வேர்த்து நின்ற மக்களெலாம்
வாழ்த்திடுவர் கோடி
வார்த்துநிதம் வென்றிடுமே
வெள்ளம் பாவெள்ளம்!

பூத்துவரும் பெய்மழையும்
பொய்யாகிப் போச்சே!
காத்துவரும் இரவெல்லாம்
கறுப்பாகிப் போச்சே!
அத்தைமகள் போலவது
வெட்கியெங்கே போச்சு?
வித்தைபல காட்டிவரும்
மழையெங்கே போச்சு?

மின்னொளியில் வாழ்ந்தவரின்
கண்மணியைப் பாரும்
முன்னிரவில் மின்னில்லாச்
சோகமிதைக் கேளும்!
விண்ணிலவில் குளிர்காயும்
முன்னவர்கள் ஆனோம்
பண்ணிவரும் ஆட்சியினால்
பின்னவர்கள் ஆவோம்!

நெறிதவறி ஆளுகின்ற
நாட்டில் ஒருபோதும்
வழிதவறி பெய்யாது
விண்முகிலோர் மோதி!
முறைதவறி ஆளுகின்ற
ஆட்சியிதை மாற்றி
மழை தவறி விழுவதற்கு
மாற்றமிங்கு காண்போம்!

லோ.துஷிகரன்,
தாவடி

### துயரங்கள் தொடர் கதையோ?

ஆழ்கடலில் நாமும்
அற்புதமாய்த் தொழில் கண்டோம்
பார்புகழ அன்று
பண்ணிசைத்து வாழ்ந்திருந்தோம்
பாதுகாப்பு வலயம் என்று
பாவிகளும் சட்டமிட்டார்
தொழிலேது இனி எமக்கு?
துயரங்கள் தொடர்கதையோ?

— தங்க பகீரதன், திருகோணமலை

### யார் சொன்னது?

என்
இதயத் துடிப்பை
உங்கள் சுவாசம்
தீர்மானிக்கிறது

நான்
மகிழ்ந்த போது
உங்கள் சிரிப்பொலி
இங்கே கேட்டது

என்
மனம் சோர்ந்த போது
நான்கு கண்களில்
நீர் வடிந்தது

உங்கள்
அணைப்புத் தந்த
சுகத்தை இங்கு
யாரும் தரவில்லை

அந்த
சுதந்திரத்திலும்
கட்டுப்பாடு இருந்ததே....
யார் சொன்னது கடவுள்
ஒருவன் என்று
''வாப்பா—உம்மா''
நான் இருவரைக் காண்கிறேன்.

ராலியா ஆதம், கண்டி.

### அடப்போடா!

இருள் வர வர
இதயத்துள் தயக்கம்
நிலவு எழ எழ
நிசப்தத்தில் சப்தம்

பல நாள் கண்டித்த
பகலவன்
எச்சரித்துப் போனான்

நிலவைக் காதலிக்க
எத்தனித்தால்
எரித்திடுவேன்
என்றான் எரியோன்

அன்றொருநாள்
இரவுத் தேரில் ஏறி
நிலவோடுல வியதை
வெட்கங்கெட்ட மேகங்கள்
ஒளித்திருந்து படம் பிடித்தன
இதனைக் கண்ணுற்றதாய்ச்
சொல்லி
பலநாள் பட்டினிபோட்டு
பழிவாங்கியது
பாவப்பட்ட சூரியன்

சபிக்கப்பட்டவன்
வரம் பெற்றதாய் எண்ணி
வாழப்பார்க்கிறான்
எரிவதால் மட்டுமே
எரிக்க முடியுமென்று
எரிக்க நினைக்கிறான்

அடப்போடா
கவிக்குழந்தை பெறமுடியாத
மலட்டுச் சூரியனே
இதம் தரமுடியாத
இயமனே!

பட்டினியென்ன
பஞ்சத்தையே பரிசளி
நெஞ்சம்
நெகிழப்போவதில்லை
இரவில்தான் நிகழ்ந்தது
என் ஜனனம்
இரவிலேயே நடக்கட்டும்
என் மரணமும்
இனியென்ன.....?

—கந்தையா கணேஷமூர்த்தி,
வெதமுல்லையூர்.

### டயறி

உனைத் தேடிப்பிடித்து
என் உள்ளத்துணர்ச்சிகளை
சேமித்து வைக்க
சினேகிதத்தைத் தேடினேன்
ஆனால் நீ கூட
ஆத்ம நண்பனில்லையே?
ஏனென்றால்
ஒரு வருடந்தானே உன் உத்தரவாதம்
இருந்தும் நான்
என் இதய ராகங்களை
உன்னிடம் தானே
ஒளிக்காமல் சொல்லுகிறேன்

— எம்.வி.எம்.அன்சார்,
முள்ளிப்பொத்தானை.

### நாளையும்...!

எங்கள் ஊர்க்கடலில்
வீசிடும் வலைகளில்
மீன்களை விடவும்
பிணங்கள் அகப்படுவது அதிகம் தான்!
உப்புக்கரிக்கும் கடல்நீரில்
உப்பிப்பெருத்து உருச்சிதைந்து
உடலங்கள் நித்மும்
ஒதுங்கும் நம் கரைகளில்
நுரை கொண்ட அலை கூடத்
துயரம் தாளாது
'ஓ' வென்று பொங்கியழும்
வானம் கூடத் துக்க மேலீட்டால்
முகிற் கூட்டங்களைக்
கறுப்புத் திரையாய்ப் போர்த்தி
கண்ணீர் விட்டுக் கதறும்
எல்லாம் கணநேரம்தான்
அதன் பின் இரவுவரை
அமைதி வாடகைக்கு வந்து
குடியிருக்கத்தொடங்கும்
அலைகடல் மீது வலை வீசிடப்
படகுகள் புறப்படும்
மீனோ? இறாலோ? கணவாயோ?
நண்டோ? கடலட்டையோ?
என்னென்ன அகப்படுமென்று
எவருக்குமே தெரியாது
ஆனால்.....
நிச்சயமாய் நாளையும்
நாலைந்து பிணங்கள்
நம் கரையில் ஒதுங்கும்!

த.பிரபாகரன், சுழிபுரம்

# பலியெடுத்த களம்

ஈஸிச்சேரில் படுத்திருந்தார் ஜேம்ஸ் பொஸ்டன். தொண்ணூறு வயது மதிக்கத்தக்க தோற்றத்தைக் கொண்டிருந்த அவர் ஒரு முன்னாள் இராணுவ மேஜர். இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது நேசநாட்டுப் படையின் விசேட கொமாண்டோ படைப்பிரிவு ஒன்றுக்குத் தலைமையேற்றுப் பல சாதனைகளைச் செய்தவர்.

பொஸ்டனின் மடியில் டைரி ஒன்று கிடந்தது. அதில் யுத்தத்தின்போது இடம்பெற்ற சம்பவங்கள் பல குறிக்கப்பட்டிருந்தன. சம்பவங்கள் இடம்பெற்ற தினங்கள் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டிருக்காவிடினும் சம்பவங்கள் எதுவும் விடுபட்டுப்போயிருக்கவில்லை.

டைரியை மேலோட்டமாக மேய்ந்த பொஸ்டனின் மனதில் கனம் ஏறியிருந்தது. டைரியை மூடி வைத்துவிட்டு சாய்ந்து படுத்துக்கொண்டார். கண்கள் தாமாக மூடிக்கொண்டன.

எண்ணச் சுழல்கள் யுத்தம் நடந்த காலப்பகுதிக்கு மீள ஆரம்பித்தன. காலச் சக்கரங்கள் பின்னோக்கிச் சுழன்றன.......

* * *

அருகில் நிற்பவரையே அடையாளம்



காணமுடியாத இருள்; காதுகளைப் பிளக்கும் வெடியோசைகள்; எலும்புகளை ஊடுருவும் குளிர். இத்தனைக்கும் மத்தியில் ஆறு பேர் கொண்ட அந்தப் படைப்பிரிவு எதிரிகளை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது.

உரசிப் பார்த்து நலம் விசாரித்துச் செல்லும் சன்னங்களையும் பொருட்படுத்தாது, எதிரிப் பாசறைகளினுள் ஊடுருவி அவற்றைத் துவம்சம் செய்துகொண்டிருந்தது அந்தப் படையணி. நேசநாட்டுப் படைகளின் அதிரடி அதிவிசேட கொமாண்டோப் படையணி அது. இருபத்தாறு அஞ்சா நெஞ்சங்களைக் கொண்ட அப்படையணியில் எஞ்சியிருப்பது ஆறு பேர் மட்டுமே.

அவர்களைத் திறமையாக வழிநடத்திக்கொண்டு முன்னணியில் மேஜர் ஜேம்ஸ் பொஸ்டன்! அந்த இளம் மேஜரின் தலைமையில் மிக முக்கிய நாஜிப் படை முகாம் ஒன்று வெற்றிகரமாகத் தகர்க்கப்பட்டிருந்தது. அதற்கு அவர்கள் கொடுத்த விலை இருபது கொமாண்டோக்களின் உயிர்!

ஆங்காங்கே பதுங்கு குழிகளினுள் பதுங்கியிருந்து கொண்டு இயந்திரத் துப்பாக்கிகளால் சன்னமாரி பொழிந்துகொண்டிருந்த எதிரிகளைத் தேடிப்பிடித்துக் கொன்றொழிக்கும் வேலையில் அந்த அறுவரும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

''மேஜர் நிலைமையின் தீவிரம் தணிந்திருக்கிறது.....'' பொஸ்டனின் காதுகளில் மெல்லக் கிசுகிசுத்தான் ஹொலியேக்.

''யெஸ். ஆனாலும் எதிரிகளுக்கு உதவி வந்து சேரும் முன் நமது படைப்பிரிவுகள் வந்துவிட்டால் நல்லது.....''

''ஆமாம்..... நாம் ஆறு பேர் மட்டுமே எஞ்சியிருக்கிறோம். அதிலும் ஹம்ப் தோளில் காயமடைந்திருக்கிறான்.'' மறுபுறத்திலிருந்து வந்தது வோல்கனின் குரல்.

''மனம் தளரக்கூடாது. ஆரம்பத் தாக்குதலுக்கு வந்த நாமே தொடர்ந்து தாக்கவேண்டிய நிர்ப்பந்தம். ஆற்றைக் கடப்பதில் நமது படைப்பிரிவுகளுக்கு ஏற்பட்ட சிக்கல் நம்மைத் தனிமைப்படுத்திவிட்டது. விடிந்தபின்னர்தான் விமானப்படையின் உதவி கூடக் கிடைக்கும்.''

''ஓ.கே. மேஜர்! சாதித்த பின்னர்தான் சாவோம் நாம்.....'' காயமடைந்த நிலையிலும் ஹம்ப் உறுதி குலையாமல் இருந்தான்.

மேஜர் உற்சாகத்துடன் கட்டளையிட்டார். ''இவ்விரண்டு பேராக — மூன்றாகப் பிரிந்து தேடுதலைத் தொடர்வோம். ஹம்ப்பும் வோல்கனும் பாதுகாப்புத் தர மற்ற நால்வரும் பதுங்கு குழிகளைத் தகர்ப்போம் கமான்!''

''ஓ.கே. மேஜர்!'' ஒருமித்து ஒலித்தது ஐவரது குரலும்.

* * *

பொஸ்டன் மெல்லக் கண்களைத் திறந்தார். இரு விழிகளும் கண்ணீரால் நிறைந்திருந்தன. இதயம் தாறுமாறாகத் துடிப்பது போல உணர்ந்தார் அவர்.

எதைப்பற்றி நினைக்கக் கூடாது என்று இதுவரை காலமும் தவிர்த்துவந்தாரோ — அந்தச் சம்பவம் இன்று அவர் முன் பூதாகாரமாக உருவெடுத்துக் கலங்கடித்துக்கொண்டிருந்தது.

''ஓ. ஜீஸஸ்.....! என் அருமைத் தோழர்கள்..... என்னோடு ஒன்றாக உண்டு..... உறங்கி..... பயிற்சி பெற்று..... பல சாதனைகளைப் புரிந்த தோழர்கள்.....ஐயோ.....''

'ஓ'வென்று வாயெடுத்து அலறவேண்டும்போல் இருந்தாலும் அடக்கிக்கொண்டார்.

பயிற்சியும் யுத்தமும் கற்றுத்தந்த பாடங்களில் அதுவும் ஒன்று. சித்திரவதைகளைத் தாங்கிக் கொள்வது பயிற்சி பெற்ற கொமாண்டோக்களுக்கு தூசு போன்றவிடயம். உடல் சித்திரவதைகளைத் தாங்கக்கூடிய தெம்பு இன்றும் தனக்கு இருப்பதாகவே உணர்ந்தார் மேஜர் பொஸ்டன்.

ஆனால்..... உள்ளத்தைச் சிதைக்கும் அந்தச் சம்பவத்தின் நினைவுச் சித்திரவதைகள்.....

* * *

பல பதுங்கு குழிகளை நிர்மூலமாக்கிவிட்டு அந்தப் பதுங்கு குழியினுள் இறங்கினார்கள் மேஜரும் ஹொலியேக்கும்.

உள்ளேயிருந்த ஏழு நாஜிப் படை வீரர்களும் மாண்டு போயிருந்தனர்.

''எல்லோரும் பரலோகப் பயணத்தை ஆரம்பித்து விட்டார்கள் மேஜர்.....!''

''எதற்கும் எல்லோரையும் ஒரு தடவை 'செக்' பண்ணிவிடு ஹொலியேக்.''

கீழே கிடந்த உடல்களை ஒவ்வொன்றாகப் பரிசோதித்தான் ஹொலியேக். உயிர் இருக்கிறதா? என்பதை மட்டுமல்ல அவர்களது பைகளில் ஏதாவது சிக்காதா? என்பதும் அவனது பரிசோதனையின் நோக்கமாக இருந்தது. இவ்வாறான சோதனைகளின்போது அவர்களது இராணுவத் தளங்கள் பற்றிய இரகசியங்கள் கூட சிக்கியிருக்கின்றன.

ஹொலியேக்கின் கையில் வரைபடம் ஒன்று கிடைத்தது. அதை அவன் மேஜருக்குத் தெரியாமல் தனது பையில் பத்திரப்படுத்திக்கொண்டுநிமிர்ந்தபோது பொஸ்டனின் கையொன்று அவன் தோளில் விழுந்தது.

''ஹொலியேக்! என்ன அது? கொடுத்துவிடு!'' கடுமையான உத்தரவு பிறந்தது மேஜரிடமிருந்து.

தடுமாறிப் போனான் ஹொலியேக். அத்தனை உக்கிரமாக மேஜரை அதுவரையில் கண்டதில்லை அவன். ஆனாலும் பிடிவாதமாக மறுத்தான்.

''தரமாட்டேன்! அதை நான்தான் எடுத்தேன். எனக்கு மட்டுமே சொந்தம்!''

பின்னால் யாரோ இறங்கிவரும் ஓசை கேட்டுத் திரும்பினார் மேஜர்.

''மேஜர் நமது படைப்பிரிவுகள் வந்து சேர்ந்து விட்டன. இனி அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். நாம் திரும்பலாம்.....'' உற்சாகத்துடன் கூறிக் கொண்டு போன ஹம்ப் இடை யில் நிறுத்தி னான். அவனது பார்வை ஹொலி யேக்கை அதிர்ச்சியுடன் வெறித்தது.

ஹொலியேக் துப்பாக்கியை ஏந்தி ஐவரையும் குறிபார்த்தவாறு நின்று கொண்டிருந்தான்.

''ஹொலியேக் அதை நீயே வைத்துக்கொள். துப்பாக்கியைத் தாழ்த்து. தோழர்களிடம் துப்பாக்கியை நீட்டுவதற்கு எப்போது கற்றுக்கொண்டாய்?''

''ஸாரி மேஜர்! இப்போது நீங்கள் இப்படிக் கூறினா லும் பின்னர் என்னைத் தண் டிக்காமல் விட மாட்டீர்கள். இதி லுள்ள இரகசியம் எனக்கு மட்டுமே தெரிந்ததாக இருக்கவேண்டும். நான் இரகசியமாக ஒளித்து வைத்ததை நீங்கள் பார்த்திராவிட்டால் இந்தச் சிக்கல் வந்திராது.....''

''ஹொலியேக்! நான் உனது மேலதிகாரி கட்டளையிடுகிறேன்.''

''ஊகூம். எனது மனதை மாற்றமுடியாது மேஜர். நீங்கள் மட்டுமே நான் எடுத்ததற்கு சாட்சி என்றால் பரவாயில்லை. இப்போது உங்கள் ஐவருக்குமே என்னி டம் ஏதோ இரகசியம் இருப்பது தெரிந்துவிட்டது.''

அருகில் நிற்பவரையே அடையாளம் காணமுடியாத இருள்; காதுகளைப் பிளக்கும் வெடியோசைகள்; எலும்புகளை ஊடுருவும் குளிர். இத்தனைக்கும் மத்தியில் ஆறு பேர் கொண்ட அந்தப் படைப்பிரிவு எதிரிகளை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

''நீயாகத்தானே மற்றவர்கள் தெரிந்துகொள்ளும்படி நடந்துகொண்டாய்.....''

''அது வாஸ்தவம்தான். ஆனாலும் காரியம் கைமீறிப் போய்விட்டது! குட்பை தோழர்களே.....!''

ஹொலியேக்கின் துப்பாக்கி சன்னங்களைச் சரமாரியாக உமிழ்ந்தது. துல்லியமான குறி தப்பவிடவில்லை ஒருவரையும். மேஜரையும் சன்னங்கள் துளைத்தன.

அதிர்ஷ்டவசமாக காயங்களுடன் தப்பிக் கொண்டார் அவர்.

எல்லோருமே இறந்துவிட்டதாகக் கருதிக்கொண்டு அந்தப் பதுங்கு குழியைவிட்டு வெளியேற முற்பட்டான் ஹொலியேக்.

''ஹொலியேக்.....'' மேஜரின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் அவன்.

''டுமீல்! டுமீல்!!''

இரண்டு சன்னங்கள் அவன் இதயத்தை ஊடுருவின. மேஜர் பொஸ்டனின் கையிலிருந்த பிஸ்டல் புகைந்துகொண்டிருந்தது.

மெல்ல அவனை நெருங்கி வந்தார் அவர். அவனது பையிலிருந்த அந்த வரைபடத்தாளை எடுத்துப் பிரித்ததுமே ஹொலியேக்கின் சடுதியான மாற்றத்துக்கான காரணம் புரிந்துவிட்டது அவருக்கு.

அது ஒரு இடத்தைக் குறிக்கும் வரைபடம். நாஜிக்களின் படையெடுப்புக்களின்போது கொள்ளையடிக்கப்பட்ட பொக்கிஷங்களைச் சேகரித்துப் பதுக்கிவைத்திருந்த இடத்தைக் காட்டும் வரைபடம். அந்த பொக்கிஷத்தைத் தான் மட்டும் அடையவேண்டும் என்ற எண்ணமே ஹொலியேக்கை வெறிகொள்ளச் செய்திருந்தது.

யுத்தகளத்தில் இருக்கிறோம் — தன்னைச் சுற்றி இருப்பவர்கள் சக தோழர்கள் என்பதைக்கூட உணராமல் செயற்பட்டான் ஹொலியேக். விளைவாக உயிரையும் விட்டுவிட்டான்.

'லைட்டரை' எடுத்து அந்த வரைபடத்தைச் சாம்பலாக்கினார் மேஜர். யுத்தத்தில் இறந்த தன் ஏனைய படை வீரர்களின் மரணத்தைவிட, நண்பனின் கையாலேயே கொன்று போடப்பட்ட அந்த நான்கு இளம் வீரர்களது மரணம் அவரைக் கடுமையாகப் பாதித்திருந்தது.

தனக்குக் கீழ் பயிற்சி பெற்ற தனது படையணி வீரன் ஒருவனை — தன் கையாலேயே கொல்ல வேண்டி ஏற்பட்ட நிர்ப்பந்தம் அவரை உடைந்து போகச் செய்தது. தட்டுத்தடுமாறி இரத்தம் வழிந்தோட பதுங்கு குழியின் வாயிலுக்கு வந்த அவரை உதவிப்படை வீரர்கள் கைத்தாங்கலாக அழைத்துப் போனார்கள்.

* * *




''தாத்தா.....தாத்தா.....'' பேத்தி ஜெனட்டின் குரல் மேஜர் பொஸ்டனின் காதுகளில் ஏறவில்லை. அவர் கண்களில் இருந்து வடிந்த கண்ணீரின் ஈரம் அப்படியே உலர்ந்துபோயிருந்தது. மூச்சும் எப்போதோ அடங்கிப்போயிருந்தது.

யுத்தகாலத்தில் எத்தனையோ சித்திரவதைகளைத் துச்சமாகத் தாண்டி வந்த அந்த வீரபுருஷனின் உயிரை, மனச்சித்திரவதை என்னும் விஷம் குடித்திருந்தது.

## வாசகர் இதயம் பேசுகிறது

சுடர் ஒளியே நீ சுமந்து வரும் புதுமையான செய்திகளை போற்றி வாழ்த்துகிறேன். 1983 ஜூலை கலவரங்களை ஆராய ஜனாதிபதி கமிஷன் என்ற தலைப்பில் நீ சுமந்து வந்த அந்த செய்தியை வாசித்தேன். தமிழர்களின் நிலையை எண்ண அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

சேகரன்.

'சுடர் ஒளி''யின் முன் அட்டைப் படத்தில் மேல்பாதியில் அநியாயத்தின் எச்சங்ளையும் கீழ்ப்பாதியில் நியாயத்தின் உண்மைகளையும் வாசகர்களுக்கு விளக்கிய 'சுடர் ஒளி'க்கு நன்றி

ரா. சேகர், கம்பளை.

'சுடர் ஒளி'யின் தகவல்கள் அனைத்தும் மனதைக் கவரக் கூடிய வகையில் உள்ளன. தீபனின் ஓவியம் மிக நன்றாக உள்ளது.

கு. அருரான்,
வவுனியா.

ஜூலை29ஆம் திகதி ''சுடர் ஒளி''யில் முன் அட்டையில் இறந்தவருடைய படத்துடனான எழுத்து மக்கள் மனங்களைக் குலுக்கி இருக்கும். இப்படிப்பட்ட திகில் உண்மைச் சம்பவங்களைப் படத்துடன் வெளியுலகுக்கு வெளிச்சமிட்டுக் காட்டுவதில் 'சுடர் ஒளி'க்கு நிகர் 'சுடர் ஒளி'தான். 'சுடர் ஒளி'யின் துணிச்சலுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

விநோகாந், வட்டகொட.

'சுடர் ஒளி'யில் வெளிவரும் காண்டீபம் பகுதியில் உண்மைகளை அலசி ஆராயும் விதம் அபாரமாக உள்ளது. அத்தோடு பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அனைத்துப் பகுதிகளும் மிகவும் தரமானவையாக இருக்கின்றன.

த. நாகேந்திரகுமார்.

நான் 'சுடர் ஒளி' வார வெளியீடு படித்து வருகின்றேன். மிகவும் தரம் வாய்ந்த ஒரு இதழாகச் 'சுடர் ஒளி' பிரகாசிப்பது கண்டு பேருவகை அடைகின்றேன். மிகக்குறுகியகாலத்துள்இமாலயவளர்ச்சி கண்ட 'சுடர் ஒளி' இதழுக்கு எனது மனம் நிறைந்தபாராட்டுக்களும், வாழ்த்துக்களும்.

வீ. கவிதாநிதி, தம்பிலுவில்.

'சுடர் ஒளி'யின் அபார வளர்ச்சி என்னை பெரிமிதம் கொள்ள வைத்துள்ளது. ''இளஞ் சுடர்' இன் ''கெட் அப்'' வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. வளர்க 'சுடர் ஒளி'யின் இலக்கியப் பணி என வாழ்த்தி விடை பெறுகிறேன்.

— அன்புமதி, வண்ணார் பண்ணை.

இலங்கையின் அரசியல் கள நிலவரங்களையும் இலங்கைத் தமிழர்களின் உண்மை நிலையை தமிழ் மக்கள் மத்தியில் திரை போட்டுக் காட்டும் ஒரு சிறந்த பத்திரிகையாக 'சுடர் ஒளி' பத்திரிகை விளங்குகின்றது. இன்னும் இப்படி உண்மை நிலைகளைத் தெளிவுபடுத்தி தமிழ்த் தாயின் கை யில் உள்ள பொய் என்ற விலங்கினை உடைத்தெறிய வேண்டும் என்பது தான் எங்கள் வேண்டுகோள்.

ஆர். எஸ். நிலா, செங்கலடி.

05—08—2001 அன்று வெளியாகி யிருந்த ''சுடர் ஒளி''யில் மலையகக் கண்ணோட்டம் பகுதியில் வெளியாகியிருந்த ''ஒரே பாடசாலையில் மாணவர் கள் 4 பேர் அடுத்தடுத்து தற் கொலை'' என்ற தலைப்பில் அமைந்த செய்தி என்னை மிகவும் கலங்கச் செய்துவிட்டது.




ம. கௌரி, போடைஸ்.

யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையையும், கொழும்புச் செய்திகளையும், வெளியுலகிற்கு உள்ளதை உள்ளபடியாகக் காட்டுகிறது 'சுடர் ஒளி', தரங்கண்டு ஆக்கங்களைப் பிரசுரிக்கும் 'சுடர் ஒளி'யே வாழிய நீ!

தயா. லோகதாசன், நல்லூர்.

'சுடர் ஒளி' எம் வாழ்வின் மகிழ்வின் ஒளியாகி எல்லோர் இதயங்களையும் கொள்ளைகொண்டுவிட்டது. வாசகர்களின் தேவையை உணர்ந்து செயல்படும் உன் ஒளி உலகெங்கும் பரவிட என் வாழ்த்துக்கள்!

செ. மரிவானி, முல்லைத்தீவு.



## வனவிலங்கு பூங்காவில் அனைவருக்கும் சுதந்திரம்


மிருகக்காட்சிச் சாலைகளில் பறவை, விலங்குகளைக் கூண்டுக்குள் அடைத்து வைத்திருப்பார்கள். பார்வையாளர்கள் சுற்றிச் சுற்றி வந்து மிருகங்களைப் பார்வையிடுவார்கள். ஆனால் வனவிலங்கு பூங்காக்கள், சரணாலயங்கள் ஆகியவற்றில் நிலைமை தலைகீழாக இருக்கும். மிருகங்கள் சுதந்திரமாக நடமாடித்திரிய பார்வையாளர்கள் வாகனங்களில் வந்து அவற்றைப் பார்வையிடுவார்கள். வரிக்குதிரைகளுடன் ஒரு ஒட்டகச்சிவிங்கி புல் மேய்ந்து கொண்டிருக்கும் காட்சியை ஒரு வாகனத்திலிருந்து கண்டு ரசிக்கிறார்கள் இவர்கள். இங்கு அனைவருக்கும் சுதந்திரம் தான்.



## சிங்கையின் எழிலை பறைசாற்றும் சிங்கம்

சிங்கப்பூர் ஒரு சின்னஞ்சிறிய தீவு. ஆயினும் ஒரு அங்குல நிலத்தைக் கூட வீணாக்காமல் அதனை அழகிய பூமியாக்கியிருக்கிறார்கள். சிங்கப்பூரில் இயற்கைக் காட்சிகள் மிகவும் அதிகம். அவற்றைக் கண்டு ரசிக்க உல்லாசப் பிரயாணிகள் கூடுவார்கள். மெர்லியன் என்னும் இடத்தில் இந்தச் சிங்கத்தின் தலையைக் கொண்ட சிலை நிறுவப்பட்டிருக்கிறது. சிங்கையின் எழிலைப் பறை சாற்றுகிறது இந்தச் சிங்கம்.





## நீல நிறத்தில் மலர்கள் எழில்பரப்பும் கோலம்

சுற்றுப் புறச் சூழலைப் பேணிப்பாதுகாப்பதற்கு மிகவும் உயர்ந்த தரத்திலான நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டியது அவசியம். பூங்காக்களிலும் மலர் வனங்களிலும் விதம்விதமான மலர்கள் கண்ணுக்கு விருந்தாக இருக்கின்றன. விதம் விதமான நிறங்களில் மலர்கள் இதழ் விரிக்கின்றன. ஆயினும் அவற்றில் மிகவும் அபூர்வமான நிறத்தில் பூக்கும் மலர்கள் மனதுக்கு ரம்மியமாக இருக்கும். மலர் வனம் ஒன்றில் நீல நிறத்தில் மலர்கள் இதழ் விரித்து எழில் பரப்பும் இந்தக் கோலம் எப்படி இருக்கிறது?

## விண்வெளி ரகசியங்களை அறிந்துவிட எத்தனிப்பு

விண்வெளி ஆய்வுகளில் உலக நாடுகள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொள்ளும் காலம் இது. விண்வெளி ரகசியங்களை அறிந்து கொள்ளும் எத்தனிப்பு அவ்வளவு தூரத்திற்கு விரிவடைந்திருக்கிறது. அமெரிக்காவின் டிஸ்னிலாந்து பொருட்காட்சியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இந்த வானுயர்ந்த கோபுரத்தில் விண்வெளி ஆய்வு மையங்கள் இருக்கின்றன. விண்வெளி விஞ்ஞான அறிவைக் குழந்தைகள் மத்தியில் விதைக்க இந்தக் கோபுரம் உதவியாக இருக்கிறது.



## ஒளிந்திருக்கும் முகம் எது?

ஓகஸ்ட் 05, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் சரத்குமாருடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு.

1. இ.சுகிர்தராஜ், புன்னனச்சோலை.
2. எம்.பி.றிசால்தீன், பிறந்துறைச் சேனை.
3. பா.கோபி கிருஷ்ணா, நமுனுகம.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (12.08.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? நாடக மேடையில் இன்றும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்த சிரிப்பு நடிகர். சினிமா உலகிலோ கிருஷ்ணா கிருஷ்ணா.



இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு — 06.

## நீண்ட குழல் எழுப்பும் ஓசை பனிமலையில் எதிரொலிப்பு

சுவிட்ஸர்லாந்து தேசம் எப்போதுமே குளிர்ச்சியான சுவாத்தியம் கொண்டது. அதற்குக் காரணம் வெள்ளிப் பனி மலைகளால் சூழப்பட்ட நாடாக அது இருப்பது தான். சுவிஸ் மலைப் பிரதேசத்தில் வாழும் கிராம வாசிகள் நீண்ட குழலில் நாதம் எழுப்பிக் குதூகலிக்கும் ரசனை கொண்டவர்கள். நீண்டகுழல் இசைக் கருவியில் தனது தந்தையார் எழுப்பும் ஓசை பனி மலையில் பட்டு எதிரொலிக்கும் எழிலினை கேட்டு ஆனந்திக்கிறான். இந்தச் சிறுவன்.



# மர்மப் பெண் 7

கதை: மாஸ்டர் சிவலிங்கம் சித்திரம்: தீபன்









## கணினியில்

பறவைகளின் உலகத்திற்குப் போக வேண்டுமா? உங்களுக்காகவே ரம்பாஸ்டர் பேர்டிங் சொஃப்வெயார் என்ற மென்பொருளை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்த மென்பொருளைக்

# கணினியில் பறவைகள் உலகம்

கொண்டுநீங்கள் பறவையொன்றின் உருவத்தைக்கணினியில் வரைந்து அதன் பெயர், வாழுமிடத்தைத் தெரிவு செய்தால் அந்தப் பறவை எழுப்பும் ஒலியை கணினியில் கேட்க முடியும். (ஏற்கனவே பறவைகளின் ஒலிகளை இதில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள்)

## காலைக் காட்சி

காரிருள் அகன்றது. கூவின சேவல் குருவிகள் எழுந்தன. மறைந்தன விண்மீன் ஏரியில் தாமரை இன மலர்கள் மலரும். இறையவன் கோவிலில் மணியொலி கேட்கும். ஊரினில் தொழில் புரி மாந்தர் எழுந்தார். உயர் மரக் கொப்பு விட்டோடின காக்கை சேர்க்கிழக் கெனுதிசை வெழுத்தது மெல்லச் செங்கதிரவனுதயஞ் செய்கிறானே.

சலீம் குசைன் (வயது—9)
கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை

சிந்தனைக்கு செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து

செம்மைஉடையவனின் பொருள்வளமையானது இடையிலே அழிந்து போகாமல், அவன் வழியினர்க்கும் உறுதியாக நன்மை தரும்.

## சிறுவர் கைவண்ணம்



ஞா.செந்தூரன்
தரம்—08
யா/சென்ஜோன்ஸ் கல்லூரி



யோ. நதிகா
தரம்— 8A
நெளுக்குளம்
கலைமகள் ம.வி



# இளசு சீட்

ஷர்மிலா

### விடுகதைகளும் விடைகளும்

1. உடையப் போகும் வீட்டுக்குள் உயிருள்ள குஞ்சு.
2. மொட்டைப்பாட்டிக்கு உச்சியில் குடுமி.
3. சொல்லாமல் வரும் நில்லாமற் போகும்.
4. குழந்தை அழுவதேன்; குப்பை தேங்குவதேன்?
5. நாக்கு இனிப்பதேன்? நாய் ஓடுவதேன்?

விடைகள்

1. முட்டை 2. தேங்காய் 3. நான் 4. எடுப்பாரற்று 5. கற்கண்டால்

செல்வன். சிவகுமாரன் சயந்தன்
க.பொ.த(சா.த) ,யா/ யாழ்ப்பாணக் கல்லூரி,வட்டுக்கோட்டை

## எனக்குத் தெரிந்த பாரதி

பாரதியார் சிறந்த தமிழ்ப் புலவர். இவர் தமிழ் நாட்டில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். இவருடைய தந்தை சின்னச்சாமி ஐயர். தாயார் லட்சுமி அம்மாள். இவரை எல்லோரும் பாண்டியா என்றழைப்பர். இவர் மெலிந்த உருவம் உடையவர். தலையில் தலைப்பாகை அணிந்துள்ள இவர் நிமிர்ந்த நடையும் கம்பீரமான தோற்றமும் உடையவர்.

இவர் இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். இவருக்கு தமிழ் மொழியில் அதிக விருப்பம் உண்டு. இவர் சிறுவர்களுக்குப் பயன் தரும் நல்ல பாடல்களைப் பாடியுள்ளார். இவர் எல்லோராலும் போற்றப்படும் சிறந்த புலவராவார்.

தினுஷா
தரம்—4
கொக்குவில் / இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை

## சனிக்கோள்

சூரிய மண்டலத்தில் வியாழனுக்கு அடுத்து பெரியது. ஆங்கிலத்தில் 'சற்றேர்ன்' என்று அழைக்கப்படும் இதனை ரொமானியர் வளத்திற்கும் விவசாயத்திற்கு முரிய கடவுளாகக் கருதினர்.



இக்கோளைச் சுற்றி ஏழு வளையங்கள் கோர்வையாகக் காணப்படுகின்றன. இப்பொருட்களினால் ஆனஇவை நீள் வட்ட ஒழுங்கில் பயணம் செய்கின்றன. இதன் காலநிலை 7.5 வருடங்களுக்கு ஒரு தடவை மாறிக் கொண்டிருக்கிறது. அதனால் உயிர்கள் வாழமுடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

## நீர்

நீரின்றி உயிரினங்கள் வாழமாட்டாது.

நீரை நாம் குடிப்பதற்கும், குளிப்பதற்கும், சலவை செய்வதற்கும், பாத்திரங்கள் கழுவுவதற்கும் பெரும்பாலும் பயன்படுத்துகின்றோம்.

நீரை நாம் மட்டுமன்றி விலங்கினங்களும் பயன்படுத்துகின்றன.

தொழிற்சாலைகள் இயங்குவதற்கு நீர் அவசியமானதாகும். நீரின்றி இவ்வுலகமே செயற்படமாட்டாது. மருந்துப் பொருட்கள் தயாரிப்பதற்கும் நீர் மிக, மிக அவசியமானதாகும்.

வேணுகா
ஆண்டு — 4, கி.ச.பா வெள்ளவத்தை




* 'பசுமை நாடு' என்று அழைக்கப்படுவது நியூசிலாந்து. இங்கு வாழும் 'கிவி' பறவைக்கு இறக்கைகள் இல்லை. கோழியைப் போன்ற உருவமுடையது. இதன் இறகுகள் மென்மையானவை. தனது பாதங்களைப் பயன்படுத்தியே எதிரிகளைத் தாக்கும்.

* சிங்கப்பூர் சுற்றுலாப் பிரயாணிகளைக் கவர்வதற்காக ஆழ்கடல் அதிசயங்களைக் கண்டு களிக்கக்கூடிய நவீன பாரிய கண்ணாடித் தொட்டி களை அமைத்துள்ளது. இதன் மூலம் காட்சியகத்திலிருந்தவாறே கடலின் ஆழத்தில் நடப்பவற்றை அறிந்து கொள்ள முடியும்.

## என்னை உருக்கும் தாயன்பு

மண்ணில் உண்டு
சொர்க்கம் — அது
அன்னை வடிவில்
வாழ்வதை
காண்போம்.
எண்ணில்லாத
துயரம் வந்தபோதும்
அன்னை கண்ணீர்
துடைக்கும்போது துயர்
ஓடும்.
தன்னிகர் இல்லாத
தாயன்பை — இரு
கண்ணிற்கு
உயர்வாய்
போற்றுவோம்.
அன்னை பண்பை
வதைக்கும் சொல்
புண்ணில் வேல்
பாய்ச்சும் வதைபடா:
என்னை உருக்கும்
பாசம் — தாய்
அன்பில் மட்டுமே
உண்டு என்பேனடா!
வன்மம் நிறைந்த
ஜன்மமொன்று
உண்டு என்றால்
தாய் இல்லாத
வாழ்வடா!

ஜே.எம்.ஷாஜஹான்
தரம் — 9C
தலவாக்கலை
தமிழ் மகா
வித்தியாலயம்

# விண்வெளி ஆய்வில் வல்லரசுகள் சாதித்தவை

அமெரிக்காவும் ரஷ்யாவும் உலகிலுள்ள பிரதான வல்லரசுகள். இவற்றிடையே விண்வெளி ஆய்விலும் போட்டி இருந்து கொண்டேயிருக்கிறது.

* ரஷ்யா 'மிர்' விண்வெளி நிலையம் ஒன்றை அமைத்திருந்தது. இதில் அமெரிக்க ரஷ்ய விண்வெளி வீரர்கள் இணைந்து செயற்பட்ட போதிலும் இதன் காலம் முடிவடைந்து விட்டது. —இது தற்காலிக விண்வெளி நிலையம்.



* மிர் விண்வெளி நிலையத்திற்குப் பின்னர் நிரந்தரமானதொரு விண்வெளி நிலையத்தை அமைக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்பியது.

* 1984இல் 'விடுதலை' என்று பெயரிடப்பட்ட அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

* பல மாற்றங்களுக்குப் பிறகு சர்வதேச விண்வெளி நிலையம் (ISS) என்று நாசா பெயர் சூட்டியது.

* இத்திட்டத்தில் அமெரிக்காவுடன் கனடா, ஜப்பான், ரஷ்யா, பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, நோர்வே, ஸ்பெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளும்,இணைந்து கொண்டன.

* சர்வதேச விண்வெளி நிலையத்தின் முதல் உறுப்பாக 20 டொன் நிறையுள்ள சக்திவாய்ந்த இழுவைப்படகு ஒன்றை ரஷ்யா 1998ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணிற்கு அனுப்பியது. இதற்கு 'விடியல்' என்று பெயர் சூட்டப்பட்டது.

* இந்த விடியல் சர்வதேச விண்வெளி நிலையம் அமைப்பதற்குத் தேவையான மின்சாரத்தையும் மற்ற வசதிகளையும் அளிக்கும் வல்லமை கொண்டது.

* அடுத்து அமெரிக்கா அமைத்த யூனிட்டி அமைப்பு 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 'என்டேவர்' விண்கலம் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது. இது விடியல் விண்கலத்திற்கும் விண்வெளி நிலையத்திற்குமிடையே வழியாகப்பயன்படக் கூடியது.

# சாவித்திரி

கனகசபை தேவகடாட்சம்
திருகோணமலை

சுடர் ஒளி சிறுகதை

சில சமயங்களில் வாழ்க்கை சூனியமாகத் தோன்றும். சில சமயங்கள் நந்தவனமாகத் தோன்றும். வாழத்தான் வேண்டுமென்றிருக்கும். ஏன் வாழ்கிறோம் என்றிருக்கும். இந்த 'கூழாம் பாணி'யான நிலையில்தான், கட்டுநாயக்க விமான நிலையத்தில், தனது ஏழு வயது மகனுடன் கனடா செல்வதற்காகக் காத்திருந்தாள் சாவித்திரி.

விமான நிலையம் பரபரத்துக் கொண்டேயிருந்தது. 'சதா இப்படித்தான் இருக்குமா இந்த விமான நிலையம்?' தனக்குள்ளே கேட்டுக் கொண்டாள்.

குழம்பிய நிலைக்குள்ளும், இந்தத் தேசம், பிறந்தமண், கூடிக் குலாவிய சொந்தபந்தங்கள், தான் தவண்டும், ஓடியும் களைத்துப்போன தடங்கள், பசுமையான காதலுக்கு மெருகூட்டிய வயல் வெளிகள் இப்படியே அவள் இதயம் கனத்துக் கொண்டேயிருந்தது.

''அம்மா! கனடாவிற்கு எப்ப போய்ச் சேருவம்'' மெதுவாகக் கேட்டான் மகன்.

நாளையண்டைக்கு. ஏதோ பெரிதாய் தெரிந்தவள் போலக் கூறிவிட்டு, இருக்கையின் பின்புறமும் பார்த்துக் கொண்டாள். எழுந்தமானமாகக் கூறிய பதில்தானே!

''அப்பா காரில வந்து எங்களைக் கூட்டிப் போவார் தானே?''

மகனின் அடுத்த கேள்வி அவளுக்கு சற்று எரிச்சலை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது.

''ஓமோம்! இப்ப நீ சத்தம் போடாம இரு'' வினாக்களுக்கு முற்றுவைத்து, அடக்கி வைத்தாள் மகனை.

அவன் தமிழில் அல்லவா பேசுகிறான்! அவனுக்கு தன்னை தமிழன் என அடையாளப்படுத்தக் கூடாதென்ற தேவைகள் எதுவும் இருக்கவில்லை. அதைப்பற்றியெல்லாம் அவன் ஏன் சிந்திக்க வேண்டும்? தகப்பனுடன் இணைய வேண்டும் என்ற ஆதங்கம்! தன் பள்ளித் தோழர்களிடையே பகிர்ந்து கொண்ட 'வெளிநாட்டு வாழ்க்கை' பற்றிய ஆடம்பர நினைவுகள்!

இனி நானும் 'வெளிநாட்டுக்காரன்' என்று சொல்வதில் ஓர் ஆனந்தம்! இவைகளைத் தவிர அந்தப் பிஞ்சு ஏன் மற்றவற்றைப்பற்றி எண்ண வேண்டும்?

இன்னமும் தன் சிந்தனை நிலையிலிருந்து மீளவில்லை சாவித்திரி. அதில் மிக அதிகமாகவே நியாயங்கள் இருந்தன.

பிறந்த மண்ணை விட்டுப் பிரிவதென்பது சித்திரவதைப்பட்டு உடலிலிருந்து உயிர் பிரிவதை விட உக்கிரமானது. கொடுமையானது!

திருமணமாகி தன் கணவனுடன் வாழ்ந்திருந்த அந்த ஒரு வருட வாழ்க்கையில்தான் எத்தனை சுகங்கள் நிறைந்திருந்தன. கைக்குழந்தையை கையில் கொடுத்துவிட்டுச் சென்ற கணவன் பார்த்திபன், சொந்த மண்ணை விட்டு அகலும் போது விக்கி விக்கி அழுதானே.... தன்னையும் குழந்தையையும் நேசித்ததைவிட இம் மண்ணை நேசித்திருந்தான் என்பதை இப்போது சாவித்திரி உணருகிறாள்.

சாதாரண ஆசிரியர்தான் பார்த்திபன்! விடுதலை வேட்கை நிறைந்த இலக்கியன்! சுயநலப் போக்கற்ற, பேராசையில்லா ஒரு முழு ஆசிரியர். எம்பிரதேச மாணவர்களின் கல்வி உயர்வுதான் இந்நாட்டு அடக்கு முறைகளுக்கு எதிராக யுத்தம்புரிவதற்கு இணையானதென எண்ணம் கொண்டு கடமையாற்றி வந்த ஆசிரியர்.

இந்த இலட்சிய நோக்கம்தான், திசைமாற்றியது. அன்றைய மாவட்ட இலக்கிய நாடக விழாவில் பார்த்திபன் எழுதிய 'வித்துக்கள் விதைக்கப் படுகின்றன' என்ற நாடகம் பாடசாலைகள் மட்டத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருந்தது. இதன் பிரதிபலிப்புத்தான், அவன் தேடப்பட்டதும், சொந்த மண்ணை விட்டு கனடாவிற்கு ஓடியதும்.

இன்னமும் இயல்பான சிந்தனை நிலைக்கு சாவித்திரியால் வரமுடியவில்லை.

விமான நிலையத்தில் தமது பயணத்திற்கான அறிவித்தல் வரும்வரை சாவித்திரியும் மகனும் காத்திருந்தார்கள்.

அழைப்பு வந்துவிட்டது. கால்கள் நடுங்க விமானத்தில் ஏறுகிறாள். ஒரு தரம் மீண்டும் தாயகத்தை, திரும்பிப்பார்த்துக் கொள்கிறாள்.

'எப்போ.... இனி..... இம் மண்ணில்' எண்ணங்களை தடுமாறி பிசைந்து கொண்டிருந்தாள். விழிகளால் விழுந்த நீர்த்துளிகள் மண்ணில் வீழ்ந்து சிதறுவதை வெகு உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டு விமானத்தில் ஏறுகிறாள்.

கனடா ஏதோ 'சொர்க்கலோகம்' எனக் கூறப்பட்டதெல்லாம் பொய்யாகிவிட்டது சாவித்திரிக்கு!

கணவனைக் கண்டது மட்டும்தான் எஞ்சியிருந்த இன்பம் அவளுக்கு! ஆனால் ஆற அமர்ந்து பேசுவதற்கு நேரமின்றி இயந்திரமாய் மாறியிருந்தான் கணவன் பார்த்திபன்.

அவன் முகத்தில் மகிழ்ச்சியும் செழிப்பும் தொலைந்து கிடந்தன. ஏறத்தாழ ஏழுவருடங்கள்! வாரி அணைத்து..... சிறிய முதலிரவுகள் பல.....எதுவும் இல்லை! கனடா வந்து ஐந்து நாட்கள் கடந்திருந்தன! சாவித்திரியின் ஏக்கங்கள். 'ஐயங்களாக' தலைப்பட்டுக்கொண்டிருந்தன.

அவளுக்கு! ஐந்து நாட்களுக்குள் கனடா 'சீ' என அன்னியப்பட்டுக்கொண்டிருந்தது. இருப்பினும், கணவனுடன் சேர்ந்து வாழப்போகிறேன் என்ற எண்ணமே அனைத்தையும் சமப்படுத்திக் கொண்டிருந்தது.

'இன்று எப்படியாவது முடிவுகட்டியாக வேண்டும்' நடு இரவையும் தாண்டி விட்டது. சாவித்திரி உறுதியாகக் காத்திருந்தாள். மகன் கண் அயர்ந்து கிடந்தான்.

கணவன் பார்த்திபன் வந்து கொண்டிருந்தான். நேராக அவனது அறைக்குச் சென்று கொண்டிருந்தவனை பின் தொடர்ந்தாள் சாவித்திரி.

அறைக்கதவை சாவித்திரி சாத்தியதும் திரும்பிப் பார்த்தான் பார்த்திபன். சற்றும் எதிர்பார்க்கவேயில்லை அவன்!

'என்றாவது ஒரு நாள் சொல்லத்தானே வேண்டும். இன்றே சொல்லி விடலாம்' எண்ணிக் கொண்டதும், அவன் முகம் வியர்வையால் நனைந்து கொண்டிருந்தது.

என்னென்ன கேள்விகள் சாவித்திரியால் தொடுக்கப்படுமென, அவன் மனனமாக்கி வைத்திருந்தான்.

சாவித்திரி ஆரம்பித்தாள்.

''நீங்க என்னை வரச் சொன்னது கைதியாக வைக்கவா? இப்படி வாழுறதை விட சொந்த மண்ணில் சந்தோஷமாக வாழலாம். எவ்வளவு அன்பாக இருந்த நீங்க, இஞ்ச வந்ததும் அடியோட மாறிட்டீங்களே! நானும் பிள்ளையும் வந்தது உங்களுக்கேதும் இடைஞ்சலா?''

பார்த்திபன் மௌனத்துடன் வேறு திசை நோக்கி



நின்றான். அவள் தொடர்ந்தாள்.

''நான் கேக்கிறன். பேசாம 'குத்துக்கல்லு' மாதிரி நிக்கிறீங்களே! என்ன என்னைப் பிடிக்கல்லயா? என்னை திருப்பி அனுப்புங்க! என்ன? ஒரு முடிவு சொல்லுங்க'' பீறிட்டுக் கதறினாள்.

எங்கிருந்து வந்ததோ அந்த அசுரபலம்! முதுகுப் புறத்தைப் பிடித்துத் திருப்பினாள் சாவித்திரி.

கரைபுரண்ட வெள்ளமென பார்த்திபன் முகம் முழுவதும் விழி நீர் வியாபித்திருந்தது.

சாவித்திரியும் இந்நிலையை எதிர்பார்க்கவேயில்லை. பார்த்திபனும் மெதுவாக விசும்பலுடன் வாய் திறந்தான்.

''உன்னையும் மகனையும் இஞ்ச கூப்பிட்டது, என்ர கடைசி முடிவைச் சொல்லத்தான்! அதாவது கனடாவில் நான் தேடின சொத்தெல்லாம் உன்ர பேரில் எழுதி வைச்சிருக்கன். இங்கேயே பிள்ளையை நல்லாப் படிப்பிச்சுப் போடு! உன்னட்ட ஏன் மறைப்பான்! என்ர கடைசிக் காலம் நெருங்கிட்டுது.''

சாவித்திரி அவனது வாயைப் பொத்தியும், விரல் இடைவெளியூடாக அனலாய் வெளிவந்து கொண்டிருந்தது அவனது விசும்பல்.

''இப்படியெல்லாம் தேவையில்லாம பேசாதேங்கோ! இதைக் கேக்கத்தானா இஞ்ச வந்தனான்'' அதற்கு மேல் சாவித்திரியால் பேச முடியவில்லை.

''ஒரு பெண்ணின்ர உள்ளத்தை என்னாலையும் உணர முடியும். உன்ன காதலிச்சுத்தானே கல்யாணம் செய்தனான். என்ன செய்யலாம்? விதி இப்படி விளையாடிற்றுது'' அழுதழுதே பேசினான் பார்த்திபன்.

''அப்படி என்னதான் நடந்தது? ஏன் இப்படியெல்லாம் பேசிறீங்க'' சாவித்திரி பதிலுக்குக் காத்திருந்தாள்.

''இனியும் மறைக்கல்ல! உண்மையைச் செல்லறன்! எனக்கு. ......எனக்கு.......எயிட்ஸ்'' பார்த்திபன் கூறிமுடிக்கவேயில்லை. தனக்கு மேல் அந்தக்கட்டிடம் விழுவது போல் சாவித்திரி உணர்ந்து கொண்டாள். கண்கள் இருண்டு கொண்டு வந்தன! அப்படியே சுவரில் சாய்ந்தவாறு கீழே அமர்ந்துகொள்கிறாள். அந்த மின்னல் வெட்டும் கணப் பொழுதிலே ஒரு முடிவிற்கு வந்து விட்டாள்.

''இல்லை.... இல்லை...! நிச்சயமாக உங்களுக்கு இந்தநோய் வராது. கோணேசர் மேலே ஆணை! நீங்கள் அப்படிப்பட்டவரல்ல. நீங்கள் இலட்சிய மனிதர். நீங்க மனதால ஊறியிருந்த பாதை தூய்மையானது. நாட்டையும் இனத்தையும் தாயைவிட மேலாக நேசிக்கிற பாசறை அது! இலட்சியத் திற்காய் தன்னையே அழிக்கும் தியாகங்களை ஏற்றுக் கொண்டவர் நீங்கள்! ஒரு போதும் இந்த நோய் உங்களுக்கு வராது!'' காட்டுக்கத்தலாகவே கத்தி ஆறுதலடைந்தாள் சாவித்திரி.

சிலையாக நின்றிருந்த பார்த்திபன். அவளருகே அமர்ந்து கொண்டான். விரிந்து கிடந்த கூந்தலை நீவிவிட்டபடி மனைவியின் முகத்தை நிமிர்த்தினான்.

''இது ஒண்டே போதும்! என் மேலும், என்ர இலட்சிய வாழ்வின் மேலும் நீ கொண்ட நம்பிக்கையை நினைக்க பெருமையாய் இருக்கு! இனி நான் எப்பவும் சாகலாம். ஒண்டு மட்டும் உண்மை! இந்த நோயை நானாக தேடிய லைஞ்சு பெறவில்லை''

பார்த்திபன் முகத்தை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்துக் கொள்கிறாள் சாவித்திரி. அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் புரிந்தது அவனுக்கு! அந்த அர்த்த பாஷை அவனை நிரபராதி என்றே கூறிக் கொண்டிருந்தது.

மீண்டும் தொடர்ந்தான் பார்த்திபன்.

''நான் இஞ்ச வந்து வேலை தேடி அலைஞ்ச காலம். இலங்கையன் ஒருவன் நண்பனாகக் கிடைச்சான். தான் வேலை செய்யிற 'பிளாஸ்டிக்' கொம்பனியில அவன் எனக்கு வேலை எடுத்துத் தந்தான். கஷ்டமான வேலை. முன்னப்பின்ன செய்து எனக்கு பழக்கமேயில்லை. என்ன செய்யிறது உழைக்க வேணுமே. இராப் பகல் பாக்காம வேலை செய்தேன். ஒரு நாள்! வேலைக் களைப்பில கால் தவறி மெசின் வேலை செய்யிற பக்கத்தில் விழுந்து விட்டன்.

பிறகு ஆஸ்பத்திரில இருந்ததுதான் எனக்கு ஞாபகம். அவன்தான் எனக்கு இரத்தம் கொடுத்துக் காப்பாற்றியதை அறிந்து கொண்டேன். உயிர் கொடுத்த தெய்வமாக அவனை நினைத்து வந்தேன். மூன்று வருடங்களுக்கு முன் திடீரெண்டு அவன் செத்துப் போயிட்டான். அப்பதான் கேள்விப்பட்டன் அவனுக்கு 'எயிட்ஸ்' எண்டு! அவன் தந்த இரத்தத்திற்கு ஊடாக எனக்கும் அந்த நோய் வந்திட்டுது. எனக்கு இலங்கைக்கு வர விருப்பம். இந்த நோயோடு நான் அங்க செத்தால் உங்களெல்லாருக்கும் பரம்பரை வசையாயிருக்கும். உண்மையை எப்படிச் சொன்னாலும் நம்ம சனம் நம்பாது. அதுதான் உங்களையெல்லாம் இஞ்ச கூப்பிட்டு..... இந்த கடைசி முடிவை எடுத்திருக்கிறன்''.

பார்த்திபன் பேசி முடித்துவிட்டு, சாவித்திரியையே நோக்கினான்.

''என்ர புரிசன் புனிதமானவன். இந்த நோய் என்ன செய்யப்போகுது? நீங்க எண்டைக்கும் என்ர புருஷன் தான்! அதுவும் மாசுகள் நெருங்காத சூரியன் நீங்கள்'' சாவித்திரி பெருமிதத்துடன் சொல்லிக் கொண்டே வாரிக் கட்டி அணைத்துக் கொள்கிறாள் பார்த்திபனை.


எப்படித் தடுத்தும் அவளின் அகோரபசிக்கும், அசுரபலத்திற்கும் முன்னால் அவளை தாக்குப் பிடித்துக் கொள்ள முடியாமல், அன்பால் தோற்றுப் போவதை அவனால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

எதிர்காலம் பிரகாசமாய், சாவித்திரிக்கும், மகனுக்குமாகக் காத்துக் கொண்டிருப்பதை அவனால் மறுக்க முடியாதல்லவா? மீண்டும் தவ வலிமை பெறுகிறான் பார்த்திபன். எதிர்காலம் அவர்களுடையதென்பதற்காக!

(யாவும் கற்பனை)





"The only virtue I claim, is truth and non-violence. I lay no claim to superhuman power. I want none."

Mahatma Gandhi

the maharaja organisation limited

Since 1939

**The Maharaja Organisation Limited**

**The Courage to be different.**

GARADS

# இந்திய சுதந்திர தின மலர்


**New Fahim Enterprises (Pvt) Ltd**
*(Labour Licence No.736)*
P.O.Box - 1782
No. 283 - 1/1, 2/1, 3/1,
Main Street, Colombo - 11
Tel - 438030, 423935, 330692
Fax - 431773, 688284,
Celtel - 072-242213, 255572

Best wishes to the people of India and the Goverment for the Indipendence Day.

**Fahim Enterprises**
*(Labour Licence No.1755)*

அரசாங்க அங்கீகாரம் பெற்ற வேலை வாய்ப்பு நிறுவனம்

* Tile Fixer * Mason * Carpenter *Painter * Electrician
போன்ற வேலை வாய்ப்புக்களும் உண்டு.
முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களை முற்றிலும்
இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும்.
அழைத்து வருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்

*No. 151/1, 152/1,
Main Street,
Katankudy - 02
T.P : 065-47090*

---

இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.

**VAANIJA (PVT) LIMITED**
50-2/7, 2nd Floor,
Colombo Plaza Bldg.,
Galle Road, Wellawatte, Sri Lanka.
Tel: 94-1-74-519644/5
Fax: 94-1-593072
E-mail: vaanija@mail.ewist.net
nhipfrtmng@mail.ewist.net

---

இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.

இந்தியா, சிங்கப்பூர், ஜப்பான், கனடா
மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல
மலிவுவிலை விமான டிக்கட்டுகளுக்கு நாடுங்கள்

**Key Travels (Pvt) Limited**
136/1, மெயின் வீதி, கொழும்பு-11.
Tel:- 075-331124, 325994, 432801.
Fax : 075-331125
MDP-156/A99 CTB-4178 DCA-A240

---

இந்திய அரசுக்கும், மக்களுக்கும் எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.

முக்கிய தகவல்களுடன் தொலைபேசி
அட்டவணையும், பஞ்சாங்க குறிப்புகள் இணைந்த
உதய தின ஏடு அச்சிடப்பட்டு விரைவாக
வெளிவரவுள்ளது.
விற்பனையாளர்களுக்கு சிறந்த கழிவு உண்டு.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

**Udaya and Co. (Pvt) Ltd**
17/18, Negombo Road
Wattala
Tel:- 935873, 930759, 932784
Fax:- 935435
E-mail:- udaya@eureka.lk

---

இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.

**SUJIKALA INDUSTRIES & OFFSET PRINTERS**
கண்ணைக்கவரும் வண்ண டிசைன்களில்
அச்சிடப்பட்ட தீபாவளி, பொங்கல், வெசாக்
வாழ்த்து மடல்கள், வெசாக் அலங்காரப் பொருட்கள்,
மாதக்கலண்டர்கள், டயரிகள், புத்தகங்கள் மற்றும்
அரிச்சுவடி மட்டைகள்
தயாரிப்பாளர்களும் — விநியோகஸ்தர்களும்
104/6, Shopping Complex,
Sea Street, Colombo -11.
Tel: 331734, 541037 Fax: 331734
E-mail: sujikala@sh.lk, sujikala@sri-lanka

---

இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.

**CROMPTON MERCHANTS**
*கல்வனைஸ்ட் தகடுகள்
*5.5 mm M.S.Rods
*6 mm and 8 mm M.S. Ribbed Steel
மற்றும்
ராம்கோ (Ramco) அஸ்பெஸ்டஸ்
கூரைத்தகடுகள், சீலிங் தகடுகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

Ramco

**CROMPTON MERCHANTS**
No.81, Maha Vidyalaya Mawatha,
Colombo-13, Sri Lanka.
Tele : 422120, 330668, 321831, Fax : 330668

---

இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.

வெள்ளவத்தையில்
கடந்த 25 வருடங்களுக்கு
மேலாக பயணிகள்
வாகன சேவையில்
மக்களின் நன்மதிப்பைப்
பெற்ற ஒரே ஸ்தாபனம்

**ARTHUR TOURS**
184 A, GALLE ROAD, WELLAWATTA, COLOMBO - 06.
Office : 582978, 556796, 556797
Res : 502617, 585376, 502882, Hot line : 077- 222333

---

இந்திய அரசுக்கும் மக்களுக்கும்
எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.

**GNANAM IMPORTERS**
Royal Umbrella,
தாய் Fragrant அரிசி
மற்றும்
Premier Brand
பாகிஸ்தான்
Basmathi அரிசி
ஆகியவற்றை இறக்குமதி
செய்பவர்கள்.
169, 5th Cross Street,
Colombo - 11.
Tel: 439334

---

இந்திய அரசுக்கும் மக்களுக்கும்
எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.

சகல நாடுகளுக்குமான
விமான பிரயாணச்
சீட்டுக்களை
பெற்றுக்கொள்ள

**SAGI TRAVELS & FILMS**
No.21, 3rd Floor,
Central Super Market Complex,
Colombo - 11.
Tel: 430375, 430369

---

இந்திய அரசுக்கும் மக்களுக்கும்
எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.




**NEW DHIVIYA JEWELLERS**
42-C, Galle Road, Wellawatte,
Colombo-06. Tel : 508501, 505065
SPECIALIST IN 22KT GOLD JEWELLERY

---

இந்திய அரசுக்கும், மக்களுக்கும் எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்




அற்புத கலை நயம்; நீபாவின் அதிசயத் தொழில் வளம்
அபூர்வ வடிவங்கள்; அத்தனையும் அழகிலும் அழகு!
பரிசுத்த தங்கத்தில் ; எந்நாளும் தெரிவதோ பொலிவு!!
தரித்து வாரீர்; நவரத்தினத்தின் புதுமையைக் காணீர்.



**NEEPA JEWELLERY**
Genuine 22 Carat
309-2/4, Galle Road, Colombo - 06.
T.P. 505942

# கொழும்பிலுள்ள இந்திய கலாசார நிலையம் மூன்றாண்டு நிறைவு



மௌலானா அப்துல் கலாம் அசாத் அவர்களின் திருவுருவப் படத்தை அமைச்சர் அலவி மௌலானா திரை நீக்கம் செய்து வைக்கிறார். அருகில் காணப்படுபவர் இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தி.

கொழும்பில் 1998 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய கலாசார நிலையம் வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது.

கலாசார உறவுகளுக்கான இந்திய மையம் (ICCR) என்னும் நிறுவனத்தினால் நிதி அளிக்கப்பட்டுவரும் இந்த நிலையம் இலங்கை இந்திய கலாசார ஒத்துழைப்புகளை வளர்ப்பதில் பெரும் பங்களிப்புச் செய்துவருகிறது.

இதன் பரந்துபட்ட கலாசார செயற்பாடுகள் இருநாடுகளுக்குமிடையே கலாசார பரிமாற்றங்களுக்கு இடமளிப்பவையாக உள்ளன.

கடந்த ஜூலை 30 ஆம் திகதி நடைபெற்ற இந்திய கலாசார நிலையத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தின் போது கலாசார உறவுகளுக்கான இந்திய மையத்தின் ஆரம்பத் தலைவர் மௌலானா அப்துல் கலாம் அசாத் அவர்களின் திருவுருவப்படம் இலங்கையின் தொழிலமைச்சரும் முஸ்லிம் விவகார பதிலமைச்சருமான அலவி மௌலானாவினால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

எல்பின்ஸ்டன் திரையரங்கில் நடைபெற்ற இந்த விழாவுக்கு பல தலைவர்கள், கலைஞர்கள் வந்து சிறப்பித்தனர். திரை நீக்க வைபவத்தில் இந்தியத் தூதுவர் ஸ்ரீ கோபால கிருஷ்ண காந்தி அமைச்சர் அலவி மௌலானா உட்படப் பலர் உரையாற்றினர்.

அன்றைய தினம் மாலை நடன நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்தியாவின் லக்னோவிலிருந்து வருகை தந்த மஞ்சரி சதுர்வேதியின் குழுவினர் இந்து, முஸ்லிம் பாரம்பரியம் கலந்த கீழைத்தேய நடன நிகழ்ச்சி ஒன்றை பலரும் பாராட்டும் விதத்தில் நடத்தினர்.

இந்த வைபவம் கொழும்பு இந்திய கலாசார நிலையத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவுக்குரியது மட்டுமல்ல கலாசார உறவுகளுக்கான இந்திய மையத் தின் 50ஆவது ஆண்டு நிறைவுக் கொண் டாட்டமாகவும் அமைந்தது.

இந்த ஆண்டில் நிறைவேற்றுவதற்கென இந்திய கலாசார நிலையம் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

கருத்தரங்குகள், விரிவுரைகள், செய்முறை விரிவுரைகள் மற்றும் இலங்கை இந்தியக் கலைஞர்கள் நிகழ்த்தும் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த நிகழ்ச்சிகள் இருக்கும்.

கடந்த ஜனவரியில் ஐ.சீ.சீ.ஆர். நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக ஒரிஸா மாநிலத்தின் மயூர் ஆட்ஸ் நிலையத்தைச் சேர்ந்த ஸ்ரீ டீ.என். பட்நாயக் தலைமையிலான ச்சவ் நடன (Chhau dance) குழு இலங்கை வந்திருந்தது. இக்குழு கொழும்பிலும் கண்டியிலும் பல நிகழ்ச்சிகளை நடத்தியது.

இதே கொண்டாட்டங்களை சிறப்பிக்கும் வகையில் ஐ.சீ.சீ.ஆர் நிலையம் பிரபல ஓடிசி நடனக் கலைஞர் சோனல் மான்சிங் அவர்களை இலங்கைக்கு வரவழைத்தது.

ஜூலை 15–22 வரையான காலப்பகுதியில் இவரது குழு கொழும்பு, காலி, கண்டி ஆகிய இடங்களில் நடன நிகழ்ச்சிகளை நடத்தி பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்திய–இலங்கை கலாசார பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆண்டுக்கான ஏனைய நிகழ்ச்சிகளுள் இந்துஸ்தான் சங்கீத நிகழ்வு டாக்டர் தயாரத்ன ரணதுங்கவினால் நிகழ்த்தப்பட்டது. பேராசிரியர் அமரா ரணதுங்க, திருமதி சீத்தா குலதுங்க, பியதாச அத்துக்கோறளை, ஜெஹான் டீ சில்வா, பிரதீப் ரட்னாயக்க, ரவிபந்து வித்யாபதி, விஜய ரத்ன ரணதுங்க ஆகியோர் பங்குபற்றிய பல நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. சமையற்கலைக் கண்காட்சிகள் கே. நடராஜன் மற்றும் சுப்றியோ டுற்றா ஆகியோரால் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடத்தப்பட்டன.

மேற்படி செயற்பாடுகளுக்கு புறம்பாக ஐ.சீ.சீ.ஆர். நிலையம் இந்தியத் திரைப் படங்களை காண்பித்து வருகிறது. ஹிந்தி, பரதநாட்டியம், இந்துஸ்தான் மற்றும் கர்நாடக சங்கீதம், தபேலா, வயலின், சித்தார் ஆகியவற்றுடன் யோகாசன வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தி மொழி வகுப்புகளும் இலவசமாக நடத்தப்படுகின்றன.

# வர்த்தக ஒத்துழைப்பு ஒரு வரலாற்றுச் சிறப்பு.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக தொடர்புகள் அந்நியர் ஆட்சிக் காலம் முதல் தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருக்கின்றன. 1930ஆம் ஆண்டு முதல் தேங்காய் எண்ணெய், கொப்பரா போன்ற இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களை இந்தியா இறக்குமதி செய்திருக்கிறது.

1961ஆம் ஆண்டு இந்திய – இலங்கை வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து இரு நாடுகள் மத்தியிலும் வர்த்தக உறவுகள் வளர்ச்சியடையத் தொடங்கின. 1968 ஆம் ஆண்டு இலங்கை இந்தியப் பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு கூட்டுறவு மையம் ஒன்று உருவாக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு இலங்கை – இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் வர்த்தகம் மேலும் விருத்தியடையும் வாய்ப்பு இருந்தது. இருப்பினும் இந்திய அமைதிப்படையினர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டதை அடுத்து வர்த்தக நிலைமையில் சீரான நிலை இருக்கவில்லை.

1995ஆம் ஆண்டு இலங்கைக்கான வர்த்தக ஏற்றுமதிகளை இந்தியா அதிகரித்தது. அதிகளவு பொருள்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் நாடாக இருந்த ஜப்பானின் இடத்தை இந்தியா தட்டிப்பறித்துக் கொண்டது.

1998ஆம் ஆண்டு இந்திய–இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 2000ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் மிகவும் சீரிய முறையில் அமுலுக்கு வந்தது.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஏற்றுமதிகள் விடயத்தில் வரிகள் தளர்த்தப்பட்டன. 2003ஆம் ஆண்டு இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு இந்தியாவில் வரிவிலக்குக் கிடைக்கவுள்ளது.

2004ஆம் ஆண்டு இலங்கையின் உற்பத்திப் பொருள்கள் 1சத வீதத்திலிருந்து 8சதவீதம் அதிகமாக இந்தியாவில் விற்பனை செய்யப்படவுள்ளன. இரு நாடுகளினதும் வர்த்தக தூதுக்குழுக்கள் அடுத்து வரும் மாதங்களில் சந்தித்து இது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இருக்கின்றன.

— டாக்டர் சமான் கெலேகம
(நிர்வாக இயக்குநர்
இலங்கை திட்டக் கல்வி நிலையம்)


இந்திய அரசுக்கும், மக்களுக்கும் எமது சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்!
இறக்குமதி செய்யப்பட்ட சிவா விக்கிரகங்கள், தாம்பர விக்கிரங்கள் பூஜை விளக்குகள், வார்ப்புமணி, பட்டுக்குடை, அலங்கரிக்கும் பொருட்கள், திருவாசிகள், வெள்ளி அந்திகல் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.
கோயிலுக்கு தேவையான சகல ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
Taniyaa Enterprises
193/A, Sri Karthikesan Street,
Colombo-13. T.P : 074-619185, 077-769443

இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கும்
எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்!
Dealers in 22 kt. Gold Jewellery.
சங்கீதா ஜூவல்ஸ்
தங்க நகை உலகின் மங்கா
புகழ் பெற்ற ஸ்தாபனம்
அன்றும் இன்றும் என்றும்
Sangeetha 22 கரட் நகைகளுக்கு
335C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 500682, 585321





TRANS WORLD ENTERPRISES
Exporting, Packing, Shipping & Forwarding Agents
Customs House Agents and Transport & Clearing Agents.
96- 2/4, Consistory Building,
Front Street, Colombo - 11.
T.P :- 449932, 337594
Fax :- 449932 After hours 503018

இந்திய அரசிற்கும், மக்களுக்கும்
எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்!
FANCY MUSEUM
Fancy, விளையாட்டுப் பொருட்கள், Eversilver, பரிசுப் பொருட்களை விநியோகிப்பவர்கள்.
நடன, மணப்பெண் அலங்காரப் பொருட்களை விநியோகிப்பதில் விஷேடமானவர்கள்.
No-253-B, Galle Road,
Wellawatta Complex, Colombo-06.
Telephone: 580216 Fax:590211


இந்திய அரசுக்கும், மக்களுக்கும் எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்
ARKAM TRADERS
Importers of Brass Door Fittings
No.421/1A, Old Moor Street,
Colombo-12.

இந்திய அரசுக்கும், மக்களுக்கும் எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்
எலிகளை ஒழிக்க ரன்ரெட்
மூட்டைப் பூச்சிகளை ஒழிக்க ரன்பக்
RUNBUG
RUNRAT
இறக்குமதி செய்யப்பட்ட பிரவுண் பேப்பர் மற்றும் எல்லா அளவுகளிலும் மெஷின் கட்டிங் முறையில் பிரவுண் பேப்பர் பேக் தயாரித்து நியாயமான விலையில் விநியோகிப்போர்.
Abdullah Industries & Paper Bags Manufactury
72, Barber Street, Colombo-13. T.P : 433952, 422995

இந்திய அரசுக்கும், மக்களுக்கும் எமது சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்!
NPR Trading Company
Importers, Exporters & General Merchants
222& 224, Gas Works St.,
Colombo - 11.
T.P:- 43470, Grams: "Nprajahcom"

# இந்திய சுதந்...

## உயர்ஸ்தானி...


இந்திய பிரதமர் வாஜ்பாய்

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபாலகிருஷ்ண காந்தி விடுத்த செய்தி:—

இந்தியா தனது 54ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடுகிறது. இந்த வேளையில் இலங்கையில் வாழும் இந்திய மக்களை வாழ்த்து வதில் நான் பெரும் மகிழ்ச்சி அடை கிறேன். இந்தியாவுடன் மிகவும் நெருங்கிய உறவுகளைப் பேணி வரும் இந்த நாட்டு மக்களுக்கும் எனது அன்பான வாழ்த்துக்கள்.

1947ஆம் ஆண்டு இத்தினத்தில் இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு, புதுடில்லியின் செங்கோட்டையில் தேசத்தின் மூவர்ணக்கொடியைப் பறக்கவிட்டார்.

தேசப்பற்றினால் உந்தப்பட்டு மன எழுச்சிபெற்ற அந்த நிலையிலும்விட்டுச்செல்லும்வல்லரசின்பால்கடும்தொனியை அவர் காட்டாதிருந்தமை மிகவும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம்.

ஏனென்றால் சுதந்திரத்துக்கான எமது போராட்டம் அஹிம்சையில் நம்பிக்கை கொண்ட மகாத்மா காந்தியின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது ஆகும். இவரே ''இந்தியாவின் தேசபிதா'' என நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களால் முதலில் அழைக்கப்பட்டவர்.

இந்த 54 ஆண்டுகளிலும் இந்தியா தன்னை பொருளாதாரத்தில் தன்னிறைவு கண்டு வரும் ஒரு நாடாகவும், விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தி பெற்ற ஒரு நாடாகவும் உருவாக்கிக் கொண்டுள்ளது.

அதேவேளை, சமுதாயத்தின் பின்தங்கிய பிரிவினரின் வாய்ப்புக்களை அதிகரிப்பதிலும் அது அரும்பணி ஆற்றி உள்ளது.


புராதன முறைகளுடன் நவீன முறைகளையும் இணைத்துப் பிரயோகிக்கும் எமது விவசாயம் இந்தியப் பொருளாதாரத்தின் உறுதியான அடிப்படையாக அமைகிறது. பல்வேறு துறைகளிலும் நாம் பெற்றுள்ள தொழிற்துறை வளர்ச்சி மிகப் பெரியது.

சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்து இந்தியனைவிட இன்றைய இந்தியன் இரண்டு மடங்கு நீண்ட ஆயுள் உள்ளவனாக இருக்கிறான். தேசிய, சர்வதேச சம்பவங்களை மிகுந்த அக்கறையுடன் நோக்கு பவனாக இருக்கிறான்.

இவை எல்லா வற் றுக்கும் மேலாக இந்திய வாக்காளர் கள் கிராமிய, மாகாண, தேசிய மட்ட ஜனநாயக அரசியல் நடை முறைகளில் நிபுணர்களாக ஆகியுள்ளனர்.

சுதந்திரம் பெற்றதை மட்டும் கொண்டாடும் ஒரு தினம் சுதந்திர தினம் அல்ல.

ஆனால் சுதந்திரத்தின்


ஜவஹர்லால் நேருவும்


இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எமது
சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உலகின் முதல்தர பிரிண்டிங் கெமிக்கல்
மற்றும் இதர பொருட்களையும்
அறிமுகம்
செய்கிறோம்

- Litho Plates & ◆ Technova Plates
- Black Covering - (Spain)
- Printing Chemicals (Germany)
- Printing Chemicals (U.K)
- Damper Cover (U.S.A)
- Media Ink (India)
- Tracing Paper (Colour & B/W) (Germany)
  (A1-A2-A3-A4-Legal-Design, Roll)
- Blankets USA (CNI Graphics Inc.)
- Polyester film - SAM WOOM Film Co. Ltd. Korea.
- Damper Covers - M.S. Graphics, India.

நியாயமான விலையில் மிகச் சிறந்த தரமானவற்றையே நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்.

மிகச்சிறந்த தரமான பிரிண்டிங் சம்பந்தமான பொருட்களை பெற விரும்பினால்
ஓர் தடவை Be.Es.En. Tradersக்கு விஜயம் செய்யுங்கள்.
இலங்கையில் அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்.

**Be.Es.En. Traders**

New Showroom : Be.Es.En. Traders E/G1,Central Road,
Colombo -12. Tel : 075-365138/9
Stores : No. 276, Wolfendhal Street, Colombo -13.
Tel : 330297, 335008, 348418, 348419 Fax: 449809
E-mail : bees@isplanka.lk

Sole Agent For:
Litho Plates Spain, Hammond Chemical U.K
Huber Chemical, Schoellershammer Tracing Paper Germany,
Chapel Hill U.S.A Abezeta Black covering Spain
CNI Graphics Inc U.S.A
Direct Dealer: Technova Imaging Systems Ltd, - Mumbai, India.
Agents For: Coats of India Ltd, - Calcutta, India.
M.S.Graphics Industries, - New Delhi, India.



இந்திய அரசுக்கும், மக்களுக்கும் எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்!

**ஜெயா புக் சென்டர்**

இறக்குமதியாளர்கள் மற்றும் அச்சிடப்பட்ட புத்தக விநியோகஸ்தர்கள்
பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையான
புத்தகங்கள் எம்மிடம் உண்டு
அதனைவிட:

- மருத்துவம்
  பட்டப்படிப்பு
  பட்டப்பின்படிப்பு
- பொறியியல்
- கணனி
- விஞ்ஞானம்
- அகராதிகள்
- கட்டுரை, கடிதம் எழுதுதல்
- ஆங்கிலம்
- குழந்தைகளுக்கான புத்தகங்கள்
- சர்வதேச பாடசாலை அச்சுப் புத்தகங்கள்
- சிங்கள, தமிழ் புத்தகங்கள்

ஆகியவற்றையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

காட்சியறை:
91, 99 UG Floor,
Peoples Park Complex
Colombo - 11
T.P:- 438227

கிளை:
688, Galle Road
Colombo - 03
T.P:- 580594

Fax:- 332939
E-mail- Jeya@eureka.lk



கலைகளின் தாயகமாம் இந்திய திருநாட்டு
மக்களுக்கு எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்!

மேல் மாகாண தமிழ் இளைஞர் பேரவை
(மேல் மாகாண மக்கள் முன்னணியின் தமிழ் கலைஞர் பிரிவு)

No. 28, Reclamation Road, Colombo - 11.

# ந்திர தின மலர்

## ிகர் செய்தி



வும் மஹாத்மா காந்தியும்

மரபுவழிச் சொத்தாகிய பல மொழிகள் பேசும், பல மதங்களை அனுஷ்டிக்கும் இந்திய மக்களின் வாழ்வை கொண்டாடும் தினம் இது ஆகும்.

இவ்வாண்டு சுதந்திரதின விழா கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருக்கு இந்தியாவையும் இலங்கையையும் பிணைக்கும் வரலாற்று மற்றும் புவியியல், கலாசார இணைப்புகளை மீளவும் உறுதி செய்ய உதவுகிறது.

பல மொழி, பல கலாசாரங்கள் கொண்ட மக்கள் வாழும் நாடுகள் என்ற வகையில் இந்தியா வும் இலங்கையும் அரியதான புரிந்துணர்வைக் கொண்டுள்ளன.

நாம் பல்வேறு துறைகளினூடாக கொண்டிருக்கும் பிணைப்புகள் அரசாங்க மட்டத்தில் மட்டுமன்றி மக்கள் மட்டத்திலும் வலுப்பட்டுள்ளன.

இந்தியத் தயாரிப்புகளான ஹிந்தி மற்றும் தமிழ் திரைப்படங்கள் லட்சக்கணக்கான இலங்கையர்களால் கண்டுகளிக்கப்படுகின்றன. இந்திய வானொலி தொடர்ந்து உறவுப்பாலமாக இருந்து வருகின்றது. 1998 டிசம்பர் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்திய இலங்கை நிறுவனம் எமது மரபுவழி உறவுகளைக் காட்டும் இன்றைய வளம்மிக்க கருவியாக இருந்து வருகிறது.

எமக்கிடையேயான இருதரப்பு வர்த்தகம் ஆண்டுக்கு 658 மில்லியன் டொலரையும் மேவி நிற்கிறது. இலங்கையில் 67 இந்திய நிறுவனங்கள் கூட்டு முயற்சியில் இயங்குகின்றன. மேலும் 78 நிறுவனங்களுக்கு அங்கீகாரம்



ஜனாதிபதி நாராயணன்

வழங்கப்பட்டுள்ளது. இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினால் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் தாராளமாக நடைபெற்று வருகின்றன.

1999 தொடக்கம் இலங்கையின் 1351 உற்பத்திப் பொருட்களுக்கு இந்தியா தீர்வைகளிலிருந்து விலக்களித்துள்ளது. 2003ஆம் ஆண்டு வரையில் 4100 பொருட்களுக்கு இச்சலுகை விஸ்தரிக்கப்பட்டுவிடும். இன்று வேறு நாடுகளும் இது போன்ற இரு தரப்பு உடன்பாடுகளைச் செய்ய முன்வரும் நிலை, சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கு புகழ் தருவதாகும்.

அணிசாரா நாடுகள் இயக்கம், சார்க் மற்றும் பிராந்திய கூட்டுக்களில் இரு நாடுகளும் பங்காளிகளாக இருக்கின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உலகை மேலும் வளமாக்குவதில் ஒரு பங்கை நிறை வேற்றக் கடமைப் பட்டுள்ளன என்னும் உறுதிப்பாட்டினை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்கின்றன.

கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிக அதிகாரிகளுடன் நானும் இணைந்து கொண்டு இலங்கை மக்கள் நல்வாழ்வும், சமாதானமும், முன்னேற்றமும் பெற்று வாழ்வதற்கு உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.


இந்திய அரசுக்கும், மக்களுக்கும் எமது சுதந்திர தின வாழ்த்துக்கள்.

**Susila Gold House**

அழகுக்கு அழகூட்டும் தங்க ஆபரணங்களை அதுவும் அசல் 22 கரட்டில் பெற்றுக் கொள்ள கொழும்பு செட்டியார் தெருவில்.........



**சுசீலா கோல்ட் ஹவுஸ்**

177/9, செட்டியார் தெரு, கொழும்பு-11 தொ.பே: 439090

வெள்ளவத்தையில்......

வெள்ளவத்தை சுசீலா கோல்ட் ஹவுஸ்

இல.35/6,பிளாஸா கொம்ப்லெக்ஸ், காலி வீதி, கொழும்பு-06

தொ.பே: 594790

இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்!

**THAMPI HOLDINGS (PTE) LTD**

Single Line | Two Line | Four Multi Line

Single / Double Line With Conference



1. PCOM-01 (CPD)
2. THAMPI TELE 01
3. THAMPI WINCALL 01
4. THAMPI WINCELL 01
5. THAMPI TELE POWER 9
6. THAMPI CALLER POWER 9
7. THAMPI LEADER POWER 6
8. Call Master 600 (METASCAN)
9. VISIONTEK 31C

கொமியுனிகேசன் உரிமையாளர்களுக்கும் அலுவலக உரிமையாளர்களுக்கும் தேவையான அனைத்து தொலைபேசி கணிப்பீட்டுக் கருவிகளையும் மற்றும் உபகரணங்களையும் பெற்றுக்கொள்ள.....

All Ranges of PCO Machines, Paper Rolles, Ribbons, Telephones, Maintenance Free Batteries, C.CT.V (Security Cameras), Laminating Machines, Binding Machines, Fax Machines, Cash Counting Machines & All Accessories

**THAMPI HOLDINGS (PVT) LTD**

(Thampi Buildings) No 177, Old Moor Street, Colombo-12.
Tel: 343125 (Auto Line) Fax : 337465
Hot Line: 072-401423, (Sales) 077-382343 (Service)
E-mail:thampi@sltnet.lk

**VATHSALA** வத்சலா டிரேட் சென்டர் *Trade Centre*

உங்கள் இல்லங்களுக்கும் உணவு விடுதிகளுக்கும் இலகுவில்
தோசை, வடை, சட்னி என்று உடன் தயாரிக்க சிரமப்பட தேவையில்லை.
இதோ எம்மிடம் லக்ஷ்மி வெட் கிரைண்டர் சாய்வு வகை கிரைண்டர், பத்து நிமிடத்தில் அரைத்து தருகிறது. மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்ட இது உங்களின் எல்லாத் தேவைகளையும் மனதில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.
இவை யாவற்றிற்கும் மேலாக ஒரிஜினல் AVE மோட்டர் பொருத்தப்பட்டுள்ளது. ஒரு வருட உத்தரவாதமும் உண்டு 2 லீற்றர் முதல் 5 லீற்றர் வரை உள்ளடக்கத்தை கொண்டது.

"லக்ஷ்மி வெட் கிரைண்டர்" புதுமையின் வசதிகளையும் பழமையின் பக்குவத்தையும் ஒருங்கே கொண்டது



182, Sea Street, Colombo -11. Tel: 471421, 074-717901

# வெளிநாட்டு மாணவருக்கு சிறந்த கல்வி வாய்ப்புகள்

கடந்த ஆண்டு சுமார் 30,000 மாணவர்கள் பிற நாடுகளிலிருந்து இந்தியா சென்று உயர்கல்விக்காகத் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். இவர்களில் இலங்கையர் 1400 பேர்.

இந்தியாவின் கல்வித்துறையில், குறைந்த கட்டணமும், பலதரப்பட்ட பாடநெறிகளும் கவர்ச்சியானவை.

சில உயர்கல்வி நிறுவனங்கள் இலங்கை மாணவர்களுக்கென ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான இடங்களை ஒதுக்கி வைக்கின்றன. இவற்றுக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்திலுள்ள கல்விப் பிரிவில் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

எம்.பி.பி.எஸ் மற்றும் மருந்தாய்வு நெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் உயர் தரப்பரீட்சையில் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதீகவியல் பாடங்களில் சிறப்புச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

பொறியியற் கற்கை நெறிகளான D.E மற்றும் B.Tech ஆகியவற்றுக்கு தூய கணிதம், பிரயோக கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகியவற்றில் சிறப்புச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

வெளிநாட்டு மாணவர்கள் இக்கற்கை நெறிகளுக்கு இந்திய மருத்துவ கவுன்சிலின் அங்கீகாரம் பெற்ற தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

தொழில் முறைக்கல்வி நெறிகளுக்கு வெளிநாட்டு மாணவர்கள் நேரடியாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

### விவசாயக் கற்கைநெறி

பி.எஸ்.சி உட்பட விவசாயக் கற்கை நெறிகளுக்கு அனுமதிகோரி அனுப்பும் விண்ணப்பங்கள், Students cell வெளியுறவு அமைச்சு, அக்பர் பவான், புதுடில்லி 110021 என்னும் முகவரியிடப்பட்டு கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

புதுடில்லி Indian Council of Cultural Relations நிறுவனத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் அதற்கெனத் தெரிவு செய்யப்பட்டவர்கள் விவசாயப் படிப்புகளுக்கான சிறப்புப் பல்கலைக்கழகங்களுக்கு பட்டமுன் படிப்பு அல்லது பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் இந்தப் பல்கலைக்கழகங்களுக்கு கட்டணம் செலுத்தி மாணவர்கள் விண்ணப்பித்தலாகாது.

### பொதுக் கற்கைநெறி

கலை, விஞ்ஞானம், வர்த்தகம், கல்வி, சட்டம் ஆகிய கற்கை நெறிகளுக்கு கட்டணம் செலுத்தி மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்துக்கு நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

சில பல்கலைக்கழகங்களிலும், இந்திய கலை கலாசார மையங்களிலுமே இந்திய நடனம், இசை, கலை, கற்கை நெறிகள் போதிக்கப்படுகின்றன.

### புலமைப்பரிசில் திட்டம்

வெளிநாட்டு மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தின் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. முறைசாராக் கற்கை நெறிகளுக்கும், ஆய்வுப்பணிகளுக்கும் இவை வழங்கப்படுகின்றன. இலங்கையில் இருந்து ஆண்டு தோறும் 60 பேருக்கு இவ்வாறு வழங்கப்படுகிறது.

கலாசார பரிமாற்றத்திட்டம் ஒன்றின் கீழும் (Cultural Exchange Programme) புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

மருத்துவக்கற்கை நெறி தவிர்ந்த ஏனைய பட்டப்படிப்புகளுக்காக இலங்கை மாணவர்களுக்கு சுமார் 50 புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

சார்க் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் — ஆண்டொன்றுக்கு பட்டப்பின்படிப்புகளுக்கென இலங்கையர்களுக்கு இரண்டு புலமைப் பரிசில்களும் ஒரு Fellowship உம் வழங்கப்படுகிறது.

பொருளாதாரம், கல்வி, சுற்றாடல், விவசாயம், தகவல் பரிமாற்றம், மொழியும் இலக்கியமும், சமூகவியல், போக்குவரத்துத் துறை பொறியியல், பிரயோக பொருளியல், வர்த்தக நிர்வாகம், உயிர் இரசாயனவியல், சமூகப்பணி, உணவுத் தொழில்நுட்பம், மனையியல் ஆகிய நெறிகளுக்கே புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

பொதுநலவாய அமைப்புப் புலமைப் பரிசிலும் . ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கு வழங்கப்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் கொழும்புத் திட்டத் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டம் பல கற்கை நெறிகளையும் உள்ளடக்கிய 50 வரையிலான புலமைப்பரிசில்களை வழங்குகிறது. இது இலங்கை நிதியமைச்சின், வெளிநாட்டு வளப் பிரிவின் மூலமாக இந்திய தூதரகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### விண்ணப்பிப்பது எப்படி?

காலத்துக்குக் காலம் இலங்கை உயர்கல்வி அமைச்சு விளம்பரங்கள் வாயிலாக இதற்கான விவரங்களை வெளியிடும். ஜனவரி பிற்பகுதியில் அல்லது பெப்ரவரி முற்பகுதியில் இவை வெளிவரும். ஆங்கிலப்புலமையை முதன்மைப் படுத்தி நேர்முகப்பரீட்சை நடத்தப்படும்.

தேர்ந்தெடுக்கப்படுவர்கள் இந்தியத் தூதரகத்தால் வழங்கப்படும் பத்திரங்களில் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு இந்திய தூதரகத்தில் அல்லது இந்திய கலாசார நிலையத்திலுள்ள கையேட்டை (Handbook) பயன்படுத்தி அறியலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் பத்திரங்கள் புதுடில்லியிலுள்ள இந்திய கலாசார உறவுகள் மையத்துக்கு (ICCR) அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு இந்தியத் தூதரகம், கல்விப்பிரிவு 36—38, காலிவீதி, கொழும்பு—03 என்னும் முகவரியுடன் அல்லது 421605— நீட்சி 605 என்னும் தொலை இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

# தகவல் தொழில்நுட்பப் புரட்சி

தென்னிந்தியாவில் கோவில்கள் நிறைந்த மதுரைப் பகுதியில் உள்ள ஒரு செய்தியாளரால் புதுடில்லியிலுள்ள அவரது நண்பரிடமிருந்து செய்திகளை ஒரு கணநேரத்தில் பெற்றுக் கொள்ளவும், விரும்பிய செய்திகளை அவ்வாறே அனுப்பிவைக்கவும் முடிகிறது.

புதுடில்லியின் இல்லத்தரசிகள் தத்தமது வீடுகளில் இருந்தவாறே காய்கறி வகைகள் தொடக்கம் வீட்டுச் சாமான்களை மின்னஞ்சல் மூலம் 'ஓடர்' செய்து பெற்றுக் கொள்ள முடிகிறது. இணையத்தின் வழியே நூல்களையும் இசை கசட்களையும் பெறக் கூடியதாயுள்ளது.



இந்திய மாநிலங்கள் கிராம மட்டத்தில் தமது நிர்வாகப் பணிகளை உயர் தகவல் தொழில்நுட்பம் கொண்டு மிகவும் முன்னேற்றகரமாக நடத்துகின்றன. விவசாயிகள் தமது உற்பத்திகளுக்கு மேலான விலைகளை பெற்றுக் கொள்ளவும் இணையம் உதவுகின்றது.

இந்தியா பிந்தியே கணினித்துறையில் ஈடுபாடு காட்டத் தொடங்கி இருந்தது. ஆயினும் இப்பொழுது 40 லட்சம் இணையப் பாவனையாளர் உள்ளனர். மதிப்பீடுகளின்படி எட்டு ஆண்டுகளில் இது 3 கோடியே 50 லட்சமாக உயரும். அதற்கப்பாலும் சென்று 10 கோடி எல்லையை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவை தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு மேலோங்கிய வல்லரசாக பத்து ஆண்டுகளில் ஆக்குவேன் என்று 1998இல் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்திருந்தார்.

இதனை அமுல் செய்யும் வகையில் முதல் முயற்சியாக தேசியக் கொள்கை வகுப்புக் குழுவொன்றை வாஜ்பாய் அமைத்தார். அண்மையில் இணையக் குற்றங்களுக்கு கடும் தண்டனை வழங்கும் சட்ட மூலத்தையும் இந்திய நாடாளு மன்றம் நிறைவேற்றி இருந்தது.

இப்பொழுது இந்தியா முதற்தர மென்பொருள் ஏற்றுமதி நாடாகியுள்ளது. அமெரிக்க வர்த்தகர்கள் இந்தியாவை முதற்தர மென்பொருள் அபிவிருத்தி நாடு என வகைப்படுத்தியுள்ளதாக உலக வங்கி ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. Fortune 500 வகை கம்பனிகள் 160 வரையில் இந்திய மென்பொருட்களைப் பெற்று வருகின்றன.

தகவற் தொழில்நுட்பப் புரட்சி இந்தியா உட்பட உலக நாடுகளின் வாழ்க்கை முறைகளில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

அண்மையில் 'இன்ரெல் கோப்' (Intel Corp) நிறுவன பிரதான நிர்வாகி பரற் ''ஆசியாவின் வர்த்தக அச்சாணியாக யார் திகழப்போகிறார் என்பதை காட்டும் ஒட்டப்போட்டி இப்போது நடைபெறுகிறது'' என்று தெரிவித்திருந்தார்.

— என் வாசுகி ராவ்


Best wishes for the people of the India and the Government of India

Sole Agents For

bajaj FANS, Hot Water, Geyzers, Irons, Water Filters, Household Bulbes, Fluorescent Tubes and Electrical Appliances.



The rang of Bajaj

Home appliances

bajaj

SUPREME STAINLESS STEEL WATER FILTERS.

Capacity 16,18,20 & 26 Litres.



POPULAR LIGHT WEIGHT IRON



Thermal fuse for aditional safety.
Special non-stick coating of Akzo-Noble of italy on the sole plat for extra- smooth gliding.

EXHAUST FANS



Low power consumption.
Heavyduty Industrial Fans.
1 year guarantee (on motor only)
Sizes 12",15", 18"& 24"
Power - single phase.

bajaj bajaj

Sole Agents
Capricorn Enterprises
50-1/12, Galle Road, Wellawatte, Tel:592919, 508152
Fax: 592477, E-mail: capricon@sri.lanka.net



இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்

Satha Video

PHOTO GRAPHERS & VIDEO GRAPHERS

விடியோ உலகில்
தனக்கென முத்திரை பதித்து
புகழ் பெற்ற ஸ்தாபனம்

SATHA VIDEO

Orchard Building,
7-2/8, Second Floor, Galle Road, Colombo - 06.
Phone : 584191, 591812 Fax: 94-1-91812 Mobile : 077-304027



இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்

DANA GROUP OF COMPANIES

* Dana Man Power (Pvt) Ltd.
* Dana Tours & Travels (Pvt) Ltd.
* Dana Exports (Pvt) Ltd.
* Dana International Educational (Pvt) Ltd.
* Dana Auto Engineers
* Dana Shipping (Pvt) Ltd.
* Dana Manpower (Pvt) Ltd Shipping Division

104, Sea Street, Colombo - 11.
T.P: 075-333346/7/9, 385046, 335099
Fax: 335100, 437166

## நல்லைக் கந்தன்

# தேர் - தீர்த்தோற்சவ மலர்

நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா 17ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 18ஆம் திகதியும் நடைபெறுகின்றன.

கடந்த 4ஆம் திகதி நல்லூர்க் கந்தன் கொடியேற்றம் இடம்பெற்றது. கொடியேற்றத் துடனேயே ஊரெல்லாம் விழாக் கோலம் பூண்டது.

நல்லூர்க் கந்தன், தத்துவத் தமிழ்க் கடவுள் குமரன். அவனை மனமுருகி மனதார மன்றாடி வணங்கினால் எமக்கெல்லாம் அபயமளித்து எங்கள் குறையகற்றி அருள் மழை பொழிவான்.

தமிழ் என்றால் அழகு. அழகு என்றால் முருகன். முருகன் அழகன் என்றும் குமரன் என்றும் மிகப் பழங்காலம் தொடங்கியே முருகனைக் கண் கண்ட தெய்வமாக நினைந்து போற்றி வந்தவர்கள் தமிழர்கள்.

தமிழ் மக்களின் உள்ளங்கள் முருகனுறையும் ஆலயங்களாகும். முருகா என்று ஒரு முறை கூவியழைத்தாற் போதும் அவன் அன்பருக்கு அன்பனாகவும் அடியவருக்கு எளியவனாகவும் கவிஞருக்குப் புலவனாகவும் காட்சியளிப்பான்.



அன்றாடம் வாழ்வில் துன்பமும் துயரமுமாக நிம்மதியற்று அலையும் மானிட உள்ளங்கள் பிணிந்திழுக்கும் கழிப்பிலிருந்து விடுபடவே ஆலயம். பண்டிகை, உற்சவம் என்று ஏற்படுத்தி யுள்ளனர் நம் ஆன்றோர்கள்.

எல்லாவற்றிலிருந்தும் முழுமை யான விடுதலையும் நிம்மதியும் மீண்டும் எதிர் நீச்சலிடுவதற்கு வலிமையும் தரவல் லது இறைவழிபாடுதான்.

உற்சவம் என்பது மேலான செல்வம் எனவும் உத்தமயாகம் எனவும் பஞ்ச கிருத்தியங்கள் எனவும் ஆகமவிதி கூறும். இதனை நடத்துபவர்களும் பார்ப்பவர் களும் புண் ணியவான்களே.

ஆகவே நல்லூரில் விழாக்காணும் அத்தனை பேரும் பெரும் புண்ணிய சீலர்களாவர். நல்லூர்த் திருவிழாச் சிறப்பையும் ஆலயத்தின் அழகையும் சிந்தையில் நிறுத்துவது நம் உள்ளங் களைப் புனிதப்படுத்துவதோடு ஒவ்வொ ருவர் உள்ளத்திலும் ஒட்டிக் கொண்டி ருக்கும் சுயநலம், பொறாமை, பிறர் பொரு ளைக் கள வாடும் பேரவா, வெகுளி, இன் னாச் சொல், அகங்காரம் முதலிய மாசுகளைப் போக்கவும் வாய்ப்பளிக்கிறது.

கொடியேற்றத்தின் பின்னர் இடம்பெறும் 24ஆம் திருவிழா அன்றே தேர்த்திருவிழா.

ஆறுமுகப் பெருமான், வள்ளி, தெய்வானை சமேதரராய் வெள்ளிச் சிங்காசனத்தில் வீற்றிருந்து கோபுரவாயிலை வந்தடைவார்.

தேரில் ஏறி முருகப் பெருமான், வள்ளி, தெய்வானை சமேதரராக வீதி வலம் வருவார்.

நல்லூர் ஆலயத்தில் 25ஆம் திருவிழாவன்று பிற்பகல் தீர்த்தோற்சவம் ஆரம்பமாவது வழக்கம். விநாயகப் பெருமான் வெள்ளி எலி வாகனத் திலும், தெய்வானை அம்மன் வெள்ளி மயில் வாகனத்திலும், வேற்பெருமான் தங்க மயில் வாக னத்திலும், வள்ளியம்மன் வெள்ளி அன்ன வாக னத்திலும், சண்டேசுரர் வெள்ளி ரிஷப வாகனத் திலும் தீர்த்த மண்டபத்தில் எழுந்தருளுவர்.


**Be.Es.En. Traders**

உலகின் முதல்தர பிரிண்டிங் கெமிக்கல் மற்றும் இதர பொருட்களையும்

அறிமுகம் செய்கிறோம்

New Showroom : Be.Es.En. Traders E/G1, Central Road, Colombo 12. Tel : 075-365138/9
Stores : No. 276, Wolfendhal Street, Colombo 13.
Tel : 330297, 335008, 348418, 348419 Fax: 449809
E-mail : bees@isplanka.lk

**JAYALALITHANGHI JEWELLERS**

இவள் தேவதையோ என வியக்க வைக்கும் தங்க நகைகளை நவீன டிசைன்களில் நேர்த்தியாக செய்து பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

ஜெயலலிதாங்கி ஜுவலர்ஸ்
இல. 225, காலி வீதி,
கொழும்பு – 04.
தொலைபேசி: 595144

திருமணம் மற்றும் சகல வைபவங்களுக்கும் தேவையான அனைத்து சைவ உணவுகளையும் பெற்றுக்கொள்ள

SLV ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

**SRI LUXMY VILLAS**
No. 228, Galle Road, Colombo - 06.
Tel: 077-682569

யுனைடட் இன்டர்நெஷனல் மார்க்கட்டிங்

இறக்குமதியாளர்கள் மற்றும் மின்சார, இரும்புச் சாமான்களை விநியோகிப்பவர்கள்

**UNITED INTERNATIONAL MARKETING**
107 - D, Galle Road, Colombo - 06.
Tel: 501944, 074-512183

YARL Ganesha Jewel House

யாழ். கணேசா நகையகம்

தங்க, வெள்ளி நகைகளை கொள்வனவு செய்பவர்களும் விற்பனை செய்பவர்களும்

ஓடர்கள் உடனுக்குடன் செய்து தரப்படும்!

124, Sea Street, Colombo - 11.
Tel: 336252

கணேசா நகையகம்
194, Kasthuriyar Road, Jaffna.
123, Bazar Road, Vavuniya.
Tel: 024 - 22464

J/ மஹாலக்ஷ்மி தங்கமாளிகை

நீங்கள் விரும்பும் நகைகளை
நீங்கள் விரும்பும் வடிவத்தில்
அசல் 22 கரட் தங்கத்தில்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய நம்பிக்கையான இடம்



J/ Mahaluxmy
S.R. THANGAMALIKAI (78)
(Genuine 22 Ct.Gold)
Sea Street, Colombo -11,
Tel : 330937 Fax : 458581

**NEEPA JEWELLERY**
Genuine 22carat

அற்புத கலை நயம்;
தீபாவின் அதிசயத் தொழில் வளம்
அபூர்வ வடிவங்கள்;
அத்தனையும் அழகிலும் அழகு!
பரிசுத்த தங்கத்தில்;
எந்நாளும் தெரிவதோ பொலிவு!!
தரித்து வாரீர்;
நவரத்தினத்தின் புதுமையைக் காணீர்.



309-2/4, Galle Road,
Colombo - 06
T.P:- 505942

கனகாம்பிகை அரைக்கும் ஆலை

**Kanagambhigai Mills**

ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், அரிசி குத்துதல், பருப்பு, உளுந்து, கடலை, மசாலா தூள் வகைகள், தேங்காய் எண்ணெய் மற்றும் எண்ணெய் வகைகள், பொது விற்பனையாளர்கள்

249 - 1, Grandpass Road, Colombo - 14. Tel: 384303, Fax: 307523

# வாக்கெடுப்பு ஒத்திவைப்பு வெறும் 'பம்மாத்து'

## ஜனாதிபதிக்கு துணிச்சல் இல்லை என்கிறார் சந்திரசேகரன்



சந்திரசேகரம்

அடுத்தடுத்து வரும் தோல்விகளை எதிர்நோக்கும் துனிச்சல் ஜனாதிபதிக்கு இல்லை. அதனால்தான் வாக்கெடுப்பைப் பின்போட்டுள்ளார். இது ஒரு பம்மாத்து.

இப்படிக் கூறுகின்றார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் எம்.சந்திரசேகரன் எம்.பி.

சர்வஜன வாக்கெடுப்பு பின்போடப்பட்டது தொடர்பாக சந்திர சேகரன் எம்.பி. யிடம் அவரது நிலைப்பாடு என்ன என்று கேட்டோம்.

எமக்குப் பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

சந்திரசேகரன் மேலும் கூறியதாவது:—

நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் மட்டும்தான் எமது கோரிக்கை அல்ல. மலையக மக்கள் தனி ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படவேண்டும். தேசிய மட்டத்தில் விகிதாசாரப்படி கிடைக்கும் அனைத்துப் பங்கீடுகளும் எமக்கும் ஒதுக்கப்பட வேண்டும். இந்தியப் பிரஜைகள் நாடற்றவர்கள் என்ற பேதங்களுக்கு இடமளிக்காமல் இங்கு வாழும் அனைவரும் இந்நாட்டுப் பிரஜைகள் என்று ஏற்றுக் கொள்ளப் படவேண்டும். இவை அனைத்தும் அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். இதுதான் மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு. வெறுமனே நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்கிறது என்பதால் எவரையும் ஆதரிக்க முடியாது.

சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்துவிட்டு நாடாளுமன்றத்தை கூட்டும் துணிவும் ஜனாதிபதிக்கு இல்லை. உடன் இருக்கும் அமைச்சர்களே முதுகில் குத்தி விடுவார்கள் என்ற அச்சம்.

இதனால் முன்னுக்குப் பின் முரணாக மீனுக்கு வாலையும் பாம்புக்குத் தலையையும் காட்டுவது போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஜனாதிபதி பேசுகிறார்.

அரசமைப்பை மாற்ற வேண்டும் என்பதை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அது எப்படி அமைய வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகளுடன் பேசி அறியவேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் தேச வழமை முன்பு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் என்ன செய்தார்கள்? குடியேற்றத் திட்டங்கள் மூலம் பெரும்பான்மை இனத்தவர்களையும் கிரிமினல்களையும் அங்கு குடியேற்றினார்கள்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள இரத்தக் களறிகளுக்கு இதுவே மூலகாரணம்.

யார் செய்தார் என்பது இப்போதைய கேள்வி இல்லை. இனிவரும் காலங்களில் இப்படியான நிலைமை ஏற்படக் கூடாது.

இதேபோன்று மலையகத்தில் தமிழ் தொழிலாளர்கள் நிறைந்து வாழும் தோட்டக் காணிகளை எங்கேயோ இருக்கும் சிங்களவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கின்றார்கள். இவை நிறுத்தப்பட வேண்டும். அங்கு வாழும் மக்களின் விகிதாசாரப்படியே காணிகள் வழங்கப்பட வேண்டும். நிரந்தரமாக அங்கு வாழும் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

தொழில் வாய்ப்புகள், அரச துறை நியமனங்கள் பல்கலைக்கழக அனுமதி என்பனவற்றில் எமது விகிதாசாரத்துக்கேற்ற ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும்.

அதிகார பரவலாக்கள் என்பது பெயரளவில் மட்டும் இருந்தால் போதாது. அது உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களை ஏமாற்றி திசை திருப்ப முனைகின்றார்.

நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறாமல் சட்ட வலுவற்ற வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முனைந்து படு தோல்வி கண்டுள்ளார். அக்டோபர் 18ஆம் திகதி அவர் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினாலும் மலையக மக்கள் முன்னணி எதிராகவே வாக்களிக்கும்.

இப்படி சந்திரசேகரம் கூறினார்.

பெரும்பான்மைக் கட்சிகள் இணைந்து கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்கவிருப்பதாக பரவலாகப் பேசப்படுகிறது. இது உங்களைப் போன்ற சிறு பான்மைக் கட்சிகளை நசுக்கி விடும் ஒரு திட்டமாக இருக்கும் என நீங்கள் கருத வில்லையா?'' என்று சந்திரசேகரனிடம் கேட்டோம்.

''இலங்கையைப் பொறுத்தவரையில் இப்படி ஒரு நிலைக்கு வருவது நடைமுறைக்கு ஒத்து வராது. அந்த பரந்த மனப்பான்மையும் இவர்களிடம் இல்லை'' என்று அவர் பதில் அளித்தார்.

**மலையகக் கண்ணோட்டம்**
இரா. புத்திரசிகாமணி

# போக்குவரத்துச் சேவைகள் சீராக இல்லை என்கிறார் ஆறுமுகம்

தோட்டத் தொழிலாளர்களினதும் பாடசாலை மாணவர்களினதும் நலன்கருதி அட்டன் தலவாக்கொல்லை பிரதேசத்தில் மேலதிக பஸ் சேவைகளை நடத்தும்படி தோட்ட உட்கட்டமைப்பு கால் நடை அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்பொழுது நடத்தப்படும் சேவைகள் திருப்திகரமாக இல்லை என்றும் முன்பு நடைமுறையில் இருந்த பல சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக அமைச்சர் ஆறுமுகம் நுவரெலியா பிராந்திய போக்குவரத்துச் சபை நிர்வாகப் பணிமனைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கரபத்தனை டயகம போன்ற தூர இடங்களில் இருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களும் அத்தியாவசிய தேவைகளுக்காக நகருக்கு வரும் தோட்டத் தொழிலாளர்களும் மாலை நேரங்களில் வீடு திரும்ப முடியாமல் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

எனவே முன்னிரவு நேரத்தில் 7.45 மணிக்குப் பின் தலவாக்கொல்லையில் இருந்து டயகமவுக்கு ஒரு சேவையை நடத்தவேண்டும்.

முன்பு அதிகாலை 4.30 மணிக்கு தலவாக்கொல்லையில் இருந்து கொழும்புக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பஸ் இப்பொழுது ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதனால் இப்பிரதேசங்களில் இருந்து கொழும்புக்குச் செல்வோர் அதிகாலைப் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றனர். எனவே இந்த அதிகாலை நேர பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

பின்னிரவு நேரத்தில் கொழும்பில் இருந்துவரும் பஸ் அட்டனில் இடைநிறுத்தப்படுகிறது. கொட்டகலை, தலவாக்கொல்லை, அக்கரபத்தனை, டயகம ஆகிய இடங்களுக்கு செல்லும் பயணிகள் பெரும் சிரமம் அடைகின்றனர். எனவே இந்த பஸ் சேவை டயகம வரை நீடிக்கப்பட வேண்டும்.

இப்படி அமைச்சர் ஆறுமுகம் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.

'' போக்குவரத்துச் சேவைகள் பொது மக்களின் நலன் கருதியே நடத்தப்படுபவை. இதனை இலாபம் சம்பாதிக்கும் ஒரு தொழிலாகக் கருதக்கூடாது'' என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.


# நல்லைக்கந்தன் அருளை வேண்டி நிற்கின்றோம்


RETINA INSTITUTE OF BUSINESS STUDIES



Kids Computing
MS Office
Diploma in Computer Studies
Graphic Designing
Web Designing
Tofel
Spoken English Classes
2 1/2, Edward Lane, Colomo - 03.
Tel: 507781, 507782



நித்தியா ஜூவலர்ஸ்
பளபளக்கும் தங்க நகைகளையும்
மினுமினுக்கும் மாணிக்கங்களையும்
ஒரே இடத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ள



செட்டியார் தெருவில்:
NITHIYA JEWELLERS
169, Sea Street, Colombo - 11.
Tel: 074-718805

RETINA RECRUITING
வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஸ்தாபனம்
ஆண், பெண் இருபாலாருக்குமான வேலைகள்
Cyprus, Dubai, Qatar, Saudi-Arabia
மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில்
பெற்றுத் தருவோர்
RETINA RECRUITING
2 1/2, Edward Lane, Colombo - 03.
Tel: 507781, 507782

MAKKMILAN Book Depot
Book - Sellers - Stationers & Puplishers




No.195, Olcott Mawatha, Colombo - 11.
Tel : 449565, Fax : 0041-449565.

Satha Video
PHOTO GRAPHERS & VIDEO GRAPHERS
வீடியோ உலகில் தனக்கென
முத்திரை பதித்து புகழ் பெற்ற ஸ்தாபனம்
SATHA VIDEO
Orchard Building,
7-2/8, Second Floor, Galle Road, Colombo - 06.
Phone : 584191, 591812 Fax: 94-1-91812 Mobile : 077-304027

MIAMI RECEPTION HALL (PVT) LTD



இஸ்லாமிய, இந்து,
கிறிஸ்தவ திருமண
வைபவங்களுக்கு
அனைத்து வசதிகளுடன்
வாகன, தரிப்பிடமும்
கொண்ட ஒரே மண்டபம்
மியாமி திருமண மண்டபம்
இல. 33, அலெக்சான்ரா வீதி, கொழும்பு - 06.
தொலைபேசி : 504362 / 3, பெக்ஸ் : 94-1-440826
E-mail : mohdbros@cga.lk, albilal@sltne.lk

ராகவி ஜுவலரி
தங்க நகை உலகில் மங்கா
புகழ் பெற்ற ஸ்தாபனம்
அன்றும் இன்றும் என்றும்
22 கரட் நகைகளுக்கு



RAGAVI JEWELLERY
430/4, Mayura Place, Havelovk Road,
(Opp. Mayurapathi Amman Kovil)
Colombo-06. Tel: 077-764459

Maruthi Services
* Reception Hall * Hall Arrangements
* Meals (Indoor & Outdoor) * For all Occations
பல ஆண்டு காலமாக
மக்களின் நன்மதிப்பைப் பெற்று
தொடர்ந்து சேவையாற்றி வரும்
Orchad Building (Opp. Savoy),
7-2/8, Galle Road, Colombo - 06.
Tel: 584191, 591812 Fax: 94-1-891812
E-mail: mws@sol.lk

# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

முு.சிவநேசன்

இதழ் 13

**இதுவரை.....**

வயிற்றில் ஏற்பட்ட திடீர் வலியால் தாக்கப்பட்டு மயங்கிவிழும் சுமரா, உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பப்படுகிறாள்.

பிரபல தொழிலதிபரான மைக்கேல் தன் செயலாளரான மேசியின் மீது சந்தேகம் கொள்கிறான். மேசி தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறாள். தனது நண்பன் டானியலிடம் சில இரகசியக் கோப்புக்களைக் கையளிக்கிறாள் மேசி.

இனி.....

இதைவிடப் பெரிய துரோகம் எதனை மேசியால் மைக்கேலுக்குச் செய்ய இயலும்? தனது செயலாளர்களில் முதல் தரமானவள் என அவன் இவளை எண்ணி இருந்தான். அவள் திறமைசாலிதான் என்பதை மறுக்க மைக்கேலினால் இயலவில்லை. ஆனால் தனது திறமைகளை அவனுக்கு எதிராகவே பயன்படுத்துவதை அவன் எப்படிப் பொறுப்பான்?

''எதிரிகளுக்குத் தகவல் தருவதில் மேசி தீவிரமாக இருக்கிறாள். அவளது மனதில் காதல் வலை விரித்து அவர்கள் புகுந்திருக்கிறார்கள். எனது இரகசியங்கள் எவ்வளவு தூரம் எதிரிகளிடம் பிடிபட்டனவோ தெரியவில்லை. மேசி என்னிடம் பழகியதெல்லாம் போலி; வெறும் நடிப்பு; காரியத்தைக் கறக்கும் முயற்சி'' என்று மைக்கேலுக்கு இப்போது தெளிவாயிற்று.

பெண்களை நம்பினால் இப்படித்தான் ஆகும். அவனிடம் வேலைசெய்யும் ஆண்கள் எவ்வளவு விசுவாசமாக இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனுக்கு எதிரிகள் பல லட்சம் டொலர்களை சன்மானமாக கொடுக்க முனைந்த போது அதை வாங்கிவந்து மைக்கேலிடமே கொடுத்தவன் அவனது டீ7 அலுவலகத்தின் ஆண் செயலர் றொபின். அதை அவன் ஆயுள் முழுவதும் உழைத்திருந் தாலும் மைக்கேலிடமிருந்து சம்பளமாகப் பெற்றிருக்க இயலாது.



இந்தப் பெண்கள் 'நீதான் அழகி!' என்று சொல்கிறவனிடம் மயங்கிவிடுகிறார்கள். 'உன்னிடம் உயிரை வைத்திருக்கிறேன். உனக்காக வாழ்கிறேன்' என்றெல்லாம் பேசுகின்ற வஞ்சகர்களின் ஆசைக்கு எடுபட்டு விடுகிறார்கள். இவர்களை நம்பித் தொழிலைத் தொடங்கினால் இடையில் அம்போதான் என நினைத்தான் அவன்.

மேசி திங்கட்கிழமை கடமைக்கு வழமைபோலவே குஷியாக வந்திருந்தாள். மைக்கேலோடு இழைந்து குழைந்து கதைத்தாள். அவனும் கதைவிட்டுப் பார்த்தான். வார இறுதியில் அவளது பொழுது போக்கு என்னவாக இருந்தது எனக் கேட்டான்.

''உன்னையே நினைத்தபடி வீட்டில் அடைபட்டுக் கிடந்தேன். கோல் தர நினைத்தேன். குழப்பக் கூடாது என்று விட்டுவிட்டேன்'' என்றாள் அவள்.

நெருங்கி அவளோடு பழகும் சமயத்திலும் தன்னிடம் தகவல்களை விட்டுக் கொடுக்காமல் பழகுவதில் மேசி சுட்டிதான் என மைக்கேல் உணர்ந்து கொண்டான். நேரடியாக அவளிடம் டானியல் பற்றி அவன் கேட்டபோது அவள் அதிர்ந்து போனாள். சரமாரியாக பல கேள்விகளை மைக்கேல் அவளிடம் தொடுத்தான். ''அவனைக் காதலிக்கும் நீ ஏன் என்னிடம் அக்காதலை மறைக்கிறாய்?'' என்ற கேள்வி அவளது மனதைப் பாடுபடுத்தியது.

''என்னிடம் எதனையும் கேட்க வேண்டாம். கேட்டால் கடமைக்கு வராமல் நின்றுவிடுவேன்'' என மேசி மிரட்டினாள். அவளது அலட்சியப் போக்கும் மிரட்டலும் மைக்கேலின் வன்மத்தை அதிகரிக்கலாயின. வழமைபோல அவன் அவளைச் சமாதானப்படுத்த முயன்றபோது அவள் விலகிக் கொண்டது மைக்கேலின் ஆத்திரத்தை மேலும் அதிகரித்தது. 'இன்றைக்குப் புதிதாக என்ன பத்தினி வேடம் போடுகிறாள்?' என அவன் பொருமினான்.

வாக்குவாதம் வலுத்தது. மைக்கேலின் மனதினுள் வெறி புகுந்து கொண்டது. அவளை அவன் நெருங்கியது இன்று ஏனோ அவளுக்குப் பயமாகவும் இருந்தது. அவனது வேகம் வழமைபோல அன்பாக இருக்காது சற்று முரட்டுத்தன்மையாக இருந்தது. அவளால் தாக்குப் பிடிக்க இயலவில்லை. இன்று மறுத்தால் இந்தக் கோட்டையை விட்டு வெளியேற முடியாது எனவும் நினைத்துக் கொண்டாள்.

''இன்று வெளியேறினால் அதுதான் இறுதி. இனி இங்கு வருவதே இல்லை. இரவோடு இரவாக டானியலுடன் வேறு நகரத்துக்கே போய்விடல் வேண்டும். அதுவரைதான் இவனது ஆட்டத்துக்கெல்லாம் தாளம் போடுவது'' என நினைத்துக் கொண்டாள்.

மேசியின் கொஞ்சலும் குலாவலும் இதமாகப்படவில்லை அவனுக்கு. அவளது பட்டு இதழ் முத்தங்கள் வழமைபோல இயல்பாக இருக்கவில்லை. அவனது முரட்டு மேனியிலும் அவை இன்று ஏனோ முள்ளாகத் தைத்தன. முட்கள் நிறைந்த ரோஜா இதழ் முத்தங்கள் இதயத்தைக் கீறிக் கிழித்துப் படுத்தும் பாடு பொறுக்க மாட்டாமல் தவித்தான் மைக்கேல்.

மேசியின் செயற்பாடுகளில் இன்று உயிரோட்டம் இருக்காது என்பது மைக் கேல் ஏற்கனவே எதிர்பார்த்த விடயமாகத்தான் இருந்தது. உயிரைக் கொடுப்பது போல நடித்து பின்பு உயிரை வாங்குவதில் பெண்கள் பெயர் பெற்றவர்கள் என்பது மைக்கேலுக்குப் புரிந்த விடயம். என்றாலும் ஏமாற்றத்தை மனது தாங்க வில்லை.

மீண்டும் வாக்குவாதம் வலுத்தது. பிக்கல் பிடுங்கல்கள் மோதலாக மாறிவிட்டன. ஈற்றில் மைக்கேலின் இரும்புக் கரங்கள் அவளது குரல் வளையை நெரிக்கும் அளவிற்கு ஆத்திரம் பெருகி விட்டது. கால அவகாசம் கொடுத்து கொலையைத் தந்திரமாகச் செய்விக்க மைக் கேலினால் இயலவில்லை.

அவனது முகம் கர்ண கடூரம் ஆகி விட்டது. உடல் கோபத்தினால் பதற்றம் எடுத்தது. அவளது மாற்றத்தை அவனால் ஜீரணிக்க இயலவில்லை.

அவனது அலுவலகங்கள் பலவற்றிலும் 'யு5' தான் நிறையச் சாதனைகளைச் செய்திருந்தது. அதனால்தான் மேசியுடனான அவனது அன்னியோன்னியம் உச்சம் கண்டிருந்தது. இருவரும் இணைந்து ஆற்றிய கருமங்கள் பல வெற்றிகளைக் குவித்து வந்தன.

தன்னோடு உயிரைவிட்டு நடித்து தனக்கே அள்ளி வைத்தவளை தன் கையாலேயே கொன்றுபோட அவன் தயாராகிவிட்டான். தனது மனதை அணு அணுவாகச் சித்திரவதை செய்த அவளது செயல்களை எண்ணிப் பெருமூச்சு விட்டான். அணு அணுவாக சித்திரவதை செய்து அவளைக் கொன்று போட்டாலும் தன் ஆத்திரம் அடங்கப் போவதில்லை என்பதைக் கண்டு கொண்டான்.

''நீ மிரட்டியபடி இனிமேல் இங்கு வரவேண்டிய அவசியம் இல்லை. இன்றே உனக்கு விடுதலை தருகிறேன்'' என்றான் அவன். அதனை நம்பியபோது சிக்கல் சுமுகமாகத் தீருகிறதே என ஆனந்தம் கொண்டாள் மேசி. அவளது முகம் பிரகாசம் அடைந்ததில் மைக்கேலின் கொதிப்பு இரட்டிப்பாகியது.

''இன்றோடு உனது கணக்கை முடித்து விடுகிறேன்'' என அவன் சொன்னபோது அவள் சம்பளத்தையே நினைத்தாள்.

''இனி நீ இங்கிருந்து போனால் தானே திரும்பி வருவதற்கு'' என அவன் சொன்னபோது அதை வேடிக்கையாகத்தான் எடுத்தாள். அவனது அளவுக்கு மீறிய இறுக்கமான அணைப்பில் திணறியபோதும் அது தன்னை மயக்குவதாகவே உணர்ந்தாள்.

தனது போலியான அன்றைய நடிப்பை மறந்து உண்மையில் அவனோடு சங்கமிக்கத் தயாரானாள். ஆனால் இறுக்கிய அவனது பிடி தளரவேயில்லை என்கின்றபோது திக்குமுக்காடிப் போனாள். அவளது குரல்வளையை அவன் நெரிக்கவும் ஆபத்தை உணர்ந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஓட முயன்றாள்.

அவன் அவளைக் கலைத்துப் பிடித்து அவளது கூந்தலால் கழுத்தைச் சுற்றி இறுக்கினான். மூச்சுத் திணறி கத்தவும் மாட்டாமல் தவித்தாள் மேசி.

மேசியை நிதானத்துக்குக் கொண்டு வந்தான் மைக்கேல். டானியலுடனான அவளது பஸ் உரையாடல்களை டேப்பில் போட்டுக் காண்பித்தான். இருவரும் ஏரிக்கரை ஹோட்டலில் உல்லாசமாக இருந்த கணங்கள் தொலைக்காட்சித் திரையிலும் ஓடிக்கொண்டிருந்தன.

இருவரும் ஏரியில் படகுவிடும் காட்சிகூட மைக்கேலின் தொலைக்காட்சித் திரையில் தத்ரூபமாக இருந்தது. அவர்கள் இருவரும் பேசிக்கொண்டதெல்லாம் தெளிவாகப் பதிவாகி இருந்தன. கேட்கக் கேட்க மேசிக்கு வியர்த்துக் கொட்டியது.

ஒவ்வொரு செயலிலும் அடிக்கடி டானியலைப் புகழும் மேசி மைக்கேலைப் பழிக்கவும் தவறவில்லை. தான் இரக்கம் காட்டி இணக்கமாக இருந்ததை மேசி பலவீனமாக எடுத்ததைச் சுட்டிக் காட்டினான் மைக்கேல்.

மேசிக்கு ஏக்கம் மூச்சை அடைத்தது. இனித் தப்பவே வழியில்லை என நினைத்துக் கொண்டாள். மைக்கேலின் 'பிஸ்னஸ்' பற்றி அவளுக்கு முழுவதும் தெரியும். எனவே 'இவனிடம் இனி உயிர்ப்பிச்சை கிடையாது' என நினைத்துக் கொண்டாள். அவனிடம் மன்னிப்புக் கேட்பதுகூட பலனளிக்காது என அவள் கண்டுகொண்டாள்.

மீண்டும் மைக்கேல் அவளை நெருங்கினான். அவனது இரும்புப் பிடி அவளது கழுத்தை நெருக்கியது. அவனது மார்பை தனது நகங்களால் பிடுங்கிக் கிழிக்க முயன்றாள் மேசி.

மீண்டும் அவளது கூந்தலால் அவளது கழுத்தைச் சுற்றி இறுக்கினான். பிடி தளராமல் பார்த்துக் கொண்டு அவளிடம் ஒவ்வொன்றாகக் கேள்விகளைக் கேட்டான். படபடவெனப் பயத்தில் உண்மைகளைக் கக்கினாள் மேசி. கதைக்கக் கதைக்க மைக்கேலின் பிடி இறுகியது. அவளது கழுத்தை மயிர்க் கற்றைகள் வெட்டிக் கொண்டிருந்தன.

இறுக்கம் மேலும் அதிகமானது. அவள் தவித்தாள். மூச்சுத் திணறியது. விழிகள் சொருகிக் கொண்டன.

(தொடரும்)

# ராசி பலன்

**12.08.2001 முதல் 18.08.2001 வரை**

**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

சனி, குருவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும் நிலையில் உள்ளன. பணத் தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனம் செலவை அதிகப்படுத்தலாம். மனச் சஞ்சலம் இருக்கும். எந்தச் செயலையும் சிரமப்பட்டே நிறைவேற்ற வேண்டியிருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் பிரச்சினை உருவாகலாம். நண்பர்களால் தொல்லை வர வாய்ப்புண்டு. பிரயாணத்தடை உண்டு.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

ராகு, சுக்கிரனைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். அதிர்ஷ்டம் வரவாய்ப்புண்டு. மன அமைதியுண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். எடுத்த கருமம் இலகுவில் முடியும். பிரயாண வாய்ப்புண்டு. திருமண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறை முன்னேறும். பதவி உயர்வு உண்டு. நண்பர்களால் உதவி உண்டு

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

குரு, ராகு, கேது வைத்தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்ய வாய்ப்புண்டு. பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் இருக்காது. எடுத்த செயல் தடைப்பட்டே நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். மன அமைதி இருக்காது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாணம் தடைப்படலாம். அல்லது தாமதமாகலாம். தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை. நண்பர்களால் உதவி உண்டு.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

சனி, குருவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும் நிலையில் உள்ளன. பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த காரியம் சிரமப்பட்டே செய்து முடிக்க வேண்டியிருக்கும். வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். பிரயாண பலன் உண்டு. திருமணப் பேச்சு தற்காலிகமாக தடைப்படலாம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. நட்பு பகையாக மாறலாம்.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1**

செவ்வாய், கேது, சுக்கிரனைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும் நிலையில் உள்ளன. பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த காரியம் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண யோகம் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் துறையில் சில பிரச்சினைகள் உருவாகலாம். மன அமைதி உண்டு. நண்பர்களால் உதவியுண்டு.

**கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

சனி, செவ்வாய், கேதுவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த கருமங்களை செய்து முடிக்கலாம். கால விரயம் உண்டு. வீடு, வாகனங்களால் செலவு உண்டு. மன அமைதி குறையலாம். திருமணவாய்ப்பு உண்டு. பிரயாண யோகம் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு.

**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

சனி, ராகுவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும் நிலையில் உள்ளன. பணத்தட்டுப் பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். திருமணப்பலன் உண்டு. பிரயாண பலன் உண்டு. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எண்ணிய எண்ணம் நிறை வேறும். தொழில் துறையில் பெரிதாக முன்னேற்றம் இல்லை. நண்பர்களால் உதவியுண்டு.

**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை**

கேது, சனி, குருவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யலாம். பணத்தட்டுப்பாடு இருக்கும். கடன்படவேண்டியும் வரலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை சிரமப்பட்டே செய்து முடிக்க வேண்டும். வீடு, வாகனம் இலாபம் தரும். திருமணப் பேச்சு தாமதிக்கலாம். பிரயாணமும் பின் போடப்படலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் யோகம் உண்டு. நண்பர்கள் உதவுவார்கள்.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம்1.**

செவ்வாய், ராகு, கேது, சுக்கிரனைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த காரியம் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். மன அமைதி குறையலாம். திருமண யோகம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் யோகம் உண்டு. பதவி உயர்வு உண்டு. வசதியான இடமாற்றம் உண்டு.

**மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.**

சனி, குருவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த கருமத்தை இலகுவில் முடிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணப் பேச்சு தாமதமாகலாம். உடல் ஆரோக்கியமாக இருக்கும். தொழில் யோகம் உண்டு. மன அமைதியுண்டு. நண்பர்களால் செலவு ஏற்படலாம்.

**கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

சுக்கிரன், ராகுவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த கருமங்கள் இலகுவில் முடியும். வீடு, வாகனம் லாபம் தராது. மன அமைதி உண்டு. திருமண யோகம் உண்டு. தொழில் யோகம் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்களின் உதவியுண்டு.

**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

ராகு, புதனைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் முடிக்கலாம். வீடு, வாகனங்களால் லாபம் இல்லை. திருமணப் பேச்சு வெற்றி தரும். பிரயாண பலனும் உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில்துறை முன்னேறும். நண்பர்களால் உதவியுண்டு



# 'சிட்டிசன்' நாயகி கொச்சிப்பக்கம் போகிறார்

'சிட்டிசன்' படத்தில் அஜித்தின் கெட்டப் பிடித்ததோ இல்லையோ! அழகுப் பொம்மையாக ஆடிப்பாடிய வசந்தராதாவை அனைவருக்கும் பிடித்தது. அவரை ஒப்பந்தம் செய்வதற்குத் தமிழ்த் தயாரிப்பாளர்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்க, மலையாளத் தயாரிப்பாளர்கள் வசந்தராதாவை கொச்சிப் பக்கம் அள்ளிக்கொண்டு போயிருக்கிறார்கள். மலையாளத்தில் மோகன்லால் ஜோடியாக 'ராவணபிரபு' என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கின்றார் வசந்தராதாம்.

# அமெரிக்க ஷோ'வில் விஜய்

விஜய் நடித்த 'பத்ரி' படம் அமெரிக்காவில் திரையிடப் பட்டிருந்தது. இந்த நேரத்தில் விஜய்யும் அமெரிக்கா சென்றிருந்தார். அதைக் கேள்விப்பட்ட ரசிகர்கள் விஜய்யை வரவேற்று விளம்பரப் படுத்தியிருந்ததுடன் 'பத்ரி' திரையிடப்பட்டிருந்த தியேட்டருக்கு அவரை அழைத்திருந்தார்கள்.

'பத்ரி' படத்தின் காட்சிக்கு இடையில் விஜய் பேசிய போது, ''அமெரிக்காவில் எனது படம் ஓடுகிறது என் பதற்காகப் பெருமைப்படுகிறேன். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் என்னை ரசிக்கின்றவர்கள் இருக்கின்றார்கள் எனும்போது இன்னும் உழைக்க வேண்டும். நல்ல படங்களை என் ரசிகர்களுக்குத் தர வேண்டும் என்ற உத்வேகம் பிறக்கின்றது.' என்று கூறியிருக்கின்றார்.



# ரம்யாவின் வளர்ப்பு அண்ணன்

''வளர்ப்பு மகன்'' விஷயம் தமிழ்நாட்டில் பிரபலம். ஆனால் ரம்யாகிருஷ்ணன் அறிமுகப்படுத்தியிருப்பது வளர்ப்பு அண்ணனை.

இஸ்லாமிய இளைஞர் ஒருவரை அண்ணனாகத் தத்தெடுத்திருக்கிறார். அவருக்குக் கண்ணன் என்று பெயர் வைத்து முறைப்படி மதமாற்றம் செய்திருக்கிறார்.

இப்போது ரம்யாவிற்கு கால்ஷீட் பார்ப்பதிலிருந்து உடைகள் வாங்கிக் கொடுப்பது வரை எல்லாமே அந்த அண் ணனின் சொற் படிதான் நடக்கிறதாம்.



### இனி இவர்கள்.....!

* ரோஜா கம்பைன்ஸ் எம்.காஜாமைதீன் அஜித்தை வைத்து ஒரு படத்தைத் தயாரிக்கிறார். படத்திற்கு 'ராமச்சந்திரா' என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.

* தமிழ்ப் பக்கமே தலைகாட்ட மாட்டேன் என்று கூறிய சம்யுக்தவர்மா இப்போது அர்ஜுனுக்கு ஜோடியாக 'அசோகா' படத்தில் நடித்து வருகிறார்.

# ஆண் மகனைப் பாதித்த 'அழகி' இவள்

''ஒவ்வொரு ஆணுக்குள்ளும் ஒரு அழகி இருக்கிறாள். அவளை மனப் பூர்வமாக அனைவரும் நேசித்திருப்பார்கள். அப்படி ஒரு ஆண் மகனைப் பாதித்த அழகி இவள்''

தனது 'அழகி' படத்தின் கதையைப் பற்றி இப்படிக் கூறியிருக்கிறார் படத்தின் டைரக்டர் தங்கர்பச்சான்.

எனது படத்துக்கு உலகத்தரம் வேண்டும். அதனால்தான் அழகியாக நந்திதா தாஸைப் போட்டிருக்கிறேன் என்கிறார்.



நந்திதா தாஸ்

# நந்தா வெற்றிக்கு உழைக்கிறார் பாலா

'சேது' படத்தைப் போலவே 'நந்தா' படத்தையும் வெற்றிப்படமாக்கி விட வேண்டும் என்பதில் டைரக்டர் பாலா மிகவும் கவனமாக இருக்கிறாராம்.

ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று ஷொட்டுகள்தான் எடுக்க வேண்டும் என்பது மட்டுமல்ல எதிர்பார்த்தபடி அமையவில்லை என்றால் எத்தனை முறை வேண்டுமென்றாலும் எடுப்பதற்குத் தயங்குவதில்லையாம்.

சமீபத்தில் சென்னையிலிருந்து 5000 துணை நடிகர், நடிகைகளை அழைத்துப் போய் ராமேஸ்வரம் கடற்கரையில் நடிக்க வைத்தாராம் பாலா.

இவர்களை இரண்டு நாட்கள் அங்கு தங்க வைத்ததோடு மேலதிக கொடுப்பனவு, சம்பளம் என்று பணத்தை வாரியிறைத்திருக்கிறார்.

''நந்தா''விற்காக அனைவரையும் கசக்கிப் பிழிந்து வேலைவாங்கும் பாலா, நாயகி லைலாவையும் விட்டு வைக்கவில்லை.

வெய்யிலில் நின்று நடித்ததனால் லைலாவா இது? என்று கேட்கும் அளவுக்கு இளைத்துப் போயிருக்கிறாராம்.



லைலா — சூர்யா
படம்: 'நந்தா'

# மாதவனுக்கு மணி விடுத்த எச்சரிக்கை

பரபரப்பிற்கும் சர்ச்சைக்குமுரிய படங்களை எடுப்பதற்கும் பெயர் பெற்றவர் மணி ரத்னம். 'கன்னத்தில் முத்தமிட்டால்' என்று பெயரிட்டுத் தொடங்கிய படத்தை 'மஞ்சள் குடை' என பெயர் மாற்றி எடுத்து வருகிறார்.

இதில் மாதவன் — சிம்ரன் நடிக்கிறார்கள். இது தெரிந்த விஷயம். ஆனால் இந்தப்படத்தின் கதையை வெளியில் கசியவிடக்கூடாது என்பதில் மிகவும் அவதானமாக இருக்கிறாராம் மணிரத்தினம். இயல்பிலேயே ஓட்டை வாய்க்காரரான மாதவனுக்கும் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாம்.

# திரை மறைவில்

மஜ்னுவின் காதலியின் பெயர் கொண்ட நடிகை இப்போது தமிழில் பிஸியாக இருக்கிறார். தமிழ் பேசுவதற்கு நடிகை எவ்வளவுதான் முயற்சித்த போதும் அவருக்குத் தமிழைச் சரியாகப் பேச முடியவில்லையாம். ஷூட்டிங்கில் அம்மணி நாக்கில் தமிழ் படும்பாட்டைப் பார்த்து டெக்னிஷியன்கள் விழுந்து விழுந்து சிரிக்கின்றனராம்.

**

மலையாளத் திரையுலகை கவர்ச்சியினால் தங்கள் காலடியில் கட்டிப் போட்டிருப்பவர்கள் ஷகீ சகோதரிகள்.

இவர்களில் ஷகீயின் காதல் விவகாரத்தைப் பற்றி ஏற்கனவே நாங்கள் உங்களுக்குச் சொல்லியிருந்தோம். அவரது காதலர் வேறுயாருமல்ல லேட்டஸ்ட் கெட்டப் நாயகனின் மச்சினனும் 'காதல் வைரஸ்' படத்தின் நாயகனுமான மலையாள அறிமுக நடிகர்தான்.

**

'லவ்லி' நாயகியின் கையில் இப்போது மூன்று படங்கள் இருக்கின்றன.

இதில் இரண்டு படங்கள் நவரச நடிகரின் சிபாரிசினால் கிடைத்தவையாம்.

**

கடந்த தமிழ்நாட்டுத் தேர்தலில் அ.தி.மு.க வின் பிரசாரப் பீரங்கிகளாகத் திகழ்ந்தவர்கள் அமெரிக்க சிட்டிசன் நடிகையும் 'அலைகள் ஓய்வதில்லை' நாயகி ராதையும்.

ஆனால் இப்போது இவர்களது காருக்கு போயஸ் கார்டனில் அனுமதி மறுக்கப்பட்டு விட்டதாம். காரணம் பிரசாரத்திற்கென அம்மா கொடுத்ததைவிட அதிகமாக வசூல் செய்து விட்டதுதானாம்.

**

[illegible] தந்த டைரக்டரான சூர்யமானவர் தனது 'நியூ' படத்தைக் கிடப்பில் போட்டு விட்டு 'பூமி' நடிகையின் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கிறார்.

'ரோஜாக்கூட்டம்' படத்திற்கு யார் [illegible] சூர்யமானவர் [illegible] படப்பிடிப்பு முடிந்த பின்னர் 'பூமி' நடிகைக்கு டிரைவர் [illegible] காதலியைப் பத்திரமாக [illegible] மறுவேலை பார்க்கிறாராம்.

**

உயிர் காப்பான் 'தோழன்' என்ற விளக்கத்தோடு 'தோழன்' படத்தை எடுத்து வந்தவர் வாசம் வீசும் புஷ்ப டைரக்டர். இதில் நாயகனாக அலைபாயும் நாயகனை நடிக்க வைக்க எண்ணியிருந்தார். ஆனால் இப்போது தோழனைக் கைவிட்டு விட்டு 'ஸ்ரீ' என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்.

கதாநாயகனாக நடிப்பவர் திரையுலக மார்க்கண்டேயரின் மகன். நாயகியாக புதுமுகம் ஸ்ருதிகா நடிக்கப் போகிறார்.

**

மகளைத் திரைக்களத்தில் இறக்கிப் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார் முன்னாள் கவர்ச்சி நடிகை. தாய் எட்டடி பாய்ந் தால் குட்டி பதினாறடி பாயும் என்ற சொல்லுக்கு உதாரணமாக மகளும் முன்னேறிக் கொண்டிருக்கிறார். ஆனால் முன்னாள் கவர்ச்சி நடிகையின் கணவர் மகளின் சம்பாத்தியத்தை தண்ணியிலே (மதுபானம்) தண்ணீராகச் செலவழிக்கிறாராம். இதனால் மகளுடன் தனிக் குடித்தனம் போய்விடுவதற்கு யோசித்து வருகிறாராம்.

**


''அவளை அறிமுகப்படுத்தி விட்டாச்சு. இனி தன்னுடைய நிலையை அவதான் ஸ்திரப்படுத்திக்கணும். ஆனால் ஒரு நடிகை எனும் முறையில் அவள் நன்றாகச் செய்வதாகவே நான் நினைக்கிறேன். பார்வை ஒன்று போதுமே படத்தில் அறிமுகமான உங்கள் தங்கை எடுபடவில்லை என்று கேட்டபோதே 'ரன்' நடிகை மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

**

வங்கத்து வக்கீல் நடிகை சின்னத் திரைத் தொடர் ஒன்றில் நடித்து வருகிறார். அம்மணியின் நடிப்பு அதன் தயாரிப்பாளருக்குப்பிடித்துப்போய்விட்டதாம். நடிகையின் திறமை பற்றி தனக்குத் தெரிந்தவர்களிடம் எடுத்துக் கூறியிருக்கிறார். இப்போது நடிகையைத் தேடி சின்னத்திரை வாய்ப்புகள் வந்து குவிகின்றனவாம்.







# சூடு பிடிக்கிறது மீனா-பிரபுதேவா விவகாரம்

நடிகை மீனா, பிரபுதேவாவைக் காதலிக்கிறார். இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்று பரபரப் பாகச் செய்திகள் வெளி வந்தன. ஆனால் சம்பந்தப் பட்ட இருவரும் எதுவும் சொல்லாமல் காலத்தைக் கடத்தி வந்தனர். இந்தக் காதல் விவகாரம் மீனாவின் பெற்றோருக்குத் தெரிய வந்ததும் மீனாவை அமெரிக்கா விற்கு அழைத்துச் சென்று வீட்டுச்சிறை யில் வைத்தனர் என்று செய்திகள் வந்தன. அமெரிக்காவிலிருந்து சென்னை வந்திருக்கும் மீனா பிரபல இந்திய சஞ்சிகை ஒன்றில் மனந்திறந்து பேசியிருக்கிறார். அதிலிருந்து...!

கே: சக நடிகை தேவயானியும் இப்படித்தான் தனது காதலை மறுத்து வந்தார். பின்னர் தேவயானி சுவரேறிக்குதித்துத் திருமணம் செய்து கொண்டார். நீங்களும் அப்படி ஏதும் செய்து கொள்வீர்களா?

ப: எனக்கு அப்படியொரு நிலைமை வராதுன்னு நினைக்கிறேன். அப்படியே வந்தால் சுவரென்ன... கடலையே தாண்டுவேன்.

கே: அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்ததைச் சொல்கிறீர்களா?

ப: அமெரிக்காவுக்கு டூரிஸ்ட் விசாவில்தான் போனோம். நாற்பத்தைந்து நாட்கள் முடிந்து விட்டால், அமெரிக்காக் காரனே இந்தியாவுக்கு அனுப்பி வைத்து விடுவான்.

கே: உங்களது பெற்றோர்தான் வலுக்கட்டாயமாக உங்களை அமெரிக்காவுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள் என்று செய்திகள் வந்ததே?

ப: இதில் பாதி உண்மை. பாதி பொய். நான் அவரை (பிரபுதேவா) லவ் பண்றது எங்க வீட்ல பிடிக்கலை. கொஞ்ச நாள் பிரிஞ்சிருந்தா அவரை மறந்திடுவேன்னு நினைச்சாங்க. அதுதான் இந்த அமெரிக்கா ட்ரிப்.

கே: மறந்து விட்டீர்களா?

ப: இல்லை. இப்பொழுதுதான் அதிகமாக லவ் பண்ண ஆரம்பிச்சிருக்கேன். அவரைப் பார்க்காத அந்த ஒரு மாசமும் ......யப்பா! துடித்துப் போய்விட்டேன். எத்தனை கஷ்டம் வந்தாலும் அவரைத்தான் கல்யாணம் பண்ணுவேன்.

கே: பிரபுதேவாவின் முதல் மனைவி ரம்லத்தைப் பார்த்தால் என்ன பேசுவீர்கள்?

ப: ரம்லத்தா? அப்படி யாரையும் எனக்குத் தெரியாது. தெரியாதவர்களுடன் நான் ஏன் பேச வேண்டும்!

கே: பிரபுதேவாவுக்கு ஏற்கனவே திருமணம் நடந்துவிட்டதே?

ப: ஸ்டொப், ஸ்டொப். மேரேஜ் ஆயிடிச்சின்னு அவர் சொன்னாரா? ஏதாவது சாட்சி இருக்கா.

கே: கடைசியாக ஒரு பொதுவான கேள்வி. ஸ்ரீதேவி, ஹேமமாலினி, டிம்பிள் கபாடியா எல்லோரும் ஏற்கனவே திருமணமானவர் களைக் கல்யாணம் செய்து கொண்டதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: அவங்களுக்குப் பிடிச்சிருந்தது. மேரேஜ் பண்ணிக்கிட்டாங்க. இதுல நான் என்ன ஒபீனியன் சொல்ல முடியும். இரண்டாம் தாரமாக இருக்கலாம். ஆனால் இரண்டாம் தரமாகத்தான் இருக்கக் கூடாது. தட்ஸ் ஆல்.

—ஷாம்

இது பற்றி பிரபுதேவா என்ன சொல்கிறார் கேட்போமா?

கே: சமீப காலமாகச் சில பத்திரிகை களில் உங்களுக்கும் மீனாவுக்குமிடையிலான காதல் தொடர்பு பற்றி பல மாதிரியும் செய்திகள் வெளிவருகின்றனவே! அவற்றைப் பற்றி?

ப: இன்று நேற்று அல்ல, நான் அறிமுகமானதிலிருந்தே என்னைப் பற்றி பத்திரிகைகளில் ஏதேதோ செய் திகள் வந்துள்ளன. கூசாமல் பொய்யை எழுதுகிறார்கள். அதைப் பற்றி ஆரம்ப காலத்தில் வருத்தப்பட்டேன் இப்படி எழுதுகிறார்களே, என்று! இதைப்பற்றி நண்பர்களிடம் கூறி வேதனைப்பட்ட போது, இதுவும் உனக்கு ஒரு வகையில் பிரபலம்தான். இதை இத்துடன் நிறுத்தி விட்டு நடிப்பில் கவனம் செலுத்து என்று சொன்னார்கள். சக நடிகர்கள் கூட இப்போது இத்தகைய வதந்திகளைச் சட்டை செய்வதில்லை. ரசிகர்களும் இதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. காரணம் — என்ன என்று அவர்களுக்கே தெரியும்.

பிரபுதேவாவின் கருத்திற்குத் தமிழ் சினிமாவில் நீண்ட கால அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர்கள் என்ன கூறுகிறார்கள் என்று பார்ப்போமா? (பலரது கருத்தைத் தொகுத்துத் தருகிறோம்)

பாராட்டி எழுதும்போது அதற்காக ஒரு வார்த்தை நன்றி சொல்லாத நடிகர்கள் அவர்களைப்பற்றி விமர்சித்து எழுதும்போது இப்படி புலம்புவது சகஜம்தான். பிரபுதேவா தன்னைப்பற்றி வரும் பத்திரிகைச் செய்திகளை பொய்கள் என்று சொல்லுகிறார். அப்படிப்பட்ட செய்திகளை அவர் மறுக்கலாம். பிரபுதேவாவும் குரூப் டான்சர் ரம்லத்தும் ரகசியத் திருமணம் செய்து கொண்டார்கள் என்று எழுதாத பத்திரிகையே இல்லை. இந்தச் செய்தி பொய் என்றால் மறுத்துக்கூறலாமே! அவர் மௌனம் காப்பது ஏன்?

கடந்த காலத்தில் கிசுகிசுவாக வந்த செய்திகள் பிறகு உண்மையானதை பட்டியல் போட்டுக்கூற முடியும். ''ஒரு காலத்தில் விஜயகுமார் — மஞ்சுளா காதலிக்கிறார்கள் என்ற தகவலை எழுதிய போது அந்த பத்திரிகை அலுவலகத்தில் புகுந்து கலாட்டா செய்தவர்கள்தான் இந்த விஜயகுமாரும் மஞ்சுளாவும். பின் அதுவே உண்மையாக வில்லையா? ஏ.வி.எம் ராஜன் — புஷ்பலதா காதலை எழுதியபோதும் அவர்கள் இல்லையென்றே மறுத்தார்கள்.

பார்த்திபன் — சீதா, குஷ்பு — சுந்தர் சி, அஜித்—ஷாலினியிலிருந்து அண்மையில் கல் யாணத்தில் முடிந்த தேவயானி — ராஜகுமாரன் வரை எத்தனை கிசுகிசுக்கள் உண்மையாகி இருக்கின்றன. இவர்களைப் பற்றிச் செய்திகள் வந்தபோது சம்பந்தப்பட்டவர்கள் என்ன சொன் னார்கள்? அப்பட்டமான பொய் என்றார்கள். கடை சியில் நடந்தது என்ன? ஒருநாள் மாலையும் கழுத் துமாக வந்து நின்றார்கள். யார் சொன்னது பொய்? மக்களை ஏமாற்றியது பத்திரிகைகளா? அல்லது நட்சத்திரங்களா? பிரபு தேவாவைப்பற்றி வந்த கிசுகிசுக்கள் இரண்டே இரண்டு. ஒன்று அவர் ரம்லத் என்ற டான்சரைத் திருமணம் செய்து கொண்டார் என்பது. இனனொன்று அவர் நடிகை மீனாவை காதலித்துக் கொண்டிருக்கிறார் என்பது. முதலில் ரமலத் விவகாரத்தை பத்திரிகையாளர்கள் எழுதும்போது அதைப் பற்றி எந்தக் கருத்தும் சொல் வாமலிருந்தார் பிரபு தேவா. அதைப் பொய் என்று அவர் சிலரிடம் சொல்லி வந்தாலும் தற்போது அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள் என்பது வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகிவிட்டது. அதே மாதிரித்தான் மீனா விஷயமும்.

# முன்னணி நடிகைகளுக்கு செல்போன் மிரட்டல்







## மறுபக்கம்

செல்போனில் வரும் மிரட்டல்களால் மூன்று நடிகைகள் மிரண்டு போய்க் கிடக்கிறார்கள். என்ன செய்வது யார் உதவியை நாடுவது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த செல்போன் மிரட்டல்களுக்கு பயந்து படப்பிடிப்புக்களுக்குக் கூடப் போகாமல் இவர்கள் வீட்டிலேயே அடைந்து கிடக்க நிலைமை விபரீதமாகி விட்டதாம்.

மூன்றெழுத்து தொடையழகி, ஸ்லிம்மான ரன் நடிகை, ஒளி மயமான நடிகை இவர்கள்தான் அந்த மூவரும்.

முதன் முதலில் இந்த மிரட்டலுக்கு முகம் கொடுத்தவர் ஒளிமயமான நடிகை. சில நாட்களுக்கு முன் நட்சத்திரப் படப்பிடிப்பில் இருந்த ஒளிமயமான நடிகையின் செல்போன் ஒலித்தது. போனை எடுத்தவர் நடிகையின் தாய்க்குலம்.

''ஐயா உங்களைப் பார்க்க வேண்டுமாம். ராத்திரி ஏழு மணிக்கு ........(ஒரு குறிப்பிட்ட இடத்தின் பெயரைச்சொல்லி) வந்திடுறீங்களா? மறுமுனையில் மிரட்டியது குரல். தாய்க்குலத்துக்கு இது ஒன்றும் புதிதல்ல. மகள்மாரின் ரசிகர் பட்டாளங்கள் செய்யும் அன்புத் தொல்லைகளில் இதுவும் ஒன்று.

அதனால் அசட்டையாக செல்போனை ஒஃப் செய்து விட்டார். ஆனாலும் அவர் மனதில் ஒரு கேள்வி தோன்றியது நம்பர் மாற்றி மூன்று தினங்கள் தானே ஆகிறது. அதற்குள் எப்படி?

சில நிமிடங்கள் கழித்து வேறொரு இலக்கத்திலிருந்து அதே மர்மக்குரல் இந்த முறை தாய்க்குலம் அதிர்ச்சியடைந்துதான் விட்டார்.

ஒளிமயமான நடிகையிடம் தாய்க்குலம் இதைப் பற்றி எதையுமே சொல்லவில்லை.

மூத்தமகள் சில முக்கிய புள்ளிகளிடம் மாட்டுப்பட்டு தவித்த கதை தாய்க்குலத் திற்கு அனுபவ பாடமாக அமைந்து விட்டதனால் அன்றைய தினமே படப் பிடிப்பை கான்சல் செய்து விட்டு மகளை அழைத் துக் கொண்டு மும்பைக்குப் பறந்து விட்டார்.

இதே போலவே மற்ற இரண்டு நடிகை களுக்கும் செல் போன் அழைப்பு வந்தி ருக்கிறது. என்ன செய்வ தென்று தெரியாமல் தவித்த நடிகைகள் தமக்கு மிகவும் நெருங்கியவரான தற்போது எதிர்க்கட்சியில் இருக்கும் அபிமான நடிகரிடம் இது பற்றிப் பேசி யிருக்கிறார்கள். அவர் பிரச்சினையைக் கேட்டுக் கொண்டாரே தவிர என்ன செய்ய வேண்டுமென்று கூறவில்லையாம்.

நடிகைகள் பாடுதான் திண்டாட்டமாகப் போய்விட்டதாம். பொலிஸாரிடம் முறை யிட முடியாத நிலை. இத்தனைக்கும் மூன்றெழுத்து தொடையழகி மத்திய அமைச்சரவையில் இருக்கும் பிரமாதமான வருக்கு நெருங்கியவர். 'ரன்' நடிகையும் இரண்டாண்டுகளுக்கு முன்னர் அரசியல் செல்வாக்குடையவர்களுடன் நெருக்க மாயிருந்தவர்தான்.

ஆனால் நடிகைக்கு இப்போது காதலர் இருக்கிறார். திருமணம் வரை வந்து விட்ட இந்நிலையில் பழசைக் கிளற அவர் விரும் பவில்லை. அது சரி! அரசியல்வாதிகள் நடிகைகளின் பின்னால் அலைவதற்கு என்ன காரணம்?

வழக்குப் பிரச்சினைகளிலிருந்து தங் களைக் காத்துக் கொள்ள வேண்டிய நேரம் இது. இதில் நடிகைகளின் துணையிருந்தால் பிரச்சினைகளை சுலபமாகச் சமாளித்து விடலாம் என்று நினைக்கிறார்கள்.



# குழந்தை வளர்ப்பு ஒரு புனிதப்பணி

குழந்தைகள் நல்லவர்களாக, வல்லவர்களாக பண்புள்ளவர்களாக வளர வேண்டும் என்பதே பெற்றோரின் விருப்பம்.

குடும்பம் என்ற நிறுவனம் தான் பிள்ளைகள் முதன்முதல் பயிலும் இடம். அங்கே ஏற்படும் அனுபவங்கள் தான் அவர்களை வாழ்நாள் வரை வளர்க்கிறது.

குழந்தையின் வளர்ச்சியில் வீடும் சூழலும் முக்கிய இடம் வகிக்கின்றன. பிள்ளைகள் தம் பெற்றோரின் எதிர் பார்ப்புகளைப் புரிந்து கொள்ளாமலும், பெற்றோர் பிள்ளைகளின் செயற்பாடு களைப் புரிந்து கொள்ளாமலும் இருப்ப தனாலேயே குடும்பத்தில் பிளவுகள் ஏற்ப டுகின்றன. இவையே குடும்பப் பிரச்சி னைகளுக்கும் முக்கிய காரணமாகின்றன.

பெற்றோரின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வளரும் குழந்தைகளே பிற்காலத்தில் நல்லவர்கள் என்றும் தீயவர்கள் என்றும் வேறு பிரித்தறியப்படுகிறார்கள்.

மனித நேயத்தையும் உறவுகளையும், புரிந்து செயல்படக் கூடிய குழந்தைகளே பிற்காலத்தில் நல்ல உள்ளம் கொண்டவர் களாகப் புரிந்து கொள்ளப்படுவார்கள்.

எனவே பிள்ளைகள் நல்லவர்களாகவும், தீயவர்களாகவும் வளர்வதைத் தீர்மானிப்பது 'குடும்ப நிறுவனம்' என்பதை மனதில் கொள்ளுங்கள். பெற்றோர்களும் சூழ உள்ளவர்களும் குழந்தைகளுடன் நடந்து கொள்ளும் விதம் மற்றும் சமுதாயத் தாக்கங்கள் என்பனவே, குழந்தைகளின் ஆளுமையைத் தீர்மானிக்கின்றன.

பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்கு ஆரோக்கிய உணவு, சுத்தமான உறை விடம், காலநிலை என்பன துணை நிற்பது போல அவர்களின் உள வளர்ச்சிக் குப் பெற்றோரின் அன்பு அரவணைப்பு, என்பன காரணமாய் அமைகின்றது.

பெற்றோரின் வளர்ப்பு முறையே பிள்ளை களின் ஆளுமையை நிர்ணயிக்கின்றது.

பெற்றோரில் ஏற்றுக் கொள்ளும் பெற்றோர், அதிகாரம் செலுத்தும் பெற்றோர், இசைவு அளிக்கும் பெற்றோர், நிராகரிக்கும் பெற்றோர்—

என நான்கு வகையான பெற்றோர்கள் இருக்கிறார்கள்.

ஏற்றுக் கொள்ளும் பெற்றோரின் பிள்ளைகள் தன்னம்பிக்கை உடையவர் களாக இருப்பார்கள். வெற்றிகள் இவர்களை வந்து சேரும்.

அதிகாரம் செலுத்தும் பெற்றோரின் பிள்ளைகள் தன்னம்பிக்கையற்றவர்களாக இருப்பார்கள். வளர்ந்த பின்பு ஆக்கிரமிக்கும் குணம் உடையவர்களாகவும், கோபம் உடை யவர்களாகவும், எவரையும் அனுசரித்துப் போக முடியாதவர்களாகவும் இருப்பார்கள்.

இசைவு அளிக்கும் பெற்றோரின் பிள்ளைகள் எல்லோரையும் மதித்து நடப்பார்கள். இதனால் வாழ்க்கையில் பல நன்மைகள் இவர்களுக்குக் கிடைக்கும்.

நிராகரிக்கும் பெற்றோர் எதிர்க்கும் குணம் உடையவர்களாக இருப்பதால், இவர்களின் பிள்ளைகள் தம் பெற் றோரைத் திருப்திப்படுத்த பல வழிகளைக் கையாண்டாலும் பெற்றோர்கள் அதை நிராகரித்து விடுவார்கள்.

இதனால் பிள்ளைகள் எல்லாவற்றிலும் பின்தங்கி விடுவார்கள். இவர்களது வாழ்க்கை இலக்கற்றதாக இருக்கும். குடும்பம், சமூகம் இரண்டும் இவர்களை வெறுக்கும்.

எனவே பெற்றோர் தம் பங்கினை உணர் ந்து பிள்ளைகளை வளர்க்க வேண்டும்.

வெற்றியாளர்களாக உங்கள் குழந்தை கள் வளர வேண்டுமாயின் பின்வரும் விடயங்களைக் கடைப்பிடியுங்கள்.

* குழந்தைகளுடன் விளையாடுவது அவர்களுக்காக நேரத்தை ஒதுக்குவது.
* பிள்ளைகளுக்கு முக்கிய இடம் கொடுப்பது.
* தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை அவர்களுடன் விவாதிப்பது.
* தன்னம்பிக்கையையும், தன்னடக் கத்தையும் அவர்களிடம் வளர்ப்பது.
* பாடசாலையில் நடைபெறும் விடயங்களை அக்கறையுடன் விசாரித்து அவர்களுக்கு உதவுவது.
* ஒழுக்க நெறிகளைத் திணிக்காமல் இலகுவாக அவர்கள் மனதில் பதிய வைப்பது.

## பெண

பிரதீபா — பசீனா

# வேலைப் பளுவைக் குறைத்துக் கொள்ளுங்கள்



பொருளா தார நெருக்கடி, கல்வி, அறிவு, தம் திறமைகள் மீதான விழிப் புணர்வு முதலியவை கார ணமாக இன்று அதிகமான பெண் கள் தொழில் புரி கின்றனர்.

வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டிய இப்பெண்களுக்கு வேலைப்பளு அதிகம்.

வீட்டில் கணவனும், பிள்ளைகளும் தொடர்ந்து தமக்கு வேண்டியவற்றை ஒவ் வொன்றாகக் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். நீங்களும் அவை அனைத்தையும் செய்வீர்க ளானால் வேலைப்பளு அதிகரிக்கவே செய்யும்.

நீங்கள் காரியாலயத்திலிருந்து மிகுந்த களைப்புடன் வரும் நாளில்தான் வீட்டிலும் கோரிக்கைகள் அதிகமாக இருக்கும். கணவர் விசேடமான உணவு வகை ஒன்றைச் செய்யச் சொல்வார். துணிகளைக் கழுவித்தரும் படி பிள்ளைகள் கேட்பார்கள். எவற்றையும் நீங்கள் மறுத்துக் கூறாதவகையில் கச்சிதமாகக் கேட்பார்கள்.

களைப்பாக இருக்கிறீர்கள் என்பதைக் கணவனிடம் பண்பாக எடுத்துச் சொல்லுங் கள். நேரம் கிடைக்கும் போது அவருக்குப் பிடித்தமான உணவைச் சமைத்துக் கொடுங் கள். அது அவருக்கு இன்ப அதிர்ச்சியாக இருக்கும்.

பிள்ளைகளிடமும் இதே முறையைப் பின் பற்றுங்கள். இன்று அம்மாவுக்கு முடியாமல் இருக்கிறது. நல்ல பிள்ளை தானே இன்றைக்கு மட்டும் துணிகளைக் கழுவுங்கள். பிள்ளை களிடம் இப்படிச் சொல்லி பாருங்கள் உடனே தமது வேலையைச் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

இவ்வாறு படிப்படியாக உங்கள் குடும்பத்தினரைப் பழக்கப்படுத்தினால் வேலைப்பளு அதிகரிக்காது. வீட்டில் உள்ளவர்களும் உங்களைச் சரியாகப் புரிந்து கொள்வார்கள். கூடவே ஒத்துழைப்பார்கள்.



வித்தியாசமான நிறங்களில் தலை முடியை வைத்திருப்பது இன்று நாகரிகமாகி விட்டது.

ஒரு காலத்தில் நடிகைகளுக்கு மட்டும் சொந்தமாக இருந்த இந்தக் ''கலர் கூந்தல்'' விவகாரம் இன்று எல்லா வயதில் உள்ள பெண்களையும் கவர்ந்து விட்டது.

அணியும் ஆடைகளின் நிறத்துக்கு ஏற்றபடி கூந்தலின் நிறத்தையும் இன்றைய பெண்கள் மாற்றுகிறார்கள்.

அதிகமான பெண்கள்

# 'கலர்' கூந்தல் நாகரிகம்

மருதாணியால் ஆன ''ஹென்னா'' வைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். அதற்குக் காரணம் அது பக்க விளைவுகள் அற்றது. அத்துடன் குளிர்மையானதும் கூட.

ஹென்னாவுக்கு அடுத்த படியாகச் சாயங்களை அதிகமான பெண்கள் விரும்புகிறார்கள். இவை பல் நிறங்களில் கிடைக்கின்றன. அத்துடன் இவற்றின் மூலம் புதிய நிறங்களையும் உருவாக்க முடியும். நாம் விரும்பியபடி ஒவ்வொருவரது முகத்துக்கும் பொருத்தமான நிறங்களைத் தெரிவு செய்யலாம்.

கலர் சாயங்களில் இரசாயனக் கலவைகள் சேர்க்கப் படுவதால் சிலருக்கு அது ஒவ்வாமையை ஏற்படுத்தலாம். அப்படியானவர்கள் அதைத் தவிர்ப்பது நல்லது.

அழகுக்காகத் தலை முடியை நிறம் மாற்றுபவர்கள் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். ஏனெனில் தண்ணீர் பக்க விளைவுகளைக் குறைக்கும்.

சில பெண்கள் முன்நெற்றியில் விழும் கூந்தலை மட்டும் நிறம் மாற்றுவார்கள். வேறு சில பெண்கள் ''ஸ்ட்ரீக்கிங்'' (Streaking) செய்வார்கள். இது வித்தியாசமான அழகைக் கொடுக்கும்.

தலைமுடியை 'பிளீச்சிங்' (Bleaching) செய்யும் பெண்களும் இருக்கிறார்கள். இவ்வாறு செய்வதானால் தலைமுடியில் உள்ள சத்துக்கள் எல்லாம் போய் விடும். எனவே ''பிளீச்சிங்'' செய்து முடிந்ததும் தரமான ''கண்டிஷனரை'' உபயோகிக்க வேண்டும்.

தரமான சாயங்களைப் பயன்படுத்தாது விட்டால் பக்க விளைவுகள் ஏற்படும். எனவே அழகுக் கலை நிபுணரின் ஆலோசனையுடன் தரமான சாயங்களைப் பயன்படுத்தி நீங்கள் விரும்பும் அழகிய கலர் கூந்தலைப் பெறுங்கள்.

# பெண்ணியம் பேசியவரின் அதிரடித் தகவல்கள்


டோரிஸ் லெஸ்லி

இன்று பெண்ணியம் பற்றிய கருத்துக்கள் மேலோங்கியுள்ளன. பெண்ணுரிமை இயக்கங்களும் அதே போன்று வளர்ச்சி அடைந்திருக்கின்றன.

இந்த நிலைமை மிக அண்மைய காலங்களிலிருந்தே கீழைத்தேச நாடுகளில் அறிமுகமாகியுள்ளது. ஆனால் மேற்கு நாடுகளில் 1960களிலேயே பெண்ணியம் பிறந்து விட்டது.

அக்காலத்தில் டோரிஸ் லெஸ்லிங் என்ற பெண் ஏனைய பெண் நிலைவாதிகளுக்கு முன்னோடியாக இருந்தார். இவரின் கொள்கைகளை பல பெண்கள் பின்பற்றினர்.

'ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் நடத்தப் படல் வேண்டும். கல்வி, வேலை வாய்ப்பு முதலான வற்றில் பெண்களுக்குச் சம உரிமை வேண்டும்' போன்ற கருத்துகள் மேலோங்கி இருந்தன.

இந்தக் கால கட்டத்திலேயே லெஸ்லிங் எழுதிய 'த கோல்டன் நோட் புக்' என்ற புத்தகம் பெண் நிலை வாதிகளின் மனங்களைக் கவர்ந்தது.

ஆனால் டோரிஸ் லெஸ்லிங் தற்போது கூறும் கருத்துக்கள் அனைவரையும் அதிர வைக்கின்றன.

'நேரத்தையும் சக்தியையும் விரயம் செய்யும் பெண்ணுரிமை இயக்கவாதிகளை விட நேரத்தைச் சேமிக்கும் வோஷிங் மிஷின் உயர்வானது' என்று லெஸ்லிங் கூறுகிறார்.

வியப்படையச் செய்யும் மேலும் பல விடயங்கள் குறித்தும் லெஸ்லிங் பேசியிருக்கிறார்.

''1960களில் நடந்த பெண்ணுரிமைப் போராட்டங்கள் அனைத்தும் தன் முதுகைத் தானே சொறிந்து கொள்ளும் செயல்கள். பெண்ணுரிமை பேசும் பெண்கள் அடாவடி செய்பவர்கள். ஆண்களை அடக்கி ஆள நினைக்கிறார்கள். சுயநலம் கூடியவர்கள். பெண்ணியம் பேசும் இயக்கங்கள் வெறுமனே பேசுவதிலும் ஒன்று சேர்வதிலுமே காலத்தைக் கடத்தினார்கள். இன்றும் பெண்கள் ஆண்களை ஒடுக்கவே விரும்புகிறார்கள்''.

டோரிஸ் லெஸ்லிங்கின் இத்தகைய அதிரடிக் கருத்துக்கள் அடங்கிய 'த ஸ்வீட்டஸ்ட் ட்ரீம்' என்ற நாவலை எழுதியிருக்கிறார்.

இவரது இத்தகைய கருத்துக்களைப் சில எழுத்தாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

எமது சமூகத்தை எடுத்துக் கொண்டாலும் இங்கு பெண்ணியம் பேசுபவர்களைப் பலர் தவறாகவே புரிந்து கொள்கின்றனர். வேலை இல்லாதவர்கள் எனப் பழி சுமத்துகிறார்கள்.

அடக்கம் இல்லாதவர்கள் வீட்டைக் கவனிக்காது நாட்டைத் திருத்த வருகிறார்கள் எனவும் குற்றஞ்சாட்டப்படுகின்றனர்.

இதே சூழலில் 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்ற பாரதி பாடலும் சேர்ந்து ஒலிக்கவே செய்கிறது.


# குறைமாதக் குழந்தையா? கண்கள் கவனம்!

''ஒரு கிலோவுக்கும் குறைவான நிறையுடன் பிறக்கும் குழந்தைகளில் 75 சதவீத மானவர்களுக்குக் கண்கள் பாதிப்படையும் அபாயம் உள்ளது'' என்கிறார்கள் பிரேசில் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

குழந்தை பிறந்த ஆறு வாரங்களுக்குள் இக் குறையை நிவர்த்தி செய்யா விட்டால் ஆயுள் முழுவதிலும் இக் குழந்தைகளைக் குணப்படுத்த முடியாது என்கிறார்கள்.

குறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகளை இளஞ்சூடாக இருப்பதற்காக ''இன்குபேட்டரில்'' வைப்பார்கள். அதன் மூலம் குழந்தைகளுக்குக் கிடைக்கும் ஒட்சிசன் அவர்களின் மூளைக்கும், நுரையீரலுக்கும் நல்லது என்று கூறப்படுகிறது. ஆனால் குழந்தைகளின் கண்களுக்கு அது ஆபத்தை ஏற்படுத்தும் என்று நவீன ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

எனவே குறைமாதக் குழந்தைகள் பிறந்து நான்கு மாதங்கள் ஆனதும் அவர்களின் கண்களைப் பரிசோதித்துக் கொள்ளுதல் அவசியம். இது எதிர்காலத்தில் கண் சம்பந்தப்பட்ட நோய்களிலிருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்ள உதவும்.



# குருதிக் குழாய் தொய்வு மூலம் ஆரம்பமாகும் வியாதி மூலம்

**கே:** நான் கடந்த 4 வருடங்களாக மூல வியாதியினால் கஷ்டப்படுகிறேன். நான் மலம் கழிக்கும்போது மூலம் வெளியே வரும். பின்னர் உள்ளே சென்றுவிடும். சிலசமயம் இரத்தமும் போகிறது. எனக்கு ஒப்பரேஷன் செய்யப் பயமாக இருக்கிறது. எனவே ஒப்பரேஷன் இல்லாமல் இதனைச் சுகப்படுத்த முடியுமா? உங்கள் ஆலோசனையை விரைவில் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

*ப:* *மூலவியாதியானது குடலிலுள்ள குருதிக்குழாய்கள் தொய்வடைவதனால் ஏற்படுகிறது. இதன் ஆரம்ப நிலையில் மலம் கழித்தபின் மலவாசலினூடாக குருதி வெளியேறும். குறிப்பாக மலம் இறுக்கமாகப் போகும் சந்தர்ப்பங்களில் குருதி வெளியேறும். இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாவிடின் இந்த நோய் ஆரம்ப நிலையிலிருந்து இரண்டாவது நிலையை அடையும்.*

*இரண்டாவது நிலையின்போது மூலமானது மலம்கழிக்கும் சந்தர்ப்பங்களில் ஒரு முளைபோல வெளியே வரும். சிலசமயம் குருதியும் வெளியேறலாம். பின்னர் அது உள்ளே சென்றுவிடும். உங்களுக்கு காணப்படுவது இந்த இரண்டாவது நிலையே.*

*இதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இந்த நோய் மூன்றாவது நிலையை அடையும். மூன்றாவது நிலையில் மூலமானது நிரந்தரமாகவே மலவாசலுக்கு வெளியிலேயே இருக்கும். இந்த நோய் மூன்றாவது நிலையை அடைந்துவிட்டால் சத்திரசிகிச்சை அல்லது மூலத்தினுள் ஒருவகை மருந்தை ஏற்றுவதன் மூலம் மாத்திரமே இதனைக் குணப்படுத்திக் கொள்ளலாம். உங்களுக்கு இந்த நோய் இரண்டாவது நிலையில் இருப்பதால் பின்வரும் முறைகளைப் பாவித்து சத்திரசிகிச்சை இல்லாமலே இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம். மலம் கழிக்கும்போது கடுமையாக முக்குவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மலம் இறுக்கமாகப் போவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக நிறைய நீர் ஆகாரம் அருந்த வேண்டும். மூன்று வேளையும் பழவகைகள் உண்பது நல்லது. உணவிலே மரக்கறிகளையும் இலைவகைகளையும் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும் (மூன்று வேளையும்). மலத்தை அடக்குவதைத் தவிர்த்தல் வேண்டும். தினந்தோறும் இரண்டு தடவைகள் குளிப்பது நல்லது. இது உடலின் நீர்த்தன்மை குறைவடைவதைத் தடுக்கும்.*

*இந்த முறைகள் மூலம் உங்கள் நோய் கட்டுப்படுத்தப்படாவிட்டால் சத்திரசிகிச்சை செய்ய வேண்டி ஏற்படலாம்.*

**இரத்த தானம் செய்பவருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது**

**இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—**

**இலவச மருத்துவ ஆலோசனை**
**'சுடர் ஒளி'**
**36/2, பிரெட்றிகா வீதி,**
**கொழும்பு — 06.**

**கே:** 20 வயது நிரம்பிய எனக்கு (ஆண்) 2 வருடங்களுக்குமுன் வயிற்று நோவும் மலச்சிக்கலும் ஏற்பட்டன. இவை சிலகாலம் நீடித்ததால் பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு 2 தடவைகள் வயிற்றில் எக்ஸ்றே படமும் Sigmoidoscopy சோதனையும் செய்யப்பட்டு ஒரு பிரச்சினையும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது. இப்போது எனக்குள்ள சந்தேகம் என்னவெனில் இப்பரிசோதனைகளால் எதிர்காலத்தில் ஏதாவது நோய்கள் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் உண்டா? Sigmoidoscopy ஒரு கதிரியக்கப் பரிசோதனையா?

*ப:* *Sigmoidoscopy என்பது ஒரு கதிரியக்கச் சோதனை அல்ல. எனவே இதனால் உங்களுக்கு எந்த விதமான பாதிப்புகளும் ஏற்படமாட்டா. உங்களுக்கு இரண்டு எக்ஸ்றே படங்களும் எடுக்கப்பட்டதாக கூறியிருக்கிறீர்கள். இது ஒரு கதிரியக்கச் சோதனை. மிக அவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரமே இந்தச் சோதனை செய்யப்படுகிறது. கூடுமான வரையில் இந்த எக்ஸ்றே படங்கள் எடுப்பதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. இரண்டு எக்ஸ்றே படங்கள் எடுக்கப்பட்டதால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகள் மிகமிகக் குறைவு. எனவே நீங்கள் இதைப்பற்றி பயப்பட வேண்டிய அவசியமில்லை.*

**கே:** நான் கண்ணீருடன் எழுதும் கடிதம் இது. எனக்கு 24 வயது (ஆண்). யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வந்து 2 வருடங்கள் ஆகின்றன. இங்கு ஒரு சம்பவத்தின்போது எனக்கு HIV (Aids) தொற்றிவிட்டதோ என அஞ்சுகிறேன். நான் ஒரு குற்றமும் செய்யாமல் விதிவசத்தால் இப்படி ஆகிவிட்டேன். வெளியில் இதனைக் கூற முடியாமல் மனநோயாளியாக மாறிவிடுவேன் போல் உள்ளது. இது எனக்கு தொற்றி உள்ளதா என்று பரிசோதிக்க விரும்புகிறேன். எனக்கு சிங்களம், ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. எனவே நான் எங்கு சென்று இதனைச் சோதிப்பது. நான் சோதனை செய்யும் இடத்தில் இதனைப் பகிரங்கப்படுத்த மாட்டார்கள்தானே? தயவு செய்து உடன் பதில் தாருங்கள்.

*ப:* *நீங்கள் இதனை இலகுவில் சோதித்துக் கொள்ளலாம். விவரங்கள் பகிரங்கப்படுத்தப்படமாட்டா. பொது மருத்துவ மனைகளில் பாலியல் சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை செய்யும் கிளினிக் ஒன்று இருக்கிறது. இதை V.D. கிளினிக் என்பார்கள். நீங்கள் அங்கு சென்று உங்கள் பிரச்சினையைச் சொன்னால் அவர்கள் உங்களுக்கு HIV தொற்றியிருக்கிறதா இல்லையா என்று சோதித்துச் சொல்லுவார்கள். உங்களுக்கு சிங்களம், ஆங்கிலம் கதைப்பதில் பிரச்சினை என்று கொழும்பு அரசாங்க வைத்தியசாலைகளுக்கு போவதில் தயக்கம் இருந்தால் நீங்கள் இருக்கும் இடத்துக்கு அருகில் பல தமிழ்பேசும் வைத்தியர்கள் தொழில் புரியும் தனியார் வைத்தியசாலைகள் இருக்கின்றன. நீங்கள் அங்கு OPD பகுதிக்குச் சென்று அங்குள்ள தமிழ்பேசும் வைத்தியர் ஒருவரின் உதவியை நாடினால் அவர் இதற்கான சோதனை செய்வதற்கு உங்களுக்கு உதவி புரிவார். அவ்வாறு சோதித்து இந்த நோய் இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்ட பின்னராவது எங்களுடைய பாரம்பரிய கலாசாரத்தை சரியான முறையில் பின்பற்றி வந்தால் மீண்டும் உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்படாது.*

**எய்ட்ஸ் நோய் தொற்றியதை எப்படிக் கண்டறிவது?**

**கே:** எனக்கு 63 வயது. சுகதேகியாக இருக்கிறேன். கடந்த 3 வருடங்களாக எனக்கு நீரிழிவு நோய் இருக்கிறது. உணவுக் கட்டுப்பாடு மூலமும் ஒழுங்கான உடற்பயிற்சி மூலமும் இந்த நோயை மருந்து எதுவும் உட்கொள்ளாமலே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறேன். எனது குருதி அமுக்கமும் மருந்து எதுவும் உட்கொள்ளாமலேயே 160/90 ஆகக் காணப்படுகிறது.

எனது வயதுக்கு இந்தக் குருதியமுக்கம் சாதாரணம் என்றும் இதற்கு மருந்து தேவையில்லை என்றும் சொல்லப்பட்டது. ஆனால் நீங்கள் முன்பு ஒரு முறை குருதி அமுக்கம் 140/90இலும் பார்க்க அதிகமாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். நான் மருந்து பாவிக்க வேண்டுமா?

*ப:* *எந்த வயதினருக்கும் குருதி அமுக்கம் 140/90இலும் பார்க்க அதிகமாக இருந்தால் அது உயர் குருதி அழுத்தமே. அது கட்டுப்படுத்தப்பட வேண்டும். உங்களுக்கு உயர் குருதி அழுத்தத்துடன் நீரிழிவு நோயும் இருக்கிறது. இந்த நிலையில் உங்களின் குருதி அமுக்கம் நல்ல முறையில் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியமாகும். எனவே நீங்கள் ஒரு மருத்துவரின் கண்காணிப்பின் கீழ் உங்கள் உணவுக் கட்டுப்பாட்டுக்கு மேலதிகமாக மருந்து பாவிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.*

**கே:** இரத்ததானம் செய்தால் பாதிப்பு ஏதாவது ஏற்படுமா?

*ப:* *இரத்தத்தைப் பெறுபவருக்கு அதாவது இரத்தம் ஏற்றப்படுபவருக்கு சிலசமயம் சில பாதிப்புகள் ஏற்படலாம். ஆனால் இரத்த தானம் செய்பவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. தானத்திலே சிறந்த தானம் இரத்ததானம் என்று சொல்லுவார்கள்.*

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டீ | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30-13.00 | | | | | | | |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நவந்தாரா | திரைத்தென்றல் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரைவிமர்சனம் | அரட்டை அரங்கம் | நீங்கள் கேட்ட பாடல் |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன்டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்திரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | சின்னத்திரை | தித்திக்கும் ஓசை | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இனையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப்பறவை | ஜன்னல் |



கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மட அதிபர் அருட்செல்வி ரோகிணி மெண்டிஸ் ஆசியுரை வழங்குகின்றார். ஆசிரியை திருமதி ஈஸ்வரி யோதிலிங்கம் குத்துவிளக்கேற்றுவதையும், விழாவில் கலந்துகொண்ட பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# ஜோதியின் அரசியல் நூலுக்கு மண்டபம் நிறைந்த கூட்டம்

சி.அ. யோதிலிங்கம் எழுதிய இலங்கை அரசியல் கட்சி முறைமை என்னும் நூல் வெளியீட்டு விழா சமீபத்தில் கொட்டாஞ்சேனை விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றது.

தலைமையுரை நிகழ்த்திய பேராசிரியர் சோ.சந்திர சேகரன் "இன்று நாடு எதிர் நோக்கியுள்ள அரசியல் நெருக்கடியினால் கற்றவர், கல்லாதவர் என்ற வேறுபாடு இன்றி அனைவரும் அரசியல் நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். இத்தருணத்தில் ஆசிரியர் சி.அ. யோதிலிங்கம் எழுதிய இலங்கை அரசியல் கட்சி முறைமை என்னும் நூல் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது." என்றார்.



கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மட உப அதிபர் திருமதி டெய்ஸி பச்சேச் பேராசிரியர் சந்திரசேகரனிடமிருந்து சிறப்புப் பிரதியைப் பெறுகின்றார். மத்தியில் நூலாசிரியர் சி.அ.யோதிலிங்கம் காணப்படுகின்றார்.

சி.அ. யோதிலிங்கத்தின் இந்நூல் முக்கியமாக க.பொ.த (உயர்தர) மாணவர்களைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்ட ஒன்று ஆகும். இந்நூலில் இலங்கையின் பிரதான கட்சிகளின் செல்வாக்கு, பெரும்பான்மைக் கட்சிகள் சிறுபான்மைக் கட்சிகளில் தங்கியிருத்தல், விகிதாசார தேர்தல் முறை போன்ற பல விஷயங்களை ஆசிரியர் எடுத்து விளக்கியுள்ளார். வெறுமனே பாடத்திட்ட நூலாக அமையாது வாசகர்கள் அனைவரும் படித்து அரசியல் அறிவைப் பெற்றுக் கொள்ளத்தக்க சிறந்த நூலாகவும் இது விளங்குவது குறிப்பிடத்தக்க அம்சம் என்றும் பேராசிரியர் கூறினார். நூலாசிரியருக்குப் பாராட்டும் தெரிவித்தார்.

நல்லாயன் கன்னியர் மடத்தின் அதிபர் அருட்செல்வி ரோகிணி மெண்டிஸ் ஆசியுரை வழங்கினார்.

சட்டக் கல்லூரி இறுதி வருட மாணவன் நடராஜா காண்டீபன் மதிப்புரையும், பேராசிரியர் சிவசேகரம் வெளியீட்டுரையும் நிகழ்த்தினர்.

சூரியன் எவ்.எம்.இன் பிரதம செய்தியாசிரியர் நடராஜா குருபரன், சட்டக் கல்லூரி, சட்டப் பயிலுநர் ஐ.பயஸ்ஹெஸ்ஸாக் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

சிறப்புரை ஆற்றிய மேல் மாகாண சபை உறுப்பினரும், தலைவருமான மனோ கணேசன் உரையாற்றுகையில் "மேல் மாகாண தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கும் ஓர் அரசியல் அடையாளம் கொண்டுவரப்பட வேண்டும்" என்று வற்புறுத்தினார்.

இதனை அடுத்து சிறப்புப் பிரதி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

முதற் பிரதியை புரவலர் ஜனாப் ஹாஸிம் உமர் பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் ஏற்புரையும், நன்றியுரையும் வழங்கினார். அவர் உரையாற்றும் போது "நான் ஒரு தனி மனிதன் அல்லன். ஒரு சக்தி என்பதை இப்போதுதான் உணர்கிறேன்" என்றார்.

தனது பிரசுர முயற்சிக்குப் பக்கபலமாக இருந்த அனைவருக்கும் நன்றி கூறியதோடு, தனது படைப்பின் பயணம் இனியும் தொடரும் என்றும் நூலாசிரியர் கூறி நிகழ்வை நிறைவு செய்தார்.

— இலக்கியன்.



மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இச்சிலையை கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் எஸ். கிருஷ்ணபிள்ளை வடிவமைத்துள்ளார்.

## கலையமுதம்



சங்கநாதம் நூல் அறிமுக விழாவில் நூலாசிரியர் பூ.ம.செல்லத்துரையை எழுத்தாளர் சிவம் பாக்கியநாதன் மாலை சூட்டி கௌரவிப்பதனை படத்தில் காணலாம்.

படம் : நேரன்

# தடை தாண்ட நுட்பமான வழிகாட்டி

போட்டி உலகில் வாழ நாம் அனைவரும் நிர்ப்பந்திக் கப்பட்டிருக்கிறோம்.

ஒரு காலத்தில் குழந்தைகள் டாக்டராக அல்லது எஞ்சினியராக வரவேண்டும் என சிறுபராயத்திலிருந்தே மூளைச் சலவை செய்யப்பட்டு வளர்க்கப்பட்டார்கள். ஆனால் இன்று காலம் மாறி விட்டது. கம்பியூட்டர்துறை, வணிக முகாமைத்துவம் என கல்வித்துறைகள் விஸ்தரிக்கப்பட்டு அதற்கான வாய்ப்பு வசதிகளும் பல்கிப் பெருகி விட்டன.

இத்தகைய புதிய துறைகளை நோக்கி இன்று மாணவர் பட்டாளம் படையெடுக்கத் தொடங்கி விட்டது.

இலங்கையில் எத்தகைய தொழிலில் இணைவதாக இருந்தாலும் போட்டிப் பரீட்சையில் சித்திபெறவேண்டும்.

இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு ஏ.எல்.எம். பளீல் 'தடை தாண்டல் பரீட்சை வழிகாட்டி' எனும் நூலை வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

மாணவர் மட்டுமல்லாது அனைத்துத் தரப்பினரும் பயன் பெறக்கூடிய வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாக சேவை சம்பந்தமான அம்சங்கள் இணைக் கப்பட்டுள்ளமை இதன் விசேட அம்சமாகும். தொழில் தடைகளைத் தாண்டுவதற்கு சகலதரப்பினருக்கும் பயன்மிக்க வழிகாட்டியாக அமைந்துள்ள இந்நூலை ஸ்ரீலங்கா பல் கலைக் கல்விநிலையம் வெளியிட்டுள்ளது.

## நூல் அறிமுகம்

# பாடசாலை வரலாறு கூறும் நூல் வெளியீடு

புத்தளம் தொகுதியிலுள்ள புழுதிவயல் அரசினர் முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் "பாடசாலை வரலாறு கூறும் சுவடுகள் வழியே" என்னும் பாடசாலை வரலாறு கூறும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எஸ்.எஸ்.எம்.ஹுதைலின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக மாகாண அமைச்சர் எம்.எச்.எம்.நவவி கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

1936ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப் பட்டபோது முதல் மாணவனாக சேர்த்துக்கொள்ளப்பட்ட எம்.எச்.அப்துல் கரீம் தற்போது 75 வயது முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக வடமேல் மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.எம்.மஹ்ரூப் மரைக்கார், கற்பிட்டிப் பிரதேச சபைத் தலைவர் என்.டீ.தாஹிர், முந்தல் பிரதேச செயலாளர் எம்.ஆர்.மலிக், வடமேல் மாகாண அரசசேவையாளர் ஆணைக்குழு உறுப்பினர் என்.எம்.ஹனிபா உட்பட பெருந்தொகையான பெற்றோர்களும் கலந்து கொண்டனர். அமைச்சர் நவவி அங்கு உரையாற்றும் போது,

"புத்தளம் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலையும் தனது வரலாறு கூறும் பதிவேடுகளை வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். அவ்வகையில் இச்சிறிய பாடசாலை இந்த நூலை வெளியிட்டிருப்பது பெருமைப்படக்கூடிய விடயமாகும்" என்றார்.

—ஏ.எஸ்.புல்கி

# பித்தன் பதில்கள்


ந. கிருபாகரன், மீசாலை கிழக்கு.

கே : தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு சிவாஜியின் பங்கு என்ன?

ப : கடைசிவரை தமிழனாக இருந்து இறந்தார். அதுவே தமிழீழப் போராட்டதுக்கு அவர் ஆற்றிய பெரிய சேவை.

எஸ். சுதாகரன், கிருஸ்லர்ஸ்பாம்.

கே : நான் ஒரு புதுக்கட்சி ஆரம்பிக்கப்போகிறேன். என்ன பெயர் வைக்கலாம்?



ப : 'சோத்துக் கட்சி' என்று வைக்கலாம். நடிகர் பார்த்திபனுடன் தொடர்புகொண்டால் மேலதிக தகவல்களையும் பெறலாம்.

சிவன் தியாகலிங்கம், கொழும்பு.

கே : முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டு விட்டதே ஹக்கீமுக்கா ஹிஸ்புல்லாவுக்கா வெற்றி?

ப : இவர்களில் எவருக்குமே வெற்றி இல்லை. வெற்றி ஜனாதிபதிக்குத் தான்.

எம்.எச்.சம்சுதீன், மாத்தளை.

கே : கட்டுநாயக்கவினுள் ஊடுருவித் தாக்குதல் நடத்திய புலிகளின் பெயர் விவரம் தெரியுமா?

ப : சாவினைத் தோள் மீது தாங்கியவர்கள் என்பது மட்டும் தான் தெரியும்.

கே.ரமேஷ், கல்முனை.

கே : காதலியை முத்தமிட்டதுக்கு முறைக்கிறாள் என்ன காரணம்?

ப : அதற்கு மேல் உமக்கு ஒன்றும் தெரியாதா என்று முறைக்கிறாளோ தெரியவில்லை.

பானு, தெஹிவளை.

கே : 'லவ்சேனல்' நாயகன் ஈஸ்வர் கமலின் சாயலில் தெரிகிறாரே! சூப்பர் அக்டர் ஆவாரா?

ப : உருவத்தில் இளவயதுக் கமலை நினைவுக்குக் கொண்டுவருவதென்னமோ உண்மை. ஆனால் நடிப்பில் சாதிப்பாரா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.


றிஸ்மியா காதர், கொழும்பு—10.

கே : பித்தனே, உலக அழகி யுக்தா முகி அஜித்துடன் ஜோடி சேரும் படத்தின் பெயர் என்ன?

ப : யுக்தா முகி கதாநாயகியாக நடிக்கவில்லை. 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் ஒரு பாடல் காட்சியில் அஜித்துடன் தோன்றுகிறார்.

வி.கோமதி, மட்டக்களப்பு.

கே : கட்டுநாயக்கா தாக்குதலை அடுத்து இந்தியாவில் உள்ள விமான நிலையங்களின் பாதுகாப்புஅதிகரிக்கப்பட்டுள்ளதாமே பித்தா?



ப : மிருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்களே...! பாவம் இந்தியா.

இ. சங்கரமூர்த்தி, தெஹிவளை.

கே : பத்து வருடங்களாக மனைவியைப் பிரிந்திருக்கிறேன் ஒன்று சேர வழி சொல்லுங்களேன் பித்தனே!

ப : கால இடைவெளியைக் கணக்கில் எடுக்காதீர்கள். இருவருக்கும் மனதில் இடைவெளி இல்லாதிருக்க வேண்டும். அது சரி பிரிவுக்குக் காரணம் கருத்து வேறுபாடா அல்லது வேறு ஏதேனுமா....?



பா. விஜயன், தட்சனாமருதமடு.

கே : பித்தனே 2000 ஆம் ஆண்டில் உலகம் அழியப் போகுது என்று சொன்னார்கள். 2001ஆம் ஆண்டும் கழியப் போகுது. ஒன்றையும் காணவில்லையே.

ப : இடங்கள் சொத்துப் பத்துக்களை அபகரிக்க எவரோ செய்த சதியாக இருக்கலாம்.

பி.கருணாகரன், சங்குவேலி.

கே: பரிதாபத்துக்குரியவர்கள் யார் பித்தனே?

ப: நீர் திருமணம் முடித்து விட்டீரா?

எஸ்.எஸ்.குமார், மட்டுவில்.

கே : தாங்கள் கையெடுத்துக் கும்பிடத்தக்க மனிதர் எவராவது இருக்கின்றாரா?

ப : அந்தளவு தகுதி தாயைத் தவிர வேறு யாருக்குண்டு?

சி.மனோகரன், தெல்லிப்பழை.

கே : உலகப் புகழ்பெற்ற மைக் டைஸன் ஏன் அடிக்கடி குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிறார்?

ப : உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்கும் டைஸனுக்கு மனதைக் கட்டுப்படுத்தத் தெரியாததால்.

க.ராஜசேகரன், மட்டக்களப்பு.

கே : கனடா சென்றுள்ள இலங்கை மெய்வல்லுநர் போட்டியாளர்கள் பதக்கங்களுடன் திரும்புவார்களா?

ப : போட்டிகளில் எவரும் பதக்கம் பெற முடியாமல் போய்விட்டது. பதக்கங்கள் வைத்திருக்கும் இடத்தில் ரகசியமாக நுழையக் கிடைத்திருந்தால் சிலர் கொண்டு வந்திருப்பரோ என்னவோ?

ஆர்.ரமணி, பதுளை.

கே : பித்தனே....! தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

ப : பின்னணியில் சிஹல உறுமய இருப்பதால் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உதைதான்.



கே. அக்கீத், செட்டிக்குளம்.

கே : ஹாய் பித்தனே கண்ணை மூடித் தூங்கினால் ஒரே கனவாக இருக்கிறது. ஒரு வழி சொல்லுங்கள்

ப : ஆபீஸிலா? வீட்டிலா? என்று சொல்லவில்லையே.....!

லூர்த், மன்னார்.

கே : இரண்டாம் தாரம் திருமணம் செய்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப : சூடு கண்ட பின்னரும் அடுப்பங்கரை நாடும் பூனைகள்!

எஸ்.சுரேந்திரன், மட்டக்குளி.

கே : ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்ற பழமொழி வீட்டுக்கு மட்டும்தான் பொருந்துமா?

ப : நாட்டுக்கும் பொருந்தும்.

ச.கனகரட்ணம், சிலாபம்

கே : கரும்பு தின்னக் கைக்கூலி கேட்கலாமா?

ப : சீதனம் கேட்பவர்கள் அதைத்தானே செய்கிறார்கள்.

# பத்தாண்டு கடந்தும் மறையாத இரத்தநாள் பயங்கரங்கள்!

## கிழக்கில் நிகழ்ந்த வழக்கேறாத கொலைகள்!



காடையர்களால் தாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப் பட்ட சிந்தா யாத்திரை பிள்ளையார் ஆலயம்.

கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைக்கு மேற்காக உள்ளது வீரமுனை என்ற சிறிய தமிழ் கிராமம்.

1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி. அந்த நாள் இவர்கள் வாழ்க்கையில் வராமலேயே விட்டிருக்கலாம். ஆம் அப்பாவி உயிர்களைப் பலி கொடுத்த நாள் அது. அன்று இடம்பெற்ற பயங்கரச் சம்பவங்களை அடுத்து தொடராக இடம்பெற்ற சம்பவங்களில் சுமார் ஒரு மாத காலத்தில் 166க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இவர்கள் மண்ணுக்கு இரையாகியும்

நெருப்பில் சாம்பராகியும் அவலச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

1990 ஜூன் 11ஆம் திகதி வடக்குக் கிழக்கில் பொலிஸ் நிலையங்கள், படை முகாம்கள் தாக்குதலுக்கு உள்ளாகின.

இதற்குப் பழிவாங்குமுகமாக படையினர் நடத்திய மூர்க்கத்தனமான தாக்குதல்களால் பொதுமக்கள் பலர் வாழ் விடங்களை விட்டு பொது இடங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

அந்த வகையில் அம்பாறை பிரதேசத்தில் மல்வத்தை, வளத்தாப்பிட்டி, புதுநகரம், மல்லிகைத்தீவு, வீரச்சோலை, அம்பாறை தமிழ்ப் பிரிவு, சம்மாந்துறை தமிழ் குறிச்சி, கோரக்கர் கோயில் மற்றும் வீரமுனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 600 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரம் பேர் இடம் பெயர்ந்தனர். இவர்கள் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில், பழைய பாடசாலைக் கட்டடங்கள் ஆகியவற்றில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

ஆகஸ்ட் 12ஆம் திகதி காலை 8.30 மணியிருக்கும். வாள், கத்தி, பொல்லு மற்றும் கூரிய ஆயுதங்களுடன் ஒரு கும்பல் சம்மாந்துறைப் பக்கம் இருந்து வந்தது.

வீரமுனையில் அகதிகள் தங்கி இருந்த சிந்தா யாத்திரைப் பிள்ளையார் ஆலயம் மற்றும் பாடசாலைக் கட்டடங்களுக்குள் புகுந்து காட்டுமிராண்டித்தனமாக வெட்டத் தொடங்கியது அக்கும்பல்.

ஐயோ, அம்மா, அப்பா என்று கதறியவர்கள் கடைசி மூச்சு நிற்கும்வரை எங்களை விட்டு விடுங்கள் என்று ஓலமிட்டனர்.

பெண்களுக்கு தங்கள் உயிரை மட்டுமல்ல கற்பையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலை அப்போது இருந்தது. பலரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நாலாபக்கமும் சிதறி ஓடினர்.

அன்றைய தினம் அந்த இடத்தில் 29 உயிர்கள் பலியாகின. குழந்தைகளை காலில் பிடித்துத் தூக்கி சுவரில் அடித்துக் கொன்ற கயவர்களை என்னவென்பது?

இந்த வெறியாட்டத்தில் காயமடைந்தவர்கள் அம்பாறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களி லும் ஊர்ப் பெரியவர்கள், கோயில் தலைவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் என தெரிவு செய்யப்பட்ட 12 பேர் இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.

படைகளின் செல்வாக்கு பெற்றவர்களே இந்தப் பாவத்தைச் செய்தவர்கள் என பின்னர் அறிய முடிந்தது.

அதே ஆண்டு செப்டெம்பர் 12ஆம் திகதி மற்றொரு சம்பவம் நடந்தது. கல்முனையில் இருந்து தம்பிலுவில் என்ற கிராமத்தில் உள்ள அகதிமுகாமுக்குச் சென்ற 4ஆசிரியர்கள் அக்கரைப்பற்று படைமுகாமில் இறக்கப்பட்டனர். இதுவரை அவர்கள் என்னவானார்கள் என்று தெரியவில்லை.

ஒக்டோபர் 12ஆம் திகதி காரைதீவில் வைத்து ஆசிரியர் இராசதுரை படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இந்தச் சம்பவங்கள் எல்லாம் இடம்பெறும் முன் வீரமுனை அகதிமுகாமில் இருந்து மண்டூர் நோக்கிச் சென்றவர்களில் 10 பேரை சவளக்கடை இராணுவத்தினர் கைது செய்து உயிருடன் எரித்த சோகநிகழ்வும் இடம்பெற் றது. இதில் நான்கு பெண்களும் ஆறு ஆண்களும் அடங்கு வர். இதேவேளை மல்லிகைத்தீவுக்கு தமது வீடுகளைப் பார்த்துவிட்டு வருவதாகச் சென்ற 5 பேர் திரும்பவில்லை.

இதேகாலகட்டத்தில் வெளியூர்களில் இருந்து வந்து வீரமுனையில் தஞ்சமடைந்தோரில் 58 பேரும் உள்ளூரைச் சேர்ந்த 47 பேரும் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனார்கள்.

சுமார் ஒரு மாத காலத்தில் மொத்தம் 166 உயிர்கள் பலியாகின. 10 ஆண்டுகள் கடந்த நிலையிலும் கணவனை எதிர்பார்க்கும் விதவைகளும் தந்தையை எதிர்பார்க்கும் பிள்ளைகளும் பிள்ளையை எதிர்பார்க்கும் தாய்மாரும் இன்னும் வீரமுனையில் காணப்படுகின்றனர்.

90 களில் இடம்பெற்ற அராஜகத்தின் போது



அகதிகள் தங்கியிருந்த பாடசாலைக்கட்டடம்

கோயில்கள், பாடசாலைகள், தபால் நிலையங்கள் போன்ற பொது நிறுவனங்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

கொடிக்கம்பம் முதல் விக்கிரகங்கள் வரை கயவர்களால் சூறையாடப்பட்டன.

— மனோ

# வதிவிட ஆக்கிரமிப்பை கண்டித்துத் தீர்மானம்

இன்று நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நாய்களின் கைக்குள் சென்று விட்டது. எங்கு பார்த்தாலும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் சம்பவங்களே இடம் பெறுகின்றன. வீதியில் செல்வோர் சுடப்படுகிறார்கள்.

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எம். அசாத் எஸ் சாலி மாநகர சபைக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு மாநகரசபைக்குச் சொந் தமான மாநகரசபை ஆணையாளரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தை களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆக்கிரமித் துக்கொண்டுள்ளதைக் கண்டித்து மாநகரசபை உறுப்பினர் ருக்ஷன் பெரேரா தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

அந்தத் தீர்மானம் மீது பேசும்போதே அசாத் எஸ் சாலி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

இச்செயல் பொலிசாரும் அரசாங்கமும் நேரடியாக சம்பந்தப்பட்ட ஒரு திட்டமிட்ட செயல். இதுபற்றி கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் முறையிடப்பட்டதாயினும் இக்கட்டடத்தை மீட்டுத்தருவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

நல்லாட்சி தருவதாக வாக்குறுதி யளித்த சந்திரிக்கா குமாரதுங்கவின் ஆட்சியின் பரிதாபநிலை இது.

களனிப் பல்கலைக்கழக மாணவர் களுக்கு போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது உயர் கல்வி அமைச்சர் இந்திக குணவர்த்தனவின் பொறுப்பாகும், இதனைச் செய்யாது, வேறு ஒருவருக்குச் சொந்தமான வதிவிடத்தை அத்துமீறிச் சென்று ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என்று நினைக்கமுடியாது. அவ்வாறான செயல் ஒரு அக்கிரமச் செயலாகும்.

எனவே, மாநகரசபை ஆணையாளரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தை, மீள ஒப்படைக்குமாறு நான் அரசாங் கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். ஆணை யாளரும் கூட அரசாங்கத்தினாலும், ஜனாதிபதியினாலும் நியமிக்கப்பட்டவரே.

ஆணையாளராக கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் தனக்கான வதிவிடத்தை திருத்தியமைத்துக் கொண்டு அதற்குள் வாழலாம் என்று கருதியவரின் முயற்சிகள் பயனற்றுப் போயுள்ளன.

கட்டடத்துக்குள் அத்துமீறிச் சென்ற மாணவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இந்தக் கட்டடத்தை மீளப்பெறுவதற்கு சகல முயற்சியையும் எடுக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

# பதிவாளர் நியமனம் கோரி டக்ளஸிடம் வேண்டுகோள்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் கங்குவேலி போன்ற கிராமங்களை மைய மாகக் கொண்ட புளியடிச்சோலை, மேன்காமம், லிங்கபுரம் ஆகிய தமிழ்க் கிராமங்களை உள்ளடக்கியதாக சுமார் ஆயிரம் குடும்பங்களின் பிறப்பு, இறப்பு விவாகப்பதிவுகளை மேற் கொள்வதற்காக ஒரு பதிவாளர் இல்லை என்பது பெருங்குறையாக உள்ளது.

இங்கு வசிக்கும் மக்கள் தங்கள் தேவை களை நிறைவேற்றும் பொருட்டு சுமார் நான்கு, மைல் தூரத்தில் உள்ள பாரதிபுரம் பதிவாளர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. கடும் சிரமங்களின் மத்தியில் நீண்ட நாட்களாக இந்நிலைமை தொடர்கிறது. இது விடயம் தொடர்பாக கங்குவேலி திருக்கரசையம்பதி விவசாய சம்மேளனம் திருமலை ஈ.பி.டி.பி அலுவலகத்தில் முறையிட்டது.

இக் குறையை நீக்கும் பொருட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு கங்குவேலியை மையமாகக் கொண்ட புதிய பதிவாளர் ஒருவரை நியமிப்பதாக திருமலை மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் த.புஸ்பராசா உறுதியளித்துள்ளார்.

—எஸ்.எஸ்.ஆர்

# தமிழ் இளைஞர்கள் களுத்துறை சிறைக்கு மாற்றம்

கொலை, பாலியல் வல்லுறவு போன்ற பாரதூரமான குற்றங்களை இழைத்த இராணுவத்தினரைப் பாதுகாப்பாகத் தடுத்து வைப்பதற்காக மட்டக்களப்புச் சிறையிலிருந்த முப்பது தமிழ் இளைஞர்களை களுத்துறைச் சிறைக்கு மாற்றியது எந்த வகையில் நியாயம்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன்.

இது தொடர்பாக அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: –

இராணுவத்தினருக்கு இராஜ மரியாதை அளிக்கப் படுவதற்காக தமிழ் இளைஞர்களை அவர்களின் உறவினர்கள் சந்திக்கமுடியாத களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மன அமைதியையும் தற்காலிக நிவாரணங்களையும் அளிக்கக்கூடிய இவர்களின் உறவினர்களின் சந்திப்பு இல்லாமல் நிர்க்கதியாய் உள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து களுத்துறைக்கு தமது பிள்ளைகளைப் பார்க்கச் செல்லும் பெற்றோர் பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் சோதனைக் கெடுபிடிகள் போன்றவற்றுக்கும் முகம் கொடுக்கநேரிடும்.

உறவுகளுடனான சந்திப்பைத் துண்டிக்கும் வகையில் மேற் கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கை தனிமனித அடிப்படை உரிமையைப் புறக்கணிப்பதாகும்.

எனவே தனிமைப்படுத்தப்பட்டுள்ள அந்தத் தமிழ் இளைஞர்களை பார்க்க, அவர்களின் குடும்ப உறவினருக்கு வாய்ப்பையும், சூழ்நிலையையும் வழங்கவேண்டும். (மு)

# அரச நடமாடும் மக்கள் சேவை





கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு கிராமிய வீடமைப்புத்துறை, அமைச்சு; வடக்கு கிழக்கு மாகாணசபையுடன் இணைந்து அரச நடமாடும் மக்கள் சேவை ஒன்றை கல்முனை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடத்தியது.

மக்கள் பிரச்சினைகளை அமைச்சர் பேரியல் அஷ்ரப் ஆராய்ந்து கொண்டிருப்பதையும் இந்தச் சேவையைப் பெறுவதற்கு நீண்ட கியூவில் மக்கள் காத்திருப்பதையும் படங்களில் காணலாம். அமைச்சர் பேரியல் அஷ்ரப்புக்கு அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.ஹனிபா (மருதூர்க்கனி) காணப்படுகிறார்.

படங்கள்: அனார்க்கலி

# டெல்லி பயணம் என்றால் ஜெயாவுக்கு ஜன்னி வருகிறது

கருணாநிதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் விடயத்தில் அவசரப்பட்டு விட்டார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. மத்திய அரசுடன் மோதும் அளவுக்கு அவர் வந்து விட்டார்.

தனிப்பட்ட முறையில் ஜெயலலிதா மத்திய அரசுடன் முகம் கொடுத்துப் பேச முடியாதவராகிவிட்டார். அதேநேரத்தில் சட்டரீதியான முறையில் தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய நிதி உதவிகள் மற்றும் நிவாரணங்கள் ஆகியவற்றையும் அவரால் கேட்டுப் பெறமுடியாமல் இருக்கிறது.

தமிழக அரசுக்கு நிர்வாக ரீதியிலான நேரடி உத்தரவுகளை மத்திய அரசாங்கம் பிறப்பித்துக் கொண்டிருக்கிறது. அந்த உத்தரவுகளை நிறைவேற்ற முடியாதவராக ஜெயலலிதா இருக்கிறார். எனவே அவர் தமது கடமைகளைச் சீரிய முறையில் செய்வதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

கருணாநிதியைக் கைது செய்த விவகாரத்தில் சில பொலிஸ் அதிகாரிகள் அளவு கடந்த அடக்கு முறைத் தனத்துடன் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தண்டிக்கும்படி மத்திய அரசு உத்தரவு பிறப்பித்தது. ஆனால் ஜெயலலிதா அது பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் ஜெயலலிதாவின் உத்தரவின் பேரில்தான் அவர்கள் கருணாநிதி, முரசொலிமாறன், டி.ஆர்.பாலு ஆகியோரைத் தாக்கினார்கள். எய்தவர் இருக்க அம்பை நொந்து என்ன பயன் என்று பொலிஸ் அதிகாரிகளில் ஒரு பகுதியினரே கேட்கிறார்கள்.

ஜெயலலிதாவின் பொலிஸ் படையில் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் முத்துக்கருப்பன். அவரை ஜெயலலிதா பாதுகாத்து வருகிறார். எனவே முத்துக் கருப்பனையும் அவருடைய இரு தளபதிகளையும் மத்திய பொலிஸ் படைக்கு மாற்றுவதற்கு மத்திய அரசாங்கம் உத்தரவிட்டது. மத்திய அரசு அவர்களை இந்தியாவின் அமைதி குலைந்த மாநிலங்களுக்கு அல்லது தண்ணீர் இல்லாத காடுகளுக்கு இடமாற்றம் செய்து தண்டிப்பதற்குத் தீர்மானித்திருக்கிறது என்று தெரிய வருகிறது.

ஜெயலலிதா இது விடயத்திலும் மத்திய அரசுடன் இணங்கிப் போகும் நிலையில் இல்லை. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் சேவை தமிழகத்துக்குத் தேவை. அவர்களை விடுவிக்க முடியாது என்று அறிவித்து விட்டார்.

அத்துடன் இது பற்றி இந்தியாவின் ஏனைய மாநில முதலமைச்சர்களுக்கு முறையிட்டிருக்கிறார். இது விடயத்தில் தமக்கு சார்பாகக் குரல் எழுப்பும்படி அவர்களைக் கேட்டிருக்கிறார். மத்திய அரசுக்கு எதிராக ஒரு எதிர்ப்பு அணியையே ஜெயலலிதா திரட்டுகிறார் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். ஆனால் ஓரிரு முதலமைச்சர்களே ஜெயலலிதாவுக்குச் சார்பாகக் குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

மத்திய அரசுடன் மோதிப்பார்க்கும் நிலையை ஜெயலலிதா ஏற்படுத்திக் கொள்ள நினைப்பது அவருக்கு எவ்விதத்திலும் நன்மையைத் தந்து விடப் போவதில்லை. தமிழக ஆளுநர் பாத்திமா பீபி இன்று சேவையில் இல்லை. அவர் விதித்த ஆறு மாத காலக் கெடுவைப் பூர்த்தி செய்யும் நிலையிலும் ஜெயலலிதா இல்லை.


ஜெயலலிதா

இருப்பினும் தமது ஆட்சிக்காலத்திற்குள் மத்திய அரசுடன் எப்படியாவது இணைந்து போகும் நிலையை அவர் ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்கிறார்.

ஜெயலலிதா அரசை மத்திய அரசு கலைத்தால் அது விடயத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த அவர் முயலுவார். மீண்டும் அனுதாப அலை மூலம் அரசியலில் நிலையான இடத்தைப் பெறத் தமக்கு வாய்ப்பு ஏற்படும் என்று நினைக்கிறார்.

அவ்விதம் இல்லாமல் மத்திய அரசு திட்டமிட்டு காய்களை நகர்த்தி ஆறு மாதங்களுடன் ஜெயலலிதாவை வீட்டுக்கு அனுப்பி விட்டால் என்ன செய்வது?

அ.தி.மு.க நிர்வாகத்தைத் தமது கைக்குள் சுருட்டி வைத்துக் கொண்டு தமது கைப்பொம்மை ஒன்றை முதலமைச்சராக்கி ''ரிமோட் கொண்ட்ரோல்'' மூலம் தமிழகத்தைத் தொடர்ந்து ஆள ஜெயலலிதா முயற்சி செய்வார். லல்லு பிரசாத் யாதவ் பீகாரை அப்படித்தானே தம்வசம் வைத்திருக்கிறார்.

ஜெயலலிதா முதலமைச்சரானதுமே புது டில்லிக்குச் சென்று பிரதமர் வாஜ்பாயை முன்னர் சந்தித்தார். ஒரு மாநிலத்தில் முதலமைச்சராக ஒருவர் பதவியேற்றதும் பிரதமரை உத்தியோக பூர்வமாகச் சந்தித்து மரியாதை தெரிவிப்பது வழக்கம்.

இதன் அடிப்படையிலேயே ஜெயலலிதா பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்தார். ஜெயலலிதாவின் தேர்தல் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டும் அவரை முதலமைச்சராக ஆளுநர் நியமித்தார். அது விடயமாக வாஜ்பாய் தலைமையிலான ஆளுங்கட்சியின் தமிழகப் பிரிவினரே எதிர்ப்புத் தெரிவித்த நேரம் அது. ஆளுநர் பாத்திமா பீபியைப் பதவி நீக்கும்படியும் அவர்கள் வற்புறுத்தினர்.

ஆயினும் பிரதமர் வாஜ்பாய் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பாத்திமா பீபியைத் தண்டிக்கவில்லை. ஜெயலலிதாவையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்று மத்திய மாநில அரசுகளின் நல்லுறவு சிறப்பாக இருக்கவேண்டும் என வாழ்த்தினார்.

ஜெயலலிதாவுக்கு லோக சபையில் 11 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஆதரவை வாஜ்பாய் எதிர்பார்த்திருக்கக் கூடும். எனவே ஜெயலலிதாவுக்கு சாதகமாக எதனையும் செய்யாமல் இருந்தாலும் பாதகமாக எதுவும் செய்துவிடக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

வாஜ்பாயின் இந்த நிலைப்பாட்டினை ஜெயலலிதா தவறாக எடுத்துக் கொண்டு விட்டார் என்று தெரிகிறது. கருணாநிதியின் ஆட்சி கவிழ்ந்து விட்டதனால் தமது குரலே டெல்லியில் தமிழகத்தின் குரலாகப் பலமாக ஒலிக்கும் என்று ஜெயலலிதா எண்ணிவிட்டார். அதன் அடிப்படையில் கருணாநிதியைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினார். அதன் பலனை அனுபவிக்கிறார் இன்று.

இதன் காரணமாக டெல்லி பயணம் என்றாலே ஜன்னி வந்துவிடும் நிலையில் இருக்கிறார் ஜெயலலிதா.

மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்குவது தொடர்பான திட்ட கமிஷன் மாநாடு டெல்லியில் நடந்தது. அந்த மாநாட்டில் கலந்து கொள்ள ஜெயலலிதா முடிவு செய்தார். டெல்லியில் மூன்று தினங்கள் தங்கியிருந்து பிரதமர் வாஜ்பாயையும் முக்கிய அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோரையும் சந்திக்க ஜெயலலிதா ஏற்பாடுகளைச் செய்தார். ஜெயலலிதாவுடன் முக்கிய அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றும் செல்வதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன.


ஜெயலலிதாவின் இந்த டெல்லி விஜயம் தமிழகத்தில் பெரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆயினும் இறுதி நேரத்தில் ஜெயலலிதாவின் பயணம் ரத்து செய்யப்பட்டது. ''திடீர் சுகயீனம் காரணமாக முதலமைச்சர் மருத்துவ சிகிச்சைக்குள்ளானார். டெல்லிக்கு நிதி அமைச்சர் பொன்னையன் பயணமானார்'' என்று செய்தி வெளியானது.

ஆனால் உண்மையில் ஜெயலலிதாவுக்கு புதுடில்லியில் தற்போது சாதகமான சூழ்நிலை இல்லை. மத்திய அரசு அவரை இருகை நீட்டி வரவேற்கப் போவதில்லை. மாறாக மத்திய அரசுடன் மோதல் நிலையை ஏற்படுத்திக் கொண்ட ஜெயலலிதாவுடன் முகம் கொடுத்துப் பேச எவரும் ஆர்வம் காட்டமாட்டார்கள் எனவும் தெரிய வருகிறது.

ஜெயலலிதா தமிழக முதலமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் வாஜ்பாயைச் சந்திக்க உத்தியோக பூர்வ நிகழ்ச்சி ஏதும் இல்லை. தனிப்பட்ட முறையில் சந்திப்பதற்கான கால நேரம் ஒன்றை நிர்ணயித்துக் கொண்டு பிறிதொரு தினத்தில் ஜெயலலிதா புதுடில்லி செல்வார் என்று தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெயலலிதா மிகவும் அவதானமாக நடந்து தமது ஆட்சியைக் காத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார் என்று டெல்லி அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

—கதாசி




## உன் கண்ணில் நீர் வழிந்தால்....

பச்சைக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரின் வீட்டில் அக்கட்சியின் எம்.பிமார் சிலர் அரசுக்கு ஆதரவு தெரிவித்து கூட்டம் நடத்துகின்றனர் என்று தகவல் வெளியாகியது.

இதனை உறுதிப்படுத்திக் கொள்ள பச்சைக் கட்சியுடன் நெருங்கிய தொடர்புள்ள ஒரு தமிழ்க் கட்சியின் தலைவருடன் தொடர்பு கொண்டார் ஒரு பேனாக்காரர்.

அத்தலைவரோ அந்தப் பேனாக்காரரை அரச ஆதரவு எழுத்தாளர் என்று விமர்சித்தாராம். போதாக்குறைக்கு தொலைபேசியில் பச்சைக் கட்சித் தலைவரிடம் இப்படியாக ஒரு செய்தியை எழுதப் போகிறார்கள் என்று துப்பும் கொடுத்தாராம்.

உடன் செயற்பட்ட பச்சைக்கட்சித் தலைவர் ராஜிதமானவர் ஊடாக அந்தப் பேனாக்காரரிடம் கேள்வி எழுப்பினாராம்.

தகவலை உறுதிப்படுத்த முயற்சித்த பேனாக்காரர் ஒருபுறம் இருக்க வேறு ஒரு பேனாக்காரர் தான் பச்சைக் கட்சித் தலைவரிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள நேர்ந்ததாம்.

இந்த விவகாரம் அந்தத் தமிழ் கட்சியின் தலைவருக்கும் செயலருக்குமிடையில் மனக்கசப்பை ஏற்படுத்தியிருக்கிறதாம்.

''எங்கள் கட்சியைப் பற்றி பேனாக்காரர் கேள்வி கேட்கவில்லை. பச்சைக் கட்சியின் தகவலைத் தானே கேட்டார். அப்படயிருக்க நீங்கள் ஏன் துடித்துப் போய் பச்சைக் கட்சியிடம், பேனாக்காரரைக் காட்டிக் கொடுத்தீர்கள்?''

பதிலுக்கு தலைவரும் பதில் சொல்ல இருவருக்கும் இடையில் சிறிது நேரம் வாக்கு வாதம் நடந்ததாம்.

## பொய் ரத்தம்

மக்களின் கருத்தை அறியும் வாக்கெடுப்புக்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டங்களில் அந்த முஸ்லிம் அமைச்சர் அரசுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினார்.

''அதிகார அம்மணி ஒரு போதும் வாக்கெடுப்பை ரத்து செய்யமாட்டார்; பின் போடமாட்டார்'' என்று கூறினாராம். அது மட்டுமன்றி இரத்த சாட்சியாக, இரத்தத்தால் எழுதித் தருவதாகவும் மார்தட்டினாராம்.

அந்தோ பரிதாபம்! அந்த அமைச்சர் அப்படிப் பேசிய இரு நாட்களுக்குள் அதிகார அம்மணி வாக்கெடுப்பை பின்போட்டு விட்டார். தொலைக்காட்சி சேவை ஒன்றும், இவரது பேச்சையும், அம்மணியின் முடிவையும் போட்டுக் காட்டியது.

அம்மணியின் இந்த முடிவால் அமைச்சரானவருக்கு இரத்தக்கொதிப்பு ஏற்பட்டு விட்டதாம். வாக்கெடுப்புக்கு ஆதரவான ஏனைய அமைச்சர்களுடன் அம்மணியின் முடிவையிட்டு விமர்சனமும் செய்தாராம்.

இறுதியில் அம்மணிக்கு அப்படிச் செய்ய அதிகாரம் இருக்கிறதா என்று சட்ட ஆராய்ச்சி நடத்தவும் துணிந்தாராம். சட்டத் தேர்ச்சி பெற்ற இன்னுமொரு அமைச்சர் அவருக்கு விளக்கம் அளித்தும் இன்னும் சந்தேகம் தீரவில்லையாம்.

## கட்சி வேண்டுமா? தலைவர்கள் வேண்டுமா?

அதிகாரத் தரப்பாருக்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஏற்படுத்தப்பட்ட கூட்டுக்குள் இரண்டு தமிழ்க் கட்சிகள் இதுக்கின்றன என்றுதான் பச்சைக் கட்சி சொல்கிறது.

ஆனால், அந்தக் தமிழ்க் கட்சிகளின் ஒரு சில தலைவர்களுடன் தான் பச்சைக் கட்சிக்கு நெருக்கம் தேவையாயிருக்கிறதாம்.

இதனால் என்ன கூட்டம் நடத்தினாலும் என்ன தீர்மானம் எடுப்பதாக இருந்தாலும் அந்த இரு தமிழ்க் கட்சிகளின் இரண்டு முக்கியஸ்தர்களுக்கு மட்டும் தான் அழைப்பு விடுக்கப்படுகிறதாம்.

இத் தமிழ்க் கட்சிகளை பச்சைக் கட்சி ஆதரிக்கிறதா அல்லது அக்கட்சியின் ஒரு சில தலைவர்களை ஆதரிக்கிறதா என்று சூடாகப் பேசுகிறார்கள் தமிழ் முக்கியஸ்தர்கள்.

## அவர் வருவாரா?

அதிகாரத் தரப்பாரை ஆட்டம் காணச் செய்ய எடுக்கப்படும் முயற்சிகளுக்கு மலை நாட்டின் ஒரு கட்சியின் பேராதரவு தேவையாயிருக்கிறதாம்.

அந்தக் கட்சியின் தலைவரைப் பிடிக்க ஆளுக்கொரு பக்கமாக வலை வீசினாலும் அவர் சிக்குவாரா என்பது சந்தேகம்.

எப்படியாவது அந்தக் கட்சியின் தலைவரை இழுத்து எடுக்க மலை நாட்டின் இன்னொரு கட்சியின் தலைவர் முயற்சிகள் செய்தும் பலனளிக்கவில்லையாம்.

கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒரு தமிழ் முன்னணிக் கட்சியின் தலைவர் எழுப்பிய நட்பு ரீதியான கேள்வி ஒன்றின் போது தான் அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தாராம்.

''அவர் மதில் மேல் பூனை போல இருக்கிறார். எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன். எமது பக்கத்துக்கு வருவதாக இல்லை போலத்தான் தெரிகிறது''

முயற்சியில் தோல்வி கண்டவர் இப்படி வருத்தம் தெரிவித்தாராம்.

## போஸ்டர் தலைவர்

தனித்துவக் கட்சியை வெட்டிச் சாய்த்து விடும் அதிகார அம்மணி தரப்பாரின் முயற்சிக்கு அவர் பூரணமான ஆதரவு வழங்குகிறாராம்.

'கிழக்கின் ஒளி' என்று எண்ணித்தான் அந்தப் புள்ளிக்கு அதிகாரத் தரப்பார் அதிகமான ஆதரவு கொடுக்கிறார்களாம்.

அந்த ஆதரவு காரணமாகத் தான் சுவர் முழுவதும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றனவாம்.

இந்தப் போஸ்டர் தலைவர்தான் முந்திய தலைவருக்கு எதிராக நீதிமன்றம் சென்றார். அன்று முக்கிய தலைவரின் அருமை தெரியாதவருக்கு இப்போது மட்டும் அருமை புரிவதுதான் வேடிக்கை என்று அம்மணி தரப்பு அமைச்சர் ஒருவர் கிண்டலடித்து வருகிறாராம்.


வெளிநாட்டில் கல்வி

"இன்றைய கல்வி நாளைய வெற்றி"

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், இத்தாலி, மோல்டா (இத்தாலிக்கு அருகில்) நியூசிலாந்து, சைபிரஸ்

- அனுமதி தகைமை G.C.E. (O/L)
- சாதாரண பாடநெறி கட்டணம்
- மிகக் குறைந்த கட்டணத்தில் தங்குமிடம்
- டிகிரி, டிப்ளோமா, சான்றிதழ் கற்கை நெறிகள்

DOWN PAYMENTS RS.20,000/= ONLY FOR ANY COUNTRY

CAREEM AND COMPANY



1990, இலிருந்து வெளிநாட்டு கல்வி ஆலோசகர்கள்

367,2 ஆம் மாடி, காலி வீதி, மலிபன் சந்தி, இரத்மலானை.

714267, 729276 Fax : 729276

E-mail : cereem@visual.lk

# இலங்கை, இந்திய டெஸ்ட் போட்டிகள்


சனத்

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் சுற்றுப் போட்டி ஆகஸ்ட் 14ஆம் திகதி முதல் நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத் தொடரில் இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் பங்கு பற்றவில்லை.

இலங்கை அணியில் அரவிந்த டி சில்வா நீக்கப் பட்டு ஹசான் திலகரத்ன மீண்டும் சேர்க்கப் பட்டுள்ளார். மைக்கல் வாண்டோட், ரி. சமரவீர ஆகியோர் முதன்முறையாக டெஸ்ட் குழாமில் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீரர்கள் விவரம்:

இலங்கை அணி: சனத் ஜயசூரிய, மார்வன் அத்தபத்து, குமார் சங்ககார, மஹேல ஜயவர்தன, ஹசான் திலகரத்ன, ரஸல் ஆர்னோல்ட், ரொமேஷ் களுவித்தாரன, சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன், சுரேஸ் பெரேரா, அவிஸ்க குணவர்தன, மைக்கல் வாண்டோட், திலான் சமரவீர, துலிப் லியனகே, ருச்சிர பெரேரா, தில்ஹாரா பெர்னாண்டோ,.


கங்குலி

இந்திய அணி: சௌரவ் கங்குலி, சிவ்சுந்தர் தாஸ் சடகோபன் ரமேஸ், ராகுல் திராவிட், ஹேமாங் பதானி, மொஹமட் கைப், தினேஷ் மொங்கியா, சமீர் திகே, ஜவகல் ஸ்ரீநாத், சஹீர் கான், வெங்கடேஸ் பிரசாத், ஹர்பஜன் சிங், ராகுல் சங்வி, சாய்ராஜ் பஹுதலே.

| போட்டி அட்டவணை |
| --- |
| 1ஆவது டெஸ்ட்: ஆகஸ்ட் 14-18 -காலி |
| 2ஆவது டெஸ்ட் :ஆகஸ்ட்22 -26 -கண்டி |
| 3ஆவது டெஸ்ட்: ஆக.29- செப்2 -எஸ்.எஸ்.சி |

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# ஓட்டப் போட்டிக்கு முன்பே ஆட்டம் போட்ட வீரர்கள்

கனடாவின் எட்மன்டன் நகரில் நடைபெற்ற சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கைக்கு எந்தவொரு பதக்கமும் கிடைக்க வில்லை.

ஆனால் இலங்கை வீரர்கள் சிலரது நடவடிக்கையினால் இலங்கைக்குப் பெரும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது.

ரொஹான் பிரதீப் குமார, ரங்க விமலவன்ஸ, சுமேத அருணசாந்த ஆகியோர் மதுவெறியுடன் தங்குமிடத்திற்கு வந்ததாகவும் நள்ளிரவில் அனுமதியின்றி அறையை விட்டு வெளியேறியதாகவும் குற்றம்சுமத்தப்பட்டது. கடந்த 5ஆம் திகதி இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதையடுத்து சுமேத அருணசாந்த விளையாட்டுக் கிராமத்திலிருந்து போட்டி ஏற்பாட்டாளர்களால் வெளியேற்றப்பட்டார். இதனால் அவர் இலங்கை அதிகாரிகளால் ஹோட்டல் அறையொன்றில் தங்கவைக்கப்பட்டார்.

பின்னர் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முயன்றதாகவும் சுமேத குற்றஞ் சாட்டப்பட்டார்.

> "200 நாடுகளிலிருந்து 3000 பேர் பங்குபற்றினர். ஆனால் இலங்கை வீரர்கள் பற்றி மட்டுமே புகார்."
> -கனேடிய பொலிஸார்

இத்தகவல் பாதுகாப்பு அதிகாரிகள் ஊடாக சுசந்திகாவுக்குக் கிடைத்தது.

இத்தகவலை இரகசியமாக பேணும்படி சுசந்திகா கேட்கப்பட்டாராம். எனினும் அதை இலங்கை ஊடகவியலாளர்களிடம் அம்பலப்படுத்தினார் சுசந்திகா.

இதன் பின் மற்றுமொரு பாரதூரமான சம்பவமும் நடந்தது. இலங்கை வீரர்கள் இருவர் நவீன சந்தையொன்றில் பொருட்களைத் திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. சுமேத அருணசாந்த, சம்பத் பிரசன்ன அமரசேகர ஆகியோரே இவர்கள்.

இரகசிய கமராக்கள் இவர்களது நடவடிக்கையை அம்பலமாக்கின. இவ்விருவரும் கனேடிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் இலங்கை குழுவின் முகாமையாளர் பாலித பெர்னாண்டோ இவர்களை மீட்டெடுத்தார்.

சுமேத ஹோட்டலில் தங்கியிருந்தபோது தான் தனிமையில் இருப்பதில் அசௌகரியப்படுவதாகக் கூறினாராம். அவருக்குத் துணையாகவே அமரசேக்கரவும் ஹோட்டலுக்கு அனுப்பப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹோட்டலில் தங்கியிருந்த நாட்களிலேயே திருட்டுச் சம்பவமும் நடைபெற்றது. சுமேத அருணசாந்த, ரங்க விமலவன்ஸ, பிரசன்ன அமரசேகர ஆகியோர் அஞ்சலோட்ட அணி வீரர்களாவர். ஆரம்பச் சுற்றில்கூட பங்குபற்றாத நிலையில் இவர்கள் மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மது வெறியுடன் விளையாட்டுக் கிராமத்திற்கு வந்தனர் எனும் குற்றச்சாட்டை குறிப்பிட்ட வீரர்கள் மூவரும் மறுத்திருந்தனர். தான் மது அருந்தியதை ஒப்புக் கொண்டதாக கூறப்படுவது பொய்யானது என்றார் சுமேத.

"எங்கள் மூவர் மீதும் ஒரே விதமான குற்றச்சாட்டே சுமத்தப்படுகிறது. அப்படியிருக்க சுமேத மாத்திரம் விளையாட்டுக் கிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்டது ஏன்?" இவ்வாறு ரொஹானும் ரங்க விமலசாந்தவும் கேள்வி எழுப்பினர்.

### கடற்படை- இராணுவ மோதல்?

இது ஒரு பழிவாங்கும் நடவடிக்கை எனவும் ரொஹான் கூறினார். "நாம் கடற்படை வீரர்கள். ஆரம்பத்தில் நாம் இராணுவத்தில் இணையுமாறு அழைக்கப்பட்டோம். அதைப் புறக்கணித்து விட்டு நாம் கடற்படையில்இணைந்து கொண்டோம். அதனால் இராணுவத்தைச் சேர்ந்த இலங்கைக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் எம் மீது விரோதம் கொண்டுள்ளார். சுமேதவே நாம் கடற்படையில் இணைவதற்கு காரணகர்த்தாவாக இருந்தார். அதனால் அவர் மீது கடும் விரோதமாக உள்ளார். அதன் விளைவுகளே இவை இது கடற்படை -இராணுவம் சம்பந்தமான மோதலே". இவ்வாறு கூறினார் ரொஹான்.

"இலங்கை அதிகாரிகளில் ஒருவர் எவ்வேளையிலும் மதுபோதை யுடனே காணப்படுகிறார். சில சமயங்களில் அரை நிர்வாணக் கோலத்திலும் அவர் காணப்படுகிறார்." இவ்வாறு எதிர் குற்றச்சாட்டையும் சுமத்தினார் ரொஹான்.

எவ்வாறாயினும் சுமேதவை உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் பி. ராமானுஜம் கட்டளையிட்டார். அமைச்சின் பிரதிநிதியாக விளையாட்டுத் திணைக்களத்தின் இயக்குநர் நாயகம் மில்டன் அமரசிங்கவும் கனடாவிற்குச் சென்றிருந்தார். வீரர் களின் நடத்தை பற்றிய அறிக்கைச் சமர்ப்பிக்குமாறும் அமரசிங்கவிடம் ராமானுஜம் கூறினார்.

சுமேதவை உடனடியாகத் திருப்பி அனுப்பியமைக்கு மற்றொரு காரணமும் உள்ளது. அவரை கனடாவைவிட்டு வெளியேற்றுமாறு அந்நாட்டு அரசாங்கம் கண்டிப்புடன் கூறியிருந்தமையே அக் காரணமாகும்.

"இப்போட்டிகளில் 200 நாடுகளிலிருந்து 3000 போட்டியாளர்கள் பங்குபற்றினர். ஆனால் இலங்கை வீரர்கள் பற்றி மாத்திரமே எமக்குப் புகார் கிடைத்தது." இவ்வாறு கனேடிய பொலிஸார் ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளனர்.

ஒழுங்கீன நடத்தைகளில் ஈடுபட்ட தமது வீரர்களுக்கு எதிராகக் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனம், விளையாட்டுத்துறை அமைச்சு என்பனவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானித் துள்ளன.

குறைந்தபட்சம் ஒருவருட காலத்திற்கு சர்வதேச, உள்ளூர் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இவர்களுக்குத் தடைவிதிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

# பாதை தவறிய சுசந்திகா!

கனடாவில் நடைபெற்ற 8ஆவது சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கையின் எதிர்பார்ப்புகள் கைக்கூடவில்லை.

200 மீற்றர் ஓட்டத்தில் சுசந்திகா பதக்கம் பெறுவார் என வெகுவாக எதிர்பார்க்கப்பட்டது. 200 மீற்றரின் முதலாவது சுற்றில் 7ஆவது வரிசையில் சுசந்திகா ஓடினார். ஆனால் அவர் திடீரென 6ஆவது வரிசைக்கு மாறி ஓடியதால் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். 23.10 செக்கன்களில் அவர் ஓடிமுடித்திருந்தார். மேற்படி தவறு இடம்பெறாதிருந்தால் அவர் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகியிருப்பார்.

200 மீற்றரில் கவனம் செலுத்துவதற்காக அவர் 100 மீற்றர்ஓட்டப்போட்டியிலிருந்து தாமாகவே விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றொரு வீராங்கனையான தமயந்தி தர்ஷா 200, 400 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் அரையிறுதி வரை முன்னேறினார்.


சுசந்திகா

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் சுகத் திலரத்ன அரையிறுதிக்குத் தெரிவானார். 400மீற்றரில் பங்குபற்றிய மற்றொரு இலங்கை வீரரான ரொஹான் பிரதீப் குமார முதல் சுற்றில் தோல்வியுற்றார்.

பெண்களுக்கான 100மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் சிறியானி குலவன்ஸவும் ஆண்களுக்கான 400மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் ஹரிஜன் ரத்னாயக்கவும் முதல் சுற்றிலேயே தோல்வியைத் தழுவினர்.

# எவ்.ஏ. கால் பந்தாட்டத்தில் சோண்டர்ஸ் சாம்பியன்

ஷார்ப் எவ்.ஏ. கிண்ணக் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சோண்டர்ஸ் கழகம் சாம்பியனாகியுள்ளது. இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் இச்சுற்றுப்போட்டி நடத்தப்பட்டது. பிறவுன் அன்ட் கம்பனி லிமிட்டட் இதற்கு அனுசரணை வழங்கியது.

இச்சுற்றுப் போட்டி கடந்த மார்ச் மாதம் ஆரம்பமாகியது. 116 கழகங்கள் இதில் பங்குபற்றின.

அரையிறுதியில் சோண்டர் கழகம் கடந்த வருட சாம்பியனான ரட்ணம் கழகத்தை 3-0 கோல்களால் தோற்கடித்தது. மற்றொரு அரையிறுதியில் களுத்துறை புளூஸ்டார் கழகத்தைத் தோற்கடித்த நீர்கொழும்பு யூத் கழகம் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. நீர்கொழும்பு யூத் கழகம் எவ்.ஏ. கிண்ண இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியமை இதுவே முதல் தடவை.

இறுதிப் போட்டி ஆகஸ்ட் 11ஆம் திகதி மாலை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் மின்னொளியில் நடைபெற்றது.

"நாமே கிண்ணத்தைக் கைப்பற்றுவோம்." இவ்வாறு இரு கழகங்களும் இறுதிப் போட்டிக்கு முன்னர் சூளுரைத்திருந்தன.

இவ்வருட ஆரம்பத்தில் நடைபெற்ற பிரிமீயர் லீக் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் இவ்விரு கழகங்களுமே பங்கு பற்றின. இதில் சோண்டர்ஸ் ஒரேயொரு கோலால் வெற்றி பெற்றிருந்தது. எனவே எவ்.ஏ. கிண்ண இறுதிப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப் பட்டது.

ஆனால் இவ்விறுதிப் போட்டி ஒருபக்கச் சார்பாகவே அமைந்தது. சோண்டர்ஸ் கழகத்திற்கு நீர்கொழும்பு யூத் கழகம் எதிர்பார்த்தளவு சவாலாக விளங்கவில்லை.

போட்டியின் 5ஆவது நிமிடமே சோண்டர்ஸ் தனது முதலாவது கோலை அடித்தது. அணித் தலைவர் இசுரு பெரேரா அடித்த 'கோணர் கிக்' ஒன்றை லாவகமாக 'கோல்' ஆக்கினார் முன்வரிசை வீரர் ரஃபீக் ஜமால்டீன். இடைவேளைக்கு ஒரு நிமிடம் முன்னதாக சோண்டர்ஸின் இரண்டாவது கோலை சஞ்சீவ குமார அடித்தார். இடைவேளையின் பின் நீர்கொழும்பு யூத் உத்வேகத்துடன் விளையாட ஆரம்பித்தது. எனினும் சில நிமிடங்களில் சோண்டர்ஸின் மற்றொரு கோலையும் சஞ்சீவ புகுத்தினார்.


வெற்றிக்கிண்ணத்துடன் சோண்டர்ஸ் கழகத்தின் அணித்தலைவர் இசுரு பெரேரா, கால்பந்தாட்டச் சம்மேளனத் தலைவர் போதிலியனகே, பிறவுன் அன்ட் கம்பனி நிறுவனத் தலைவர் கிருஷாந்த குரே ஆகியோர்.

3-0 கோல்கள் பின்னடைவில் நீர்கொழும்பு யூத் வீரர்கள் சோர்ந்திருந்த வேளையில் மஞ்சுள சிறிசேன சோண்டர்ஸ் கழகத்தின் நான்காவது கோலை அடித்தார். முடிவில் சோண்டர்ஸ் கழகத்திற்கு 4-0 கோல் விகிதத்தில் வெற்றி கிடைத்தது.

கடந்த 15 வருடங்களில் சோண்டர்ஸ் கழகம் எவ்.ஏ. கிண்ணச் சுற்றுப் போட்டியில் சாம்பியனாவது இது 5ஆவது தடவையாகும். அவ்வணிக்கு வெற்றிக் கிண்ணமும் 250,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது. இலங்கை எவ்.ஏ. கிண்ண வரலாற்றில் சாம்பியன் அணிக்கு வழங்கப்பட்ட ஆகக் கூடுதலான பரிசுத்தொகை இதுவாகும்.



அதிதிகள் சகிதம் சோண்டர்ஸ் குழுவினர்

நீர்கொழும்பு யூத் அணிக்கு 100,000 ரூபா வழங்கப்பட்டது. பிறவுன் அன்ட் கம்பனியின் தலைவர் கிருஷாந்த குரே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். இறுதிப் போட்டியில் ஏ.எம். யாப்பா மத்தியஸ்தராகக் கடமைபுரிந்தார்.

# மில்லியன் டொலர் உதவி

நெதர்லாந்து, நமீபியா, கனடா, கென்யா ஆகிய நாடுகளுக்கு 10 லட்சம் டொலர் நிதியுதவி வழங்கப்படும். இவ்வாறு சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) உறுதியளித்துள்ளது.

2003ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தயாராகுவதற்காகவே ஐ.சி.சி இந்நாடுகளுக்கு உதவவுள்ளது.

ஐ.சி.சியின் அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக இந்த நிதி வழங்கப்படும். சுற்றுப் போட்டிகளையும் சுற்றுலாக்களையும் மேற்கொள்ளல், தரமான பயிற்சிகள் வழங்கல், உயர்தரமான ஆலோசகர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் என்பனவற்றுக்கு இந்நிதியைப் பயன்படுத்தலாம் என ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற ஐ.சி.சி கிண்ணப் போட்டிகளில் நெதர்லாந்து, நமீபியா, கனடா ஆகியன முதல் 3 இடங்களைப் பெற்றதன் மூலம் 2003ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றன.

இச்சுற்றுப்போட்டியில் கென்யா பங்குபற்றவில்லை. எனினும் சர்வதேச ஒருநாள் போட்டி அந்தஸ்தை ஏற்கெனவே பெற்றுள்ளதால் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியை கென்ய அணி பெற்றுள்ளது.

# சிங்கப்பூர் பயணம்

சிங்கப்பூரின் 63 ஆவது பகிரங்க மெய்வல்லுநர் போட்டிகள் ஆகஸ்ட் 17,18,19ஆம் திகதிகளில் நடைபெறுகின்றன.

இப்போட்டிகளில் மத்தியஸ்தம் வகிப்பதற்காக இலங்கையிலிருந்து 4 மத்தியஸ்தர்கள் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளனர்.

கே.பி.ஞானபால, ஏ.எஸ்.குணரட்ணம், ஏ.எஸ்.பி.சந்திரசேகர, காமினிசில்வா, ஆகியோரே இம்மத்தியஸ்தர்களாவர்.

அடுத்த வருடம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் மத்தியஸ்தம் வகிப்பதற்கான அனுபவத்தைப் பெறும் நோக்குடன் இவர்கள் சிங்கப்பூருக்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

இக்குழுவின் ஒரேயொரு தமிழ்பேசும் உறுப்பினராக ஏ.எஸ்.குணரட்ணம் விளங்குகிறார். வடகிழக்கு மாகாண முன்னாள் விளையாட்டுத் துறைப் பணிப்பாளரான இவர் தற்போது இளைஞர் சேவை இணைப்பதிகாரியாக பணியாற்றுகிறார்.

சர்வதேச தகுதிபெற்ற மெய்வல்லுநர் மத்தியஸ்தரான இவர் 1997இல் இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டு விழாவிலும் மத்தியஸ்தம் வகித்துள்ளார்.

குணரட்ணம் ஒரு முன்னாள் சர்வதேச கால்பந்தாட்ட மத்தியஸ்தரும் ஆவார். இலங்கையில் மெய்வல்லுநர், கால்பந்ததாட்டம் ஆகிய இரு விளையாட்டுகளிலும் சர்வதேச தரமுடைய ஒரே தமிழ் பேசும் மத்தியஸ்தர் இவரே.

1970-85 வரை அனுராதபுரம் கால்பந்தாட்ட லீக்கின் செயலாளராகவும் இவர் பதவி வகித்தார். இம்மாவட்ட லீக்கின் செயலாளராக விளங்கிய ஒரே தமிழர் ஏ.எஸ். குணரட்ணம் என்பது குறிப்பிடத்தக்கது.


ஏ.எஸ். குணரட்ணம்

இலங்கையைச் சேர்ந்த ஏழு போட்டியாளர்களும் சிங்கப்பூர் மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். அவர்களது பெயர்களும் பங்குபற்றும் நிகழ்ச்சிகளினதும் விவரம்:-

எம்.ஐ.சி.ஐ. விஜயகோன்- 1500மீ., ரவீந்திரகுமார -100மீ, 200மீ, எம். ஆர். பண்டார -800 மீ., மங்களா பிரியதர்ஷினி -800மீ, உதேனி காஞ்சனமாலா -1500மீ, நயன்திகுமாரி -நீளம் பாய்தல், ஆன் சில்வா -ஈட்டி எறிதல்.

ஜி.எல்.எஸ். ஜயலால் இலங்கைப் போட்டியாளர்களின் பயிற்றுநராகவும் முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

# அகதி வாழ்வில் இப்படியும் அவலம்

## படிக்கும் வயதில் போத்தல் வியாபாரம்

போர் அனர்த்தங்களினால் நாட்டில் பல்லாயிரக் கணக்கானவர்கள் அகதி முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் பரிதவிக்கும் அவலம் தொடர்கிறது.

போர் அனர்த்தங்களினால் சீரழிந்து போகும்



தம்பியை போத்தல் பை தாங்கிய சைக்கிளில் ஏற்றித் தள்ளிச் செல்லும் அக்கா.

நிலைக்குத் தள்ளப்பட்டவர்களில் தமிழ் சிறார்களே பெருமளவில் இருக்கிறார்கள்.

அவர்கள் உண்பதற்கு சத்தான உணவில்லை. உடுப்பதற்கு சீரான உடைகள் இல்லை. சுகாதாரமான சூழ்நிலையில் தூங்கி எழும் வசதிகள் இல்லை.

ஒரு குறுகிய இடவசதி கொண்ட குடிசைக்குள் அளவுக்கு அதிகமானவர்கள் முடங்கிப் போய் படுத்து எழும்புகிறார்கள். இதனால் சுகாதாரம் கெடுகிறது. பாலகர்களுக்கு பாலியல் ரீதியான கெடுதிகள் ஏற்படுகின்றன. இளம் பெண்கள் வாழ்க்கையில் கெட்டுப் போகும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்று சமூகவியலாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஏழு, எட்டு வயதை அடைந்த சிறுவர்களும் கூலிவேலை செய்து பிழைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தினால் சட்டம் தண்டிக்கும் எனப்பயந்து சில கடைக்காரர்கள் அவர்களை அண்டுவதில்லை. இதன் காரணமாக சிறுவர்கள் வீதிகளில் அலைந்து திரிந்து வெற்றுப் போத்தல்கள், தகரப் பெட்டிகள் ஆகியவற்றைப் பொறுக்குகிறார்கள். அவற்றை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணமே அவர்களின் பசியைப் போக்குகிறது.

போரின் காரணமாக இடம் பெயர்ந்து வவுனியாவிலுள்ள 15 நலன்புரிநிலையங்களில் 20 ஆயிரம் அகதிகள் வாழ்கிறார்கள். அவர்களில் 12 வயதிற்கு கீழ்ப்பட்ட சிறார்கள் 4971 பேர் ஆவர். 12 வயதிற்கு மேற்பட்ட சிறார்கள் 7373 பேர்.

இளம் பராயத்தினர் எனக் கருதப்படும் இந்த 12 ஆயிரத்து 344 பேரும் தங்களுடைய எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ளும் நிலை வெகு அபூர்வமே என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஒவ்வொரு குடும்பமும் 10 அடி நீளம், 10 அடி அகலம் கொண்ட ஒரு பிளாஸ்டிக் அறைக்குள் நெருக்கமாக வாழ வேண்டிய நிலை. இதனால் சிறுமிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. பாலியல் ரீதியிலான தாக்கம் அதிகம் உண்டு. அத்துடன் ஏழு வயதுச் சிறுமியை ஒரு கிழவன் கெடுத்த சம்பவம், தனது மகளையே ஒரு கொடியவன் கெடுத்த சம்பவம் என பாலியல் வன்முறைகளும் அதிகரித்திருக்கின்றன.


நலன்புரி நிலையங்களில் வாழும் சிறார்களில் அதிகமானவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. பெற்றோர் அவர்களை ஊக்கப்படுத்தி அனுப்புவதில்லை. இதனால் கல்வியறிவற்ற சமுதாயம் ஒன்று அங்கு உருவாகிறது.

சிறார்கள் வீதிகளில் அலைந்து திரிந்து போத்தல்களை சேகரிப்பது முக்கிய பணியாக இருக்கிறது. கடைகளில் சில சிறுவர்கள் தொழில் புரிகிறார்கள். அவர்களுக்கு 13 வயது கூட இருக்காது. ஆனால் எவராவது கேட்டால் தமக்கு 16 வயது என்று கூறுகிறார்கள்.

16 வயதுக்குட்பட்டவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது என்ற சட்ட விதியைக் காட்டியாவது அவர்களைக் காப்பாற்ற எவரும் முன் வருவதில்லை. அந்த அக்கறை பெற்றோருக்கும் இல்லை.

சிங்கள பாடசாலைகளில் இருக்கும் வசதி தமிழ்ப் பாடசாலைகளில் கிடையாது. சிங்கள பாடசாலைகளில் 21 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியில் கல்வி போதனை நடைபெறுகிறது. ஆனால் தமிழ்ப் பாடசாலைகளிலே 60 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வசதிகூட இல்லை.

இராணுவத்தினர் விலகிச் சென்ற இடங்களில் சிறுவர்கள் கண்டபடி அலைந்து திரிகிறார்கள். அவர்கள் வெற்று வெடி மருந்து பொருள்களைப் பொறுக்கி பெரும் விபத்துகளுக்குள்ளாகுவது அதிகரித்திருக்கிறது. இக்காரணமாக உடல் அவயங்களை இழந்த வன்னிப் பகுதி சிறார்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தைத் தாண்டியிருக்கிறது.



இன்று வீதியில் சேகரித்த போத்தல்கள் வியாபாரத்துக்குப் போதுமா?

பெற்றோர் வன்னிப் பகுதிக்குச் சென்று விட்டதால் வவுனியாவில் அநாதை நிலையங்களில் தங்கியிருக்கும் சிறார்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. இருவருடங்களுக்கு மேல் பெற்றோரைப் பிரிந்திருக்கும் சிறார்களும் இருக்கிறார்கள். அவர்களின் எதிர்காலம் என்ன என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது.

— மகாமுனி

# சமாதானத் தீர்வையே இந்தியா தொடர்ந்து வலியுறுத்துகிறது

## வெளிவிவகார செயலாளர் கூறுகிறார்



செய்தியாளர் மாநாட்டில் இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணாகாந்தி வெளி விவகார செயலாளர் சோகிலா ஐயர், பிரதித் தூதுவர் எஸ்.திருப்பாதி.

இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இலங்கையின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு என்பனவற்றைப் பாதுகாப்பதில் இந்தியா தொடர்ந்து உறுதியுடன் செயற்படும்.

இப்படித் தெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீமதி சோகிலா ஐயர்.

சார்க் நாடுகளின் வெளிவிவகார செயலர்கள் மட்டத்திலான பேச்சுக்கள் கடந்த வாரம் கொழும்பில் இடம் பெற்றன.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் பல்வேறு கேள்விகளுக்கும் சோகிலா ஐயர் பதிலளித்தார்.

கட்டுநாயக்க மீதான புலிகளின் தாக்குதலை அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் கண்டித்திருந்த போதும் இந்தியா கண்டனம் தெரிவிக்காததன் காரணம் உட்பட பல கேள்விகள் அவரிடம் கேட்கப்பட்டன.

இவற்றுக்குப் பதிலளிக்குமுகமாக சோகிலா ஐயர் தெரிவித்ததாவது:—

இந்தியா என்றுமே வன்முறைக்கும், பயங்கரவாதத்துக்கும் எதிரான நிலைப்பாட்டையே தொடர்ந்து கடைப்பிடித்துவருகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு சமாதானப் பேச்சுக்கள் மூலம் எட்டப்படுவதையே இந்தியா விரும்புகிறது.

இது விடயத்தில் நோர்வே அரசின் அனுசரணை முயற்சிக்கு இந்தியா தனது பூரண ஆதரவை வழங்கும். கடந்த காலங்களிலும் இந்தியா இது தொடர்பாகத் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், வெளிவிவகார அமைச்சின் செயலர் ஜி.விஜயசிறி ஆகியோரைச் சந்தித்த சோகிலா ஐயர் அரசியல் தீர்வு ஒன்றுக்கு முன்னுரிமை கொடுத்து இனப் பிரச்சினைக்கு முடிவு காணும்படி கேட்டுக் கொண்டார்.

— ஆதித்யன்














இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை டொரக்டும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 ஓகஸ்ட் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.